www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1-31 ஆக. — 1-15 செப்' 91 6/18-20 விலை ரூ.2.50

எஜமானன் ராஜீவை இழந்துவிட்ட சி.பி.ஐ. வெறிகொண்டு குரைப்பது வியப்புக்கு உரியதல்ல!



## சி.பி.ஐ.யின் தகிடுதத்தங்கள்!

படிப்பகம்

www.padippakam.com

# அடக்குமுறைக்கு அஞ்சாமல் தொடரும் மாணவர் போராட்டம்

மன்னார் குடி - திருமக் கோட்டை சாலையில் உள்ள இராசகோபால சாமி அரசினர் கலைக்கல்லூரி 22 ஆண்டுகட்கு முன்பு தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில் வேதாரண்யம், திருவாரூர், பட்டுக்கோட்டை, நன்னிலம், திருத்துறைப்பூண்டி போன்ற தொலைதூரங்களில் இருந்து நூற்றுக்கணக்கான ஏழை எளிய மாணவர்கள் வந்து பயில்கின்றனர். இவர்கள் தினந்தோறும் ரூ.10/-க்கு மேல் பேருந்து கட்டணம் கொடுத்து வந்து செல்ல முடியாத வறுமை நிலையில் அல்லல் படுகின்றனர். இதனால் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு சென்ற மாணவர்களும் ஏராளம். எனவே மாணவர்கள் விடுதிகோரி ஆண்டுதோறும் பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். இருந்தும் இதுவரை எவ்வித பயனுமில்லாததால் 18.7.91 அன்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

89-ம் ஆண்டில் இதே கோரிக்கைக்காக மாணவர்கள் போராடிய பொழுது ஆட்சியிலிருந்த தி.மு.க. போராட்டத்தை எதிர்த்தது; அதிகார வர்க்கக் கும்பலை ஏவி போராட்டத்தை ஒடுக்கியது. அன்று எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க. வினர் போராட்டத்தை ஆதரித்தனர். தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு நிலைமை மாறியது. மாணவர்கள் போராட்டத்தை அ.தி.மு.க.வினர் எதிர்த்தனர். தி.மு.க.வினரோ வலிய வந்து போராட்டத்தை ஆதரித்தனர். இன்று அ.தி.மு.க.வோ போலீசையும் அதிகாரிகளையும் ஏவி போராட்டத்தை ஒடுக்குகிறது. இதுவன்றி ஓட்டுப் பொறுக்கிகளும் அதிகாரிகளும் மாணவர்களை சாதி ரீதியாக (SC - BC என்று) பகைமையைத் தூண்டி விட்டு பிரித்து வைத்துள்ளனர். எனினும் இக்கும்பலின் துரோகங்களை புரிந்து கொண்ட பல தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பத்து மாணவர்கள் வருவாய்கோட்ட அலுவலகம் முன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துவிட்டு 18.7.91 அன்று அதற்குரிய தயாரிப்பு செய்தனர். அப்பொழுது மன்னார்குடி எஸ்.ஐ. முத்துசாமி வந்து அனுமதி இல்லையென கூறி போராட்ட பந்தலை போடவிடாமல் தடுத்தார். மாணவர்கள் உறுதியோடு தடையை மீறி போராட்டம் நடத்துவோம் என அறிவித்ததும் விழிபிதுங்கி போய் திரும்பினார். பின்னர் ஆர்.டி.ஓ. குருநாதனை சந்தித்து பேசிவிட்டு வந்து மாணவர்களிடம் "அனுமதி தருகிறேன்; நீங்கள் எல்லாம் பட்டினி கிடந்து சாவுங்க, அப்பத்தான் இந்த காலேஜ் உருப்படும்" என திமிரோடு கூறினார்.

19.1.91 அன்று மாணவர்கள் சோர்வுற்று விழத் தொடங்கியதும் ஆர்.டி.ஓ.வும் போலீசும், அரண்டு போய் தமது பரிவாரங்களுடன் மருத்துவருடனும் ஓடி வந்தனர். மாணவர்கள், "விடுதி கிடைப்பதற்கான உத்தரவை எழுத்து மூலம் வழங்கிவிட்டு பிறகு எங்களை தொடுங்கள்" எனக் கூறி மருத்துவர் தங்களை பரிசோதிக்க விடாமல் தடுத்தனர். இதை பொறுக்க முடியாத ஆர்.டி.ஓ. குருநாதன், "இப்போது பரிசோதனை வேண்டாமென கூறிவிட்டு பிறகு என்னிடம் வந்து சுரம் வந்துவிட்டது, மயக்கம் வந்துவிட்டது, வெட்டு வந்துவிட்டது என்று கூறினால் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன்" என மிரட்டிப் பார்த்தார். மாணவர்கள் "உங்கள் கடைக்கண் பார்வைக்காக ஏங்கி நாங்கள் போராடவில்லை" என்று கூறியதும் மூக்குடைபட்டுத் திரும்பினார் குருநாதன்.

பின்னர் அனைத்துக் கட்சிகள் மூலமும், "ஜாக்டீ" போன்ற கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் மூலமும் மாணவர்கள் போராட்டத்தை கைவிடும்படி கோரி தூது அனுப்பினார் ஆர்.டி.ஓ. மாணவர்கள் உறுதியுடன் மறுத்துவிடவே இரவு போலீசு வந்து மயங்கி கிடந்த மாணவர்களை கைது செய்து லாரியில் போட்டுக் கொண்டு போனது. மாணவர்களை நேராக மாஜிஸ்திரேட் வீட்டிற்கு கொண்டு சென்று தற்கொலை முயற்சிக்கான 303, 309 பிரிவுகளின் கீழ் ரிமாண்ட் வாங்கிக் கொண்டு நிதானமிழந்த மாணவர்களின் கையில் வெற்றுத்தாளில் ரேகையை மட்டும் உருட்டிக் கொண்டு பின் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தது.

இம்மாணவர்களின் கோரிக்கையை ஆதரித்து கல்லூரியின் மற்ற மாணவர்களும், பின்லே மற்றும் தேசிய மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் 19.7.91 அன்று பேரணி ஒன்று நடத்தினர். தூயவளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே பேரணி வந்து கொண்டிருந்த பொழுது போலீசு கண்மூடித்தனமாக - காட்டுமிராண்டித் தனமாக தாக்குதல் நடத்தியது. இதில் பின்லே பள்ளி மாணவர் ஒருவர் மண்டை உடைந்து 3 நாளுக்குப்பின் சிகிச்சை முடிந்துவீடு திரும்பிய அம்மாணவர்மீது பொய் வழக்கு போட்டு கைது செய்து கொண்டு போனது போலீசு. கொதித்தெழுந்த மாணவர்கள் போலீசுக்கு எதிராக கண்டனப் பேரணி ஒன்றை 25.7.91 அன்று நடத்த தீர்மானித்து அதற்கான தயாரிப்பில் ஈடுபட்டனர்.



போலீசும், ஆர்.டி.ஓ. கும்பலும் இப்பேரணியை தடுக்க துரித கதியில் களத்தில் குதித்தது. சுற்று வட்டாரத்திலுள்ள அச்சகத்தாரை எல்லாம் மாணவர்கள் போராட்டம் தொடர்பாக எதுவும் அச்சடிக்கக் கூடாது என மிரட்டி வைத்தது. இதனால் மாணவர்கள், பேரணிக்கான சுவரொட்டியை கையெழுத்து மூலம் தயாரித்து ஒட்டினர். மாணவர்களின் போராட்டம் தீவிரமடையாமல் தடுக்கும் பொருட்டும், மக்கள் பிரச்சினையாகவும் பரவிவிடாமல் தடுக்க பொருட்டும் பின்லே, தேசிய மற்றும் தூயவளனார் (பெண்கள்) மேல்நிலைப் பள்ளிகளுக்கு அவசர அவசரமாக 25 முதல் 28ந் தேதி வரை பள்ளியை மூடுமாறு உத்திரவு போட்டது அதிகார வர்க்கம். இதுவல்லாமல் எஸ்.ஐ. முத்துச்சாமி தலைமையில் போலீசு கும்பல பள்ளிகளைச் சுற்றி நின்றுகொண்டு பள்ளிக்கு வரும் மாணவர்களையெல்லாம் தடுத்து மிரட்டி விரட்டியது. பள்ளிகளுக்கு பலத்த பாதுகாப்பு என்ற பெயரில் இப்படி செய்வதோடு தேடுதல் என்ற பெயரில் மாணவர்கள் தங்கியிருக்கும் அறைகளில் புகுந்து அட்டகாசம் செய்வதும், மாணவர்களை தனித்தனியாக மிரட்டியும் வருகிறது போலீசு.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் மன்னார்குடி கிளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர். இம்மாணவர்களை விடுதலை செய்யக் கோரியும், மாணவர்களின் கோரிக்கையை ஆதரித்தும் போலீசின் அடக்குமுறையைக் கண்டித்தும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (RSYF) சுவரொட்டி இயக்கம் மேற்கொண்டது. RSYF, உறுதியுடன் போராடும் மாணவர்களின் நெஞ்சுரத்தைப் பாராட்டி தொடர்ந்து ஆதரவு நல்கி வருகிறது. போராடும் மாணவர்கள் பிரச்சினையை மக்கள் மத்தியிலும் ஜனநாயக அமைப்புகள் மத்தியிலும் கொண்டு சென்று ஆதரவு திரட்டி போராட்டத்தை முன்னெடுப்பதும், தம்மிடையே ஒரு புரட்சிகர அமைப்பை உருவாக்கி செயல்படுவதும் அவசியம்.

அண்மையில் கோவை விவசாய கல்லூரி மாணவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து முதல்வரை சந்திக்க நடைபயணம் தொடங்கியபோது முதல்வர் திடலடி நடவடிக்கை எடுத்து பிரச்சினையை தீர்த்து வைத்ததாக தம்பட்டமடித்தார்கள் ஆட்சியாளர்கள். அவர்கள் மூஞ்சியில் கரிபூசுகிறது மேற்கண்ட சம்பவம்!



படிப்பகம்

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

**ஆறாம் ஆண்டு**

**18 - 20**

**1-31 ஆகஸ்டு '91**
**1-15 செப் '91**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ.2.50**
**ஆண்டு சந்தா : ரூ.60**

**வெளிநாடுகள்**
(வான் அஞ்சலில்)
**ஆண்டு சந்தா:** US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்:

இரா.சண்முகராசு
ஆசிரியர், புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


### சோவியத் ஒன்றியத்தில்

# அரண்மனைப் புரட்சி தோற்றது! நெருக்கடிகள் தீர்ந்தனவா?

**சோ**வியத் ஒன்றியத்தில் நடந்த அரண்மனை அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி மூன்று நாட்களுக்குள் பிசுபிசுத்து தோற்றுப் போய்விட்டது. மீண்டும் கோர்பச்சேவ் தலைமையிலான ஆட்சி அதிகாரம் நிறுவப்பட்டுள்ளது. ஒன்றியத் துணை அதிபர் யானயேவ், இராணுவ மந்திரி, போலீசு மந்திரி, உளவு நிறுவனமான கே.ஜி.பி. தலைவர் உட்பட எட்டுப்பேர் அடங்கிய கும்பல் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டது. கடுமையான நெருக்கடி, குழப்பம், அராஜகம், இனப் பகை, உள்நாட்டுப் போர் ஆகியவற்றில் இருந்து சோவியத் மக்களின் நலன்களையும், ஒன்றியத்தின் சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாட்டையும் காப்பதற்காகவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அதிகாரத்தை மேற்கொள்வதாக அந்த எட்டுப்பேர் கும்பல் அறிவித்தது. மக்கள் செய்தித் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றி, அவசர நிலை அதிகாரத்தை மேற்கொண்டு, எல்லா அரசியல், பொருளாதார உரிமைகளுக்கும் தடை விதித்தது. கோர்பியைக் கைது செய்து, இராணுவத்தை ஏவி அதிகாரத்தை நிறுவுவதில் இறங்கியது.

ஆனால், சோவியத் 'கம்யூனிஸ்ட்' கட்சி, இராணுவம், போலீசு - உளவுப்படை ஆகியவற்றிலேயே பிளவு ஏற்பட்டு, அவற்றின் ஆதரவு இன்றியும், பெரும்பான்மையான இனக் குடியரசுகள், மற்றும் ஏகாதிபத்தியங்களின் எதிர்ப்பின் காரணமாக ருசியக் குடியரசு அதிபர் யேல்ட்சின் தலைமையிலான பதிலடியின் காரணமாக எட்டுப் பேர் கும்பலின் அரண்மனைப் புரட்சி தோல்வி அடைந்தது. எட்டுப்பேர் கும்பலில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். எஞ்சிய எழு பேரோடு இந்த ஆட்சிக் கவிழ்ப்பு சதியின் மூளை எனப்படும் சோவியத் நாடாளுமன்றத் தலைவரும் கைது செய்யப்பட்டு, விசாரித்து தண்டிக்கப்பட உள்ளனர். சோவியத் ஒன்றியத்தில் நடந்த இந்த மூன்று நாள் சம்பவங்கள் கோர்பி, யேல்ட்சின் ஆகிய இப்போதைய ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் கூட்டாளிகளான பிற ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அதிர்ச்சியை அளித்தன. இருந்த போதும் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை முறியடித்ததன் மூலம் ஏற்கனவே அவர்கள் ஏற்படுத்த விழைந்த அரசியல், பொருளாதார மாற்றங்களுக்கான தடைகள் முற்றாக அகற்றப்பட்டதாக இப்போது குதூகளிக்கிறார்கள்.

அதே சமயம் உலகச் செய்தி நிறுவனங்கள், பத்திரிக்கை - வானொலி - வானொளி போன்ற மக்கள் திரள் செய்தித் தொடர்புப் பிரச்சார சாதனங்கள் ஆகியவற்றில் ஏகபோக ஆதிக்கம் வகிக்கும் ஏகாதிபத்தியங்கள் சோவியத் ஒன்றியச் சம்பவங்கள் பற்றிப் பல பொய்யான செய்திகளைப் பரப்புகின்றன. ''சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலினும் அவரது வாரிசுகளும் கட்டியமைத்த கம்யூனிச - சோசலிச அமைப்புதான் இப்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணம்; கோர்பச்சேவ் சோவியத் சமூக - அரசியல் அமைப்பை ஜனநாயகப்படுத்தி, பொருளாதார அமைப்பை சீர்திருத்தி அமைக்கவும் முயன்றார்; அதை எதிர்த்து முறியடிப்பதற்காக ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டவர்கள் பழைமைவாத மார்க்சியக் கடுங் கோட்பாட்டுவாதிகள், ஸ்டாலினிஸ்டுகள்'' என்று பிரச்சாரம் செய்கிறார்கள். உண்மையில் இது ஸ்டாலினையும் மார்க்சிய -லெனினிய சித்தாந்தத்தையும் இழிவுபடுத்தி, சர்வதேசப் புரட்சிகர இயக்கத்தை பலவீனப்படுத்தும் அவதூறாகும்.

இப்போதைய சோவியத் ஆட்சியாளர்கள் கோர்பி, யேல்ட்சினின் முன்னோடி குருச்சேவ்; இந்த ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட கும்பலின் முன்னோடியும் குருவும் பிரஷ்நேவ். 35 ஆண்டுகளுக்கு முன்பே ஸ்டாலினது மறைவைத் தொடர்ந்து, பல ஆயிரம் கம்யூனிஸ்டுகளைக் கைது செய்தும் கொன்றும் இந்த குருச்சேவ் - பிரஷ்நேவ் கும்பல் சோவியத் ஒன்றியத்தின் கட்சி மற்றும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. பின்னர் நடந்த அதிகாரப் போட்டியில்தான் குருச்சேவைத் தூக்கி எறிந்து பிரஷ்நேவ் கும்பல் தனது ஏகபோக அதிகாரத்தை நிறுவியது. ஸ்டாலினது ஆட்சிக் காலத்தில் உணவு, உடை, வீடு போன்ற அத்தியாவசியத் தேவைகள் நிறைந்திருந்தன; விலைவாசி உயர்வோ, வேலையில்லாத் திண்டாட்டமோ, கலாச்சாரச் சீரழிவுகளோ கிடையாது. தொழில், விவசாயம் சமதர்ம சமூக அமைப்பு ஆகியவற்றில் உலகே வியந்து போற்றிய முன்னோடியாக சோவியத் ஒன்றியம் விளங்கியது. அதுதான் இரண்டாம் உலகப் போரைத் தொடுத்த நாஜி பாசிச படைகளை முறியடித்து பேரழிவில் இருந்து உலகைக் காத்தது.

குருச்சேவ் - பிரஷ்நேவ் கும்பலோ மார்க்சிய - லெனினியத்தைக் கைவிட்டு, ஸ்டாலின் சம்பந்தப்பட்ட அனைத்தையும் அழித்து, சோசலிச அமைப்பை நாசம் செய்து விட்டது. உள்நாட்டில் அதிகார வர்க்க முதலாளித்துவச் சுரண்டலையும் பாசிச ஒடுக்குமுறையையும் நிறுவியது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் தெற்கு ஏமன், எத்தியோப்பியா, ஆஃப்கான் எனச் சில நாடுகளில் அரண்மனைப் புரட்சிகள் நடத்தி அவற்றையும் தனது தொங்கு சதை நாடுகளாக மாற்றியது. சோவியத் ஒன்றியத்தை சமூக ஏகாதிபத்தியமாகவும், மேல்நிலை வல்லரசாகவும் மாற்றி அமெரிக்காவுடனான உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இறங்கி ஆயுதக் குவிப்பிலும் யுத்த தயாரிப்பிலும் இறங்கியது. இதனால் தான் அந்நாடு தீராத அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கியது.

1985ல் அதிகாரத்துக்கு வந்த கோர்பி, இந்த நெருக்கடிகளை கிளாஸ்நாஸ்ட் மற்றும் மற்றும் பிரஸ்ட்ரோய்கா ஆகிய அரசியல் சீர்திருத்தம், மறு சீரமைப்பு மூலம் தீர்க்க முயன்றார். ஆனால், நெருக்கடிகள் தீரவில்லை, முற்றின. கட்சியின் ஏகபோக அதிகாரத்தைக் கைவிட்டு பல கட்சி நாடாளுமன்ற முறையும், தேசிய இனங்களின் சுதந்திரத்தையும் ஏற்கும்படியான நிர்பந்தம்

படிப்பகம்

www.padippakam.com

எழுந்தது; அதிகார வர்க்க முதலாளித்துவத்திடம் இருந்து பொருளாதார - தொழில் அமைப்புகளை மீட்டு சுதந்திரச் சந்தை அமைப்புகளாக மாற்ற முடியவில்லை. எனவே கோர்பியின் அரசியல் தலைமை பலவீனப்பட்டு, தேசிய இனப் போர்கள் மூண்டு, குழப்பமும் அராஜகமும் நிலவியது. கோர்பி ஆசைகாட்டியபடி நுகர் பொருட்களின் சொர்க்கம் கனவாகிப் போனதோடு, அத்தியாவசியப் பொருட்களுக்கே பஞ்சம் ஏற்பட்டது. எல்லாவிதமான ஏகாதிபத்தியச் சீரழிவுகளும் தலைவிரித்தன. பிற ஏகாதிபத்தியங்களுடனான பனிப்போரை நிறுத்தி, ஆயுத - படைபலக் குறைப்பு ஒப்பந்தங்கள் காரணமாக நாடு திரும்பும் இராணுவத்துக்கும் மறுவாழ்வளிக்க முடியவில்லை.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்ததைப் போன்ற விரைவான, திடீர் மாற்றங்களின் மூலம் ஏகாதிபத்தியச் சந்தைப் பொருளாதாரத்தை நிறுவும்படி யேல்ட்சின், செவர்த்னாட்சே ஆகிய முதலாளித்துவ கடுங் கோட்பாட்டாளர்கள் கோர்பியை நிர்பந்தித்தனர். இப்போதைய ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திய பிரஷ்னேவைட்டுக்களோ, ஏற்கனவே மேற்கொண்ட சீர்திருத்தங்கள் சீரமைப்புகளையே கைவிட்டு அதிகார வர்க்க முதலாளித்துவம் மீண்டும் தொடர வேண்டும் என நிர்பந்தித்தனர். அரசியல் ரீதியில் பிரஷ்னேவைட்டுக்களையும் பழைய கட்சியையுமே சார்ந்திருந்த கோர்பி படிப்படியாகவும் நயவஞ்சகமாகவும் ஏகாதிபத்தியச் சந்தைப் பொருளாதாரம் மற்றும் அரசியல் அமைப்புளை நிறுவவே விழைந்தார். இதைக் குருச்சேவ் கொள்கை எனக் கோர்பியே கூறிக் கொள்கிறார். இதனால் பிற ஏகாதிபத்தியங்களின் நம்பிக்கையையும் உரிய காலத்தில் நிதிமற்றும் பிற உதவிகளையும் பெற முடியாது போய் நெருக்கடிகளையும் தீர்க்க முடியவில்லை.

ஆகவே இந்த பிரஷ்னேவைட்டு ஆட்சிக் கவிழ்ப்பை மக்கள் எழுச்சி என்கிற பெயரில் சித்தரிக்கும் யேல்ட்சின் தலைமையிலான முதலாளித்துவக் கடுங் கோட்பாட்டாளர்களின் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயத்தையும் கோர்பி கும்பல் எதிர் நோக்கியிருந்தது. இப்போது அதிகாரத்தை மீட்டுத் தக்க வைத்துக் கொள்வதில் வெற்றி பெற்று, ஏகாதிபத்திய ச்ந்தைப் பொருளாதாரத்தை நிறுவுவதில் கோர்பி விரைகிறார். என்றாலும் இதுவே சோவியத் ஒன்றியத்தின் நெருக்கடிகளைத் தீர்த்து விடாது. ஏனென்றால் ஏற்கனவே அத்தகு பொருளாதாரத்தைக் கொண்டுள்ள அமெரிக்காவோ, பிரிட்டனோ, இத்தாலியோ, பிரான்சோ அந்நெருக்கடிகளில் இருந்து தப்பிவிடவில்லை; அதோடு தேசிய இனப் பகைமை, பிரிவினை கோரிக்கை ஆகியன ஒன்றிய அமைப்பு நீடிப்பதற்கே அச்சுறுத்தலாக இருக்கிறது: இன்னமும் கோர்பியின் அரசியல் அமைப்பு பலம் பழைய கட்சியையே சார்ந்துள்ளது.

சோவியத் ஒன்றியத்தில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி இந்திய அரசு மற்றும் இரு போலிக் கம்யூனிஸ்டுகளின் ஓட்டாண்டித் தனத்தையும் அம்பலப்படுத்தி விட்டது. சி.பி.எம். தலைமையோ அவசர அவசரமாக அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரித்துவிட்டது; பிறகு அது தோல்வியுற்றதும், செய்வதறியாது விழிபிதுங்கி நிற்கிறது. ஆஃகான், எத்தியோப்பியா போன்ற அரண்மனை - இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளையே சோசலிசப் புரட்சிகள் என அங்கீகரித்து வந்துள்ள சி.பி.எம். தலைமை எப்போதுமே பிரஷ்னேவைட்டுகளையே ஆதரித்து வருகிறது. அதிலிருந்து கோர்பி விலகிப் போனபோதும் விமர்சனத்துடன் ஆதரிப்பதாக சந்தர்ப்பவாதம் பேசியது. பிரஷ்னேவைட்டுகள் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியதும் தனது மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் வெடித்துவிட்டது. மீண்டும் கோர்பி ஆட்சிக்கு வந்ததும் அதையும் ஆதரிக்க வேண்டிய நிலையில் சிக்கிக் கொண்டு தவிக்கிறது. வழக்கம்போல சந்தர்ப்பவாதம் பேசி நழுவ முயலுகிறது. மாஸ்கோவில் என்ன மாற்றம் நடந்தாலும் ஆதரித்து வந்துள்ள சி.பி.ஐ.யும் இந்திய காங்கிரசு ஆளும் கும்பலும் இந்த மூன்று நாட்களில் 'தடுமாறிப் போய், மதில்மேல் பூனையாகி நின்றன. இறுதி முடிவு தெரிந்த பிறகு சற்றுச் சங்கடத்துடன் கோர்பி ஆதரவு கூட்டத்தில் சேர்ந்து கொண்டன.

சர்வதேசப் புரட்சியாளர்களைப் பொருத்தவரையில் கோர்பி கும்பலின் சீர்திருத்தம் -சீரமைப்பும் சரி; பிரஷ்னேவைட்டுகளின் அதிரடி அரண்மனைப் புரட்சியும் சரி — இரண்டுமே மார்க்சிய - லெனினியத்துக்கும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் எதிரானவை. எனவே இரண்டையும் அம்பலப்படுத்தி முறியடிப்பதற்காக சர்வதேச பாட்டாளி மக்களையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் திரட்டுவதே நமது கடமையாகும்.●

## விலையேற்ற அறிவிப்பு!

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

புதிய ஜனநாயகம் இதழின் விலை ரூ.2.50 ஆக இந்த இதழ் முதல் உயர்த்தப்படுகிறது. உழைக்கும் மக்கள் வாங்கிப் படிக்கும் நோக்கத்தோடு இயன்ற அளவு குறைந்த விலையில் வெளியிட நாங்கள் எவ்வளவுதான் முயன்ற போதிலும், ஃபிலிம் மற்றும் செய்தித்தாள் காகிதத்தின் கடுமையான விலையேற்றத்தால் இதழின் விலையை உயர்த்துவதைத் தவிர்க்க இயலவில்லை.

ரூபாயின் மதிப்பைக் குறைத்தது போதாதென்று, பத்திரிகை காகிதத்தின் விலையை அநியாயமாக அரசு உயர்த்தியுள்ளதன் விளைவாக இதழின் அடக்க செலவுகளில் 70%-ஐ காகிதமே விழுங்கி விடுகிறது. பத்திரிகைகளின் குரல் வளையை மறைமுகமாக நெறிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைதான் இது.

மற்ற பெரிய பத்திரிகைகளைப் போல மலிவு விலைக் காகித ஒதுக்கீடோ, விளம்பரமோ இல்லாமல் நடத்தப்படும் நமது இதழின் விலையை 50 காசுகள் மட்டுமே உயர்த்தியுள்ளோம்.

தவிர்க்கவியலாத இந்த விலையேற்றத்தை அங்கீகரித்து, தொடர்ந்து சந்தாக்கள் திரட்டியும், விற்பனையை விரிவுபடுத்தியும் ஆதரவளிப்பீர்கள் என நம்புகிறோம்.

— ஆசிரியர் குழு

# காவிரி நீர் பிரச்சினை:

காவிரி நீர் பிரச்சினையை வழக்கம் போலவே இழுத்தடித்து துரோகமிழைத்து வரும் காங்கிரசு, இப்போது தனது சொந்த நலன்களுக்காக கேடாகப் பயன்படுத்திக் கொள்ள கிளம்பியுள்ளது. தமிழக காங்கிரசில் மூப்பனார், வாழப்பாடி கோஷ்டிகளின் சொந்த ஆதாயத்துக்கான பகடைக்காயாக காவிரி நீர் விவகாரம் மாற்றப்பட்டுள்ளது. கூடவே இக்கோஷ்டிப் பூசலில் குளிர் காய்ந்து ஜெயலலிதா ஆதாயம் தேடப் பார்க்கிறார்.

வாழப்பாடி ராமமூர்த்தி மத்திய மந்திரியானதும் தமிழ்நாடு காங்கிரசு தலைமையைக் கைப்பற்ற மூப்பனார் கோஷ்டி முயற்சித்தது. பிரதமர் நரசிம்மராவை விசுவாசமாக ஆதரிப்பதன் மூலம் தம்மை அப்பதவியில் நியமிக்கக் கோரியது. இதற்காக காவிரி நீர் பிரச்சினையில் மத்திய அரசின் காலங்கடத்தும் திட்டத்தை விசுவாசமாக ஆதரித்து, மூப்பனார் கோஷ்டி தமிழக மக்களுக்கு அப்பட்டமாக துரோகமிழைத்துள்ளது. இதன் மூலம் கட்சி மற்றும் ஆட்சியில் புதிய பதவிகளைப் பெறுவது, தமிழக காங்கிரஸ் தலைமையைக் கைப்பற்றி தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்வது, பின்னர் வாழப்பாடி கோஷ்டியைப் பணியவைத்து அவரை கட்சி மற்றும் ஆட்சிப் பொறுப்புகளில் இருந்து கழட்டிவிடுவது என்பது மூப்பனார் கும்பலின் திட்டம்.

மூப்பனார் கோஷ்டி தமிழக காங்கிரசு தலைமையைக் கைப்பற்றி விட்டால் தனது தலைவர் பதவி பறிபோவது மட்டுமின்றி, பின்னர் மந்திரி பதவியும் பறிக்கப்படும் என்பதை உணர்ந்த வாழப்பாடி, அ.தி.மு.க.வைக் கொண்டு நரசிம்மராவ் - மூப்பனார் கோஷ்டியை மிரட்டிப் பணிய வைக்க காவிரிநீர் பிரச்சினையைக் கையிலெடுத்துக் கொண்டார். சிறுபான்மை காங்கிரசு அரசுக்கு அ.தி.மு.க. ஆதரவு இல்லாவிட்டால் ஆட்சியே கவிழ்ந்துவிடும். வாழப்பாடிக்கோ அ.தி.மு.க.வை விட்டால் வேறு நாதியில்லை. எனவே காவிரிநீர் விவகாரத்தில் தமிழக மக்களது மத்திய அரசின் மீதான வெறுப்பு, ஜெயலலிதாவின் அதிருப்தி ஆகியவற்றை நரசிம்மராவ் - மூப்பனார் கோஷ்டிக்கு எதிராகத் திருப்பிவிட்டு, எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மந்திரி பதவியைத் 'தியாகம்' செய்தார். இதன் மூலம் கட்சிக்குள்ளும் வெளியிலும் தமது செல்வாக்கை உயர்த்திக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே கோஷ்டிப் பூசலால் புழுத்து நாறும் காங்கிரசில் ராஜீவின் நெருங்கிய கூட்டாளிகளும் குடும்ப நண்பர்களுமான மாதவராவ் சிந்தியா, பொட்டேதார்



படிப்பகம்

www.padippakam.com

# கோஷ்டிப் பூசலுக்கான பகடைக்காயா?



துரோகி சிதம்பரம் வாகனத்தின் மீது தாக்குதல்: காவிரி நீருக்கான உரிமைப் போரல்ல; அரசியல் ஆதாயத்துக்கான நாய்ச்சண்டை.

முதலானோர் சோனியாவை முன்னிறுத்தி ஒரு கும்பலாகத் திரண்டுள்ளனர். அவரை அமேதி தொகுதியில் போட்டியிட வைத்து பிரதமராக்கி ஆதாயமடைய முயற்சிக்கின்றனர். இப்புதிய கோஷ்டியில் தன்னை இணைத்துக் கொண்டுள்ள வாழப்பாடி, தனது விசுவாசத்தை நிரூபிக்க, தமிழக உள்ளாட்சித் தேர்தலுக்காக காங்கிரசு வசூலித்த 32 லட்ச ரூபாயை ராஜீவ் அறக்கட்டளை நிறுவுவதற்காக சோனியாவிடம் கொடுத்துள்ளார். மேலும், பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக அதிகாரப் போட்டியில் இறங்கியுள்ள சரத்பவார் தலைமையிலான கோஷ்டியுடனும் கூடிக் குலாவுகிறார்.

வாழப்பாடி தனது சொந்த ஆதாயத்துக்காக மந்திரி பதவியைத் துறந்ததை -அதன் பின்னணியை ஆராயாமல் அவரை தியாகி, தீரர், தமிழக உரிமைக்காக பதவியை துச்சமாக மதித்த மாவீரர் என்று காங்கிரசு - அ.தி.மு.க.வினர் புகழ்மாலை சூட்டுகின்றனர். பாராட்டு விழாக்கள் நடக்கின்றன. பாட்டாளி மக்கள் கட்சி கூட வாழப்பாடியை மாவீரராக சித்தரிக்கிறது. ஆனால் இதே வாழப்பாடி இதற்கு முன் காவிரிநீர் பிரச்சினைக்காக என்ன செய்தார் என்பது தான் கேள்வி. 1974 முதலாக காங்கிரசின் துரோகத்துக்கு உடந்தையாக இருந்துவிட்டு இப்போது திடீரென தமிழக உரிமைக்காக பதவியைத் துறந்ததாகக் கூறுவது அப்பட்டமான அரசியல் பித்தலாட்டமின்றி வேறென்ன?

இதே போல ஜெயலலிதாவும் தனது அரசியல் ஆதாயத்துக்காகவே காவிரிநீர் பிரச்சினையில் தீவிரம் காட்டுகிறார். மூப்பனார் கோஷ்டி தமிழக காங்கிரசு தலைமையைக் கைப்பற்றி விட்டால் தனது ஆட்சிக்கு எதிராக நெருக்கடிகள் கொடுப்பார் என்று அவர் அஞ்சுகிறார். மேலும் ஜெயலலிதா எதிர்பார்த்ததைப் போல மத்தியில் காங்கிரசு ஆட்சிக்கு வந்துள்ள போதிலும் ராஜீவ் இப்போது இல்லை. கோஷ்டிகளுக்கு மேலான செல்வாக்கு பெற்ற எந்த தலைவரும் இப்போது காங்கிரசில் இல்லை. அதிகாரப் போட்டியில் எந்த கோஷ்டியும் வெற்றி பெறலாம். அது ஜெயலலிதாவுக்கு எதிரானதாக இருந்து விட்டால் அவரால் இஷ்டம்போல் ஆட்சி செய்ய முடியாது. தமிழகத்துக்கான உணவு - நிதி - மானிய ஒதுக்கீடுகளும், கவர்ச்சித் திட்டங்களும், தனது கட்சியினருக்கு அரசாங்க சலுகை - சன்மானங்களில் உரிய பங்கும் கிடைக்காமல் போய்விடும்.

எனவே அதிகார செல்வாக்கு மிக்க சோனியா கோஷ்டியை ஆதரிப்பது, அதற்காக வாழப்பாடி கோஷ்டியைப் பயன்படுத்திக் கொள்வது, நரசிம்மராவ் - மூப்பனார் கோஷ்டிக்கு எதிரான துருப்புச் சீட்டாக காவிரிநீர் விவகாரத்தில் தீவிரம் காட்டுவது என்பதாக அரசியல் சதுரங்கக் காயை நகர்த்துகிறார் ஜெயலலிதா.

இந்த நோக்கத்தோடு, மத்திய அரசின் காலங்கடத்தும் துரோகத்தனத்தை ஆதரிக்கும் மூப்பனார் கோஷ்டியைச் சேர்ந்த சிதம்பரம், அருணாச்சலம் ஆகிய மத்திய மந்திரிகளின் நிகழ்ச்சிகளை அ.தி.மு.க. புறக்கணிக்கும் என்று அறிவித்தார். அதே நேரத்தில் 'தியாகி' வாழப்பாடிக்கு தமது கட்சி சார்பில் பாராட்டு விழா நடத்தி கோஷ்டி பூசலைத் தூண்டி விட்டார். அதைத் தொடர்ந்து மூப்பனார், வாழப்பாடி கோஷடிகள் ஒருவரையொருவர் துரோகி எனச் சாடி போஸ்டர் யுத்தமும் வசைபாடும் பொதுக் கூட்டங்களும் நடத்தினர். பின்னர் தனது கட்சி பெண் எம்.எல்.ஏ.க்களைத் தூண்டிவிட்டு சிதம்பரத்தை கெரோ செய்ய வைத்தார் ஜெயலலிதா. அதன் பிறகு தனது தொகுதிக்குப் பயணம் சென்ற சிதம்பரத்துக்கு கருப்புக் கொடி காட்ட தனது கட்சியை ஏவினார். பின்னர் அது சிதம்பரத்துக்கு எதிரான மறியல் போராட்டமாக மாறி, அவரது வாகனத்தின் மீதான தாக்குதலாக நடந்து, வாழப்பாடியே வேறுவழியின்றி கண்டனம் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

**மூப்பனார் துரோகக் கும்பலுக்கு எதிராக தமிழக உரிமைக்காகப் போராடுவதாக காட்டிக் கொள்ளும் ஜெயலலிதா - வாழப்பாடி கும்பலிடம் கூட உச்சநீதி மன்றத்திடம் முறையிடுவது என்பதைத் தவிர வேறு தீர்வு எதுவுமில்லை. இதுவும் மூப்பனார் - நரசிம்மராவ் கும்பல் முன் வைத்துள்ள அதே தீர்வு தான்!**

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் பிரமுகர்களும் இதில் நேரடியாகப் பங்கேற்ற போதிலும், தனது கட்சியினர் யாரும் பங்கேற்கவில்லை என்றும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் நடத்திய போராட்டம் என்றும் அண்டப் புளுகை அவிழ்த்து விட்டார் ஜெயலலிதா.

பின்னர் இது தி.க; தி.மு.க.; பா.ம.க.வினர் நடத்திய தாக்குதல் என்று பழியை எதிர்க்கட்சிகள் மீது போட்டார். அதன் பிறகு காங்கிரசில் ஒரு கோஷ்டிக்கு எதிராக மற்றொரு கோஷ்டியினர் நடத்திய தாக்குதல் என்று கூசாமல் புளுகினார். அவருக்கு கூஜா தூக்கும் வாழப்பாடி, இதைக் கண்டு கொள்ளாமல் மௌனம் சாதிக்கிறார்.

மூப்பனார் துரோகக் கும்பலுக்கு எதிராக தமிழக உரிமைக்காகப் போராடுவதாக காட்டிக் கொள்ளும் ஜெயலலிதா - வாழப்பாடி கும்பலிடம் கூட உச்சநீதி மன்றத்திடம் முறையிடுவது என்பதைத் தவிர வேறு தீர்வு எதுவுமில்லை. இதுவும் கூட மூப்பனார் - நரசிம்மராவ் கும்பல் முன் வைத்துள்ள துரோகத்தனமான அதே தீர்வுதான்!

இப்படி காவிரிநீர் விவகாரம் — ஜெயலலிதா - வாழப்பாடி - மூப்பனார் கும்பல்களின் அரசியல் ஆதாயத்துக்கான பகடைக் காயாக மாற்றப்பட்டு வருகிறது. ஆனால் தமிழக மக்களுக்கோ காவிரி நீர் உயிராதாரமான - உரிமைக்கான பிரச்சினை. அதை திசை திருப்பி ஜெயலலிதா - காங்கிரசு பெருச்சாளிகளின் சுயநலனுக்கு கேடாகப் பயன்படுத்துவதை தமிழக மக்கள் ஒருக்காலும் அனுமதிக்க முடியாது. காவிரியில் தமிழக உரிமைக்கான போராட்டத்தில் ஒன்றுபட்டு நிற்கும் தமிழக மக்கள் இத்துரோகிகளின் மோசடிகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டிய தருணமிது.

● மணி



படிப்பகம்

www.padippakam.com

# சி.பி.ஐ.யின் தகிடுதத்தங்கள்!

**சி.பி.ஐ.யின் அதிகார முறைகேடுகள், அதிக்கிரமங்கள் பலவும் இந்தியச் சட்டத்துக்கே எதிரானவை. ஆனால் அரசின் மிக முக்கியமான, இரகசியமான அங்கம் என்பதால் இக்கிரிமினல் குற்றங்களுக்கான தண்டனையில் இருந்து சி.பி.ஐ. தப்பித்துக் கொள்கிறது.**

ராஜீவ் கொலை வழக்கில் தேடப்பட்ட சிவராசன், சுபா ஆகியோர் பிணமாகப் பிடிபட்டதுடன் நாட்டிலேயே மிகப்பெரிய மனித வேட்டை ஒரு வழியாக முடிவுக்கு வந்தது. அவர்களை உயிரோடு பிடிக்க முடியாது என்று எல்லோரும் எண்ணியவாறே முடிந்தது. ஆனால், ஜெயா, நரசிம்மராவ் ஆட்சியினர் ஈழத் தமிழர்கள், அவர்களது விடுதலைப் போராட்ட ஆதரவு இயக்கத்தினருக்கு எதிராகத் தொடரும் மனித வேட்டை நிற்காது என்றே தெரிகிறது.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை, சிவராசன் - சுபாவைத் தேடுவது என்கிற பெயரில் பலகோடி ரூபாய்களும் மூன்று மாதமும் செலவிட்டு சி.பி.ஐ.யும் அதன் சிறப்புப் புலனாய்வுக் குழுவும் தமிழகப் போலீசும் அதன் ''கியூ'' பிரிவும் நடத்திய அதிக்கிரமங்கள் ஏராளம். அவர்களது அடையாள அட்டையை மூக்கு நுனியிலே முட்டுமாறு நீட்டும்போது எவரானாலும் காலோடு மூத்திரம் பெய்துவிட வேண்டும் என்கிற அதிகாரத் திமிரோடு அலைவதைக் கண்டோம்.

ஈழத் தமிழ் அகதிகள் முகாம்கள் திறந்த வெளிச் சிறைகளாக்கப்பட்டன; போலீசு நிலையத்தில் பதிவு செய்யாத ஈழத் தமிழர்கள் வேட்டையாடப்பட்டு தனி முகாம்களில் அடைக்கப்பட்டனர்; வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டு பயணிகள் துன்புறுத்தப்பட்டனர்; சந்தேகத்துக்குரிய நபர்கள், அவர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டன. பிடிபட்டால் ராஜீவ் கொலை வழக்கில் சிக்கி விடுவோம் என ஈழப் போரில் அடிபட்டு வந்து சிகிச்சை பெறும் போராளிகள் கூட ''சையனடு'' நஞ்சு தின்று செத்தார்கள்; சொந்தப் பகைமை காரணமாக வம்புக்கு இழுத்துவிடப் பட்டவர்கள் கூட சி.பி.ஐ.யினால் துன்புறுத்தப்பட்டனர். சிவராசன், சுபா ஆகிய பெயருடையவர் எவரானாலும், ஒற்றைக் கண்ணர்கள் எவரானாலும் சி.பி.ஐ.யினால் தொல்லைக்குள்ளாயினர். ராஜீவ் கொலையில் சம்பந்தமுள்ளவர்கள் எனக் கோர்ட்டில் நிறுத்தப்பட்டவர்கள் தவிர பலர் சி.பி.ஐ.யின் 'மல்லிகை' மாளிகையில் வைத்து சித்திரவதை செய்து அடைக்கப்பட்டனர்.

சி.பி.ஐ.யும் அதன் தூண்டுதலால் தமிழகம், கர்நாடகா மற்றும் பிற மாநிலப் போலீசும் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள் எதுவும் சட்டபூர்வமானதல்ல. ஏனென்றால் இரண்டு மாதங்கள் இப்படிச் செய்துவிட்டுப் பிறகுதான் இவற்றுக்கான சட்டப்படியான அதிகாரமளிக்கும் ''வாரண்ட்'' அதிகாரத்தையே கோர்ட்டிடம் இருந்து சி.பி.ஐ. பெற்றது. அதுவும் சி.பி.ஐ. பல்வேறு தொல்லைகள் தருவதாகப் பொதுமக்களிடம் இருந்து முணுமுணுப்புக் கிளம்பிய பிறகுதான் இந்த அதிகாரத்தை பெறவே சி.பி.ஐ. முயன்றது.

கொலைச் சதியில் சம்பந்தப்பட்டவர்கள், புலிகள் என்று கைது செய்ததும், தடயங்கள், ஆதாரங்கள் சிக்கியிருப்பதாகக் காட்டுபவையும் கூட சி.பி.ஐ.யின் துப்பறியும் அறிவு - தொழில் திறமையினால் சாதித்தவை அல்ல. தற்செயலாகவும் அதிகார மிருக பலத்தைக் கொண்டு அடைந்தவை. அதுவும் தமிழக, கர்நாடகப் போலீசின் வேலைகளுக்கு சி.பி.ஐ. உரிமை பாராட்டிக் கொள்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக தேடப்பட்ட நபர்களும், புலிகளும் இங்குள்ள புரட்சிகர, ஆதரவு இயக்கத்தினர் எவரையும் சாராது படைபலத்தை வைத்து சொந்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்ததால் - அரசியல் ரீதியில் இல்லாத சக்திகள் - பலவீனப்பட்டு அவர்கள் சிக்கிவிட நேர்ந்தது.

ஏற்கனவே அதிகாரத் திமிரிலும், பிரபலமடையும் விளம்பர போதையிலும் மிதக்கும் சி.பி.ஐ. பற்றிய புராணக் கட்டுக் கதைகள், முன்னணி - பின்னணித் தகவல்கள், திடுக்கிடும் - பரபரப்பூட்டும் செய்திகள், போட்டிகள் - துதிப்பாடல்கள் பார்ப்பன, ஆதித்தன் வகையறா ஏடுகளில் நிறைய வரும். இவற்றை விட முக்கியமாகத் தம்மிடம் சிக்கியுள்ளவர்களை முடிந்த அளவில் ராஜீவ் கொலையில் சம்பந்தப்படுத்தி அதிக பட்சம் கண்டிக்கும் வேலையில் சி.பி.ஐ. இறங்கிவிடும்.

தற்கொலை செய்து கொண்ட தாணு, சிவராசன், சுபா ஆகியோர் மட்டுமே ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்று சி.பி.ஐ. வழக்கை விடாது; இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான தொடர்பு மட்டுமல்ல, காங்கிரசு கும்பல் கூறி வருவது போல சர்வதேசச் சதி என்ற கதையோடு முடிச்சுப் போடவும் முயலும். ராஜீவ் சர்வதேசத் தலைவராக விளங்கினார் என்கிற அண்டப்புளுகுக்கு அவர்களுக்கு ஆதாரம்

**''தொழில் திறன், பாரபட்சமில்லாத நடுநிலை, நேர்மைக்கு விசுவாசம்.''**

- இவை சி.பி.ஐ.யின் இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ள முத்திரை வாசகம். ஆனால் இதற்கு எதிராகத்தான் சி.பி.ஐ. செயல்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலின் ஏவலர்களாக இருந்து அதன் பல லஞ்ச ஊழல் கிரிமினல் குற்றங்களை மூடிமறைக்க உதவியிருக்கிறது. அக்கும்பல் ஏவிவிட்டவாறு அதன் அரசியல் எதிரிகளைப் பலமுறை பழிவாங்கியிருக்கிறது. தனது எஜமான விசுவாசத்தை நிரூபிப்பதற்காக பல அப்பாவிகளைப் பலியிட்டிருக்கிறது. இங்கே சில முக்கிய வழக்குகளைப் பார்ப்போம்.

● 1980-ல், மகாராஷ்டிராவில் இரு உர ஆலைகள் நிறுவும் ஒப்பந்தத்தை ராஜீவ்-சோனியா தொடர்புடைய இத்தாலியின் ஸ்நாம்புரோக்கட்டியின் துணை நிறுவனத்துடன் போட்டதில் பல கோடி ரூபாய் லஞ்ச ஊழல் நடந்திருப்பதாக ஆதாரங்களுடன் நாடாளுமன்றத்தில் உன்னிக் கிருஷ்ணன் அம்பலப்படுத்தினார். லஞ்ச ஊழலை விசாரிப்பதற்குப் பதிலாக அந்த ஆதாரங்கள் எப்படி உன்னிக் கிருஷ்ணனுக்கு கிடைத்தன என்பதை விசாரிக்கும்படி இந்திரா அரசு சி.பி.ஐ.க்கு உத்திரவிட்டது. உடனே சில அதிகாரிகளையும், தொழில் தரகர்களையும், ஒரு காங்கிரசுப் பிரமுகரையும் சி.பி.ஐ. கைது செய்து அதிகாரபூர்வ இரகசிய சட்டத்தை மீறியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஆனால் ஆரம்ப விறுவிறுப்புக்குப் பிறகு கடந்த பத்தாண்டுகளாகக் கிணற்றில் போட்ட கல்லாகிவிட்டது. இதுவே இந்திரா மீதான லஞ்ச ஊழல் புகாரைத் திசை திருப்ப சி.பி.ஐ செய்த கண் துடைப்பு வழக்கே என்பதற்குச் சான்றில்லையா?

● 1986-ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் தணிக்கையாளரும், ஆலோசகருமான குருமூர்த்தி மற்றும் அவரது உதவியாளர் ஜானகிராமனை சி.பி.ஐ. கைது செய்தது: அதிகார பூர்வ இரகசியச் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டியது. அப்போது நடந்த அம்பானி - வாடியா தொழில் போட்டியில், அம்பானியின் பல கம்பெனி - நிதிமுறை கேடுகளையும் அரசு அதற்கு உடந்தையாக இருந்ததையும் குருமூர்த்தி அம்பலப்படுத்தி வந்தது தான் இதற்குக் காரணம். குற்றச்சாட்டை வலுப்படுத்த அம்பானி, ராஜீவ், அமிதாப் பச்சன் கும்பலுடன் சேர்ந்து கொண்டு ஒரு



படிப்பகம்

www.padippakam.com

தேவையாக உள்ளது. இந்திரா கொலை வழக்கிலேயே இப்படிச் செய்ய முடியாமல் போனது குறித்து அவர்கள் வருந்துகிறார்கள்.

இந்திரா கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, பிறகு நிரபராதி என நிரூபிக்கப்பட்ட பல்பீர்சிங் சொன்னார், ''இந்தியப் பிரதமரை டெல்லி போலீசைச் சேர்ந்த ஒரு சாதாரண சப்-இன்ஸ்பெக்டரும், போலீசுக்காரனும் மட்டுமே கொன்று விட்டார்கள் என்பது மிகவும் மதிப்பு - மரியாதைக்குரியதாக தோன்றாது. ஏதாவது ஒரு சர்வதேச சதி இருந்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆகவே சிம்ரஞ்சித் சிங் மான் உட்பட பலரைக் கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தி பிரதமர் என்கிற தகுதிக்குப் பொருத்தமாக ஒரு பெரிய வழக்காக அது இருக்க வேண்டுமென அவர்கள் விரும்பினார்கள்.''

இதேபோலத்தான் ராஜீவ் கொலை விசாரணை - வழக்கை ஜோடிக்க ஆளும் கும்பல் முனைகிறது. சித்திரவதைகள், பொய்ச் சாட்சிகள், அப்ரூவர்கள், சாட்சியங்கள், ஆதார - ஆவணங்கள், கற்பனைக் கதைகள் உருவாக்குவது சி.பி.ஐ.க்கு ஒன்றும் புதிதல்ல. ஆளும் கும்பலுக்கு சங்கடம் அளிக்கும் வகையில் வழக்கு திரும்பி விடும் எனச் சந்தேகித்தால் மூடி மறைப்பதும் சண்முகம் கொலையைப் போல சாட்சியங்கள், நபர்களை அழித்து விடுவதும் கூட அதற்குப் புதிதல்ல. இந்திரா கொலை வழக்கை சிறப்புப் புலனாய்வுக் குழு நடத்திய விதத்தைத் திருப்பிப் பார்த்தாலே இது புரியும்.

இந்திராவைக் கொன்ற இருவரில் பியந்த்சிங்கைப் பிற மெய்க்காவலர்கள் கொன்ற வழக்கை நடத்தவே இல்லை. அக்கொலையில் சந்தேகத்துக்குரியவர் எனத் தாக்கர் கமிஷனால் தீர்ப்புக் கூறப்பட்ட இந்திராவின் அந்தரங்க செயலாளர் ஆர்.கே.தாவனுக்கு நெருக்கமானவர் பியந்த்சிங். விவகாரம் இந்திரா குடும்பத்துக்குள்ளாகவே திரும்பும் என்பதால், இந்த வழக்கு முடக்கப்பட்டது.

இந்திரா கொலை சதிக்குக் காரணமானவர்கள் என மத்திய அரசு ஊழியர் கேஹார் சிங் மற்றும் இந்திரா மெய்க்காவல் படை

**தொழில் திறன், நடுநிலை, நேர்மை - சி.பி.ஐ.யின் முத்திரை வாசகங்கள் இவை. ஆனால் பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலின் பல லஞ்ச ஊழல் கிரிமினல் குற்றங்களை மூடி மறைத்து, இவற்றிற்கு எதிராகத் தான் செயல்பட்டு வந்திருக்கிறது, சி.பி.ஐ.!**

சப்-இன்ஸ்பெக்டர் பல்பீர்சிங் ஆகியோர் மீதும் சிறப்புப் புலனாய்வுக் குழு (சி.பு.கு) வழக்குப் போட்டது. அவர்கள் இருவருக்கும் கூட செசென்சு மற்றும் உயர்நீதி மன்றம் மரணதண்டனை விதித்தது. ஆனால், உச்ச நீதிமன்றம் பல்பீர்சிங் நிரபராதி என விடுதலை செய்துவிட்டது.

இந்திரா கொலையான அடுத்த நாள் அதிகாலை பல்பீர் சிங்கை வீட்டில் இருந்து இழுத்துக் கொண்டு போன சி.பு.கு. 35 நாட்கள் சட்டவிரோதமாக அடைத்து வைத்துத் துன்புறுத்தியது. பியந்த்சிங் வெளிநாட்டில் இருந்து பணம் பெற்றதாகவும், சிம்ரஞ்சித் சிங் மான் கொலைச் சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் சாட்சியம் கூறும்படி நேரடியாகவும், உறவினர்கள் மூலமும் நிர்பந்தித்தது. அது முடியாமற் போகவே, பஸ் நிலையத்தில் நின்றிருந்தபோது, கொலைச் சதிக்கான ஆதாரங்களுடன் கைது செய்ததாக வழக்குப் போட்டது.

பல்பீர் சிங்குக்கு எதிரான சாட்சியங்கள், ஆதாரங்கள் எல்லாமே இட்டுக்கட்டப்பட்டவை, போலியானவை என்று உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. ''தின்ற உப்புக்குக் கூட சி.பு.கு. வேலை செய்யவில்லை. துப்பறிபவர்கள் மட்டுமல்ல; சாதாரண அறிவுள்ளவர்கள் கூட அவற்றை ஏற்க மாட்டார்கள்'' என வீசி எறிந்தது. பல்பீர்சிங்கைக் கைது செய்தது, அவரிடம் ஆதாரம் சிக்கியது எல்லாமே புளுகு; குற்றமும் செய்துவிட்டு, தன்னை தூக்குமேடை ஏற்றும் ஆதாரத்தையும் வைத்துக் கொண்டு எந்தப் போலீசு அதிகாரியும் அலையமாட்டான் என்று தீர்ப்புக் கூறியது. இந்திராவைக் கொல்லும்படி ஆணையிடும் ''புனிதக் கழுகை'' பியந்த் சிங்கோடு சேர்ந்து பல்பீர்சிங் பார்த்தார் என இன்னொரு சப்-இன்ஸ்பெக்டர் மதன்லால் சாட்சியம் கூறினார்; கொலையாளி சத்வந்த் சிங்கோடு பல்பீர்சிங் இரகசியமாகப் பேசியதாக பஞ்சாபி மொழியே தெரியாத சத்தீஷ் சந்திராசிங் சாட்சி கூறினார். இவற்றையெல்லாம் பொய்ச் சாட்சிகள் என உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

பியந்த்சிங்குடன் நெருங்கிய குடும்ப உறவு வைத்திருந்த கேஹார்சிங் அவரது தூரத்து சொந்தக்காரர். அவரது உறவினர்களைத் துன்புறுத்தியும் அவரையும் அவரது மகன்களை சித்திரவதை செய்தும் அப்ரூவராக மாற்ற சி.பு.குழு முயன்றது. கேஹார் சிங் மறுத்துவிடவே கொலைச்சதி வழக்குப் போட்டது. உறவினர் வீடுகளுக்கும், கோவில்களுக்கும் பியந்த்சிங்கோடு சேர்ந்து போனது, இரகசியமாகப் பேசிக் கொண்டது, கொலையை ஆதரித்துப் பேசியது, இந்திரா எதிர்ப்பு பிரசுரம் - பியந்த்சிங்கின் வளையல் போன்றவை கேஹார் சிங்கிடம் சிக்கியது, இருவரும் குருதுவாராக்களில் புனித நீர் அருந்தி சபதம் எடுத்தது என ஆதாரங்கள் சி.பு.குழு முன் வைத்தவை. நம்ப முடியாத இந்த ஆதாரங்களை ஏற்றதோடு, பல பிரபல பிரமுகர்கள் மன்னிக்கும்படி கோரியும் கேஹார்சிங் தூக்கிலிடப்பட்டார்.

ஒரு சுற்று இந்த வழக்கை முடித்துக் கொண்டு, மீண்டும் இந்திரா கொலை சதி

---

''போர்ஜரி'' வேலையிலும் ஈடுபட்டது சி.பி.ஐ. அதாவது குருமூர்த்தி, நுஸ்லி வாடியா, வி.பி.சிங் ஆகியோருக்கும் ஃபார்பாக்ஸ் - ஹெர்ஷ்மானுக்கும் இரகசிய தொடர்புள்ளதாக நிரூபிக்கும் ஆவணத்தை தாக்கல் செய்தது. ஆனால் அது ''போர்ஜரி'' என்பதோடு வேறு ஆதாரமில்லாததால் குருமூர்த்திக்கு எதிரான பழிவாங்கும் வழக்கைத் தொடரமுடியாமல், குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யாது பின் வாங்கிவிட்டது சி.பி.ஐ! அரசுத்தலைவர் ஜெயில்சிங், பிரதமர் ராஜீவ் நாடாளுமன்றத்தில் புளுகியதாகக் குற்றஞ்சாட்டி எழுதிய இரகசியக் கடிதத்தைக் கைப்பற்ற சி.பி.ஐ. குருமூர்த்தி அலுவலகத்தையும் வீட்டையும் சோதனையிட்டது. அதை மூடிமறைக்கவும் மேற்படி வழக்கு போடப்பட்டது. ஆனாலும் அக்கடிதத்தை பத்திரிகையில் வெளியிட்டு சி.பி.ஐ., முகத்தில் கரிபூசப்பட்டது.

● ஃபார்ஃபாக்ஸ் விவகாரம், போஃபார்ஸ் பீரங்கி, எச்.டி.டபிள்யூ நீர்மூழ்கிக் கப்பல் ஆகிய ஆயுத பேர லஞ்ச ஊழல் விவகாரங்கள் 1987 இல் அம்பலமாகின. இந்த விவகாரங்களை விசாரிப்பது என்கிற பெயரில் உண்மையில் பாசிச ராஜீவ் கும்பலின் கிரிமினல் குற்றங்களை மூடி மறைப்பதற்தான வேலைகளில் சி.பி.ஐ. ஈடுபட்டது. அம்பானி, ராஜீவ், அமிதாப் கும்பல் வெளிநாடுகளில் செய்த நிதி மோசடி - நிதிக் குவிப்பைத் துப்பறிய நுஸ்லிவாடியா - வி.பி.சிங் கும்பலால் அரசு அதிகாரபூர்வமாக அமர்த்தப்பட்டது ஃபார்பாக்ஸ் நிறுவனம். அது துப்பறிந்த விவரங்களைக் கண்டுபிடிப்பதற்கு பதிலாக ஃபார்ஃபாக்ஸ் நிறுவனம், சி.ஐ.ஏ. என்றும் அதற்கு இரகசியங்கள் கடத்தப்பட்டதாகவும் எதிர்த்தரப்புக்கு எதிராக அவதூறு பரப்ப சி.பி.ஐ. உதவியது.

● ஆயுத பேர ஊழல்களை விசாரிப்பதாக சுவிஸ், சுவீடன், இங்கிலாந்து, ஜெர்மனி என்று சுற்றிவந்த சி.பி.ஐ. அதிகாரிகள் ஊழல் இரகசியங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று கூறி இழுத்தடித்தார்கள்; ராஜீவ் கும்பலின் வெளிநாட்டு ஊழல் கூட்டாளிகளுடன் கூடி இரகசியங்கள் - தடயங்களை அழிப்பதற்கு உதவினர். அதே சமயம் இந்து, எக்ஸ்பிரஸ், இந்தியா டுடே முதலிய ஏடுகளில் வெளிவந்த ஆவணங்கள், ஆதாரங்களை ஒதுக்கியே வந்தனர்; பிறகு அவற்றை வெளியிடும் ஏடுகளை மிரட்டிப் பணியவைக்க முயன்றனர். ஆயுத பேரத் தரகன் வின்சத்தாவை நாட்டை விட்டுத் தப்பி ஓடவிட்டு, பிறகு அவரது நிபந்தனைகளை



படிப்பகம்

www.padippakam.com

வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என மான், தாலீப்சிங், ஜெக்மோகன்சிங், அதீந்தர்பால் சிங் ஆகியோரை பிடித்து சிறையிலடைத்தது; பாசிச ராஜீவ் கும்பல் தேர்தலில் தோற்ற பிறகு இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இது பழிவாங்குவதற்காகப் போட முயன்ற வழக்குத்தான் என்பதற்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்?

இந்திரா கொலையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட 20 பேரில் அமர்ஜித் சிங், குர்தயாள் சிங் ஆகிய இரு இந்திரா மெய்க்காவல் படை அதிகாரிகளும் இருந்தனர். அவர்களில் அமர்ஜித் சிங் கொலை சதி முன்னமே அறிந்தவர்; ''அப்ரூவர்'' ஆகியவர் எனச் சி.பு.கு. கோர்ட்டில் நிறுத்தப்பட்டார்; பிறகு அவர் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்; மிகையான போதை மருந்து உண்டதே காரணம் என்றனர். இந்திரா கொலையின் போது அங்கிருந்த குர்தயாள் சிங்கைக் கைது செய்து கொண்டு போனார்கள். அவர் திரும்பவே இல்லை. சித்திரவதை செய்து கொன்று விட்டதாகவும், தலைமறைவாகி விட்டதாகவும் வதந்திகள் வந்தன.

இந்திரா கொலை வழக்கைப் போலவே, ராஜீவ் கொலை வழக்கும் கொண்டு செல்லப்படுவதையே இவை காட்டுகின்றன. ராஜீவ் கொலை சதி பற்றி காங்கிரசு - அ.தி.மு.க. ஆளும் கும்பல் பரப்பிவரும் வதந்திகளும் நடவடிக்கைகளும் இதையே காட்டுகின்றன. காங்கிரசு விருப்பப்படியே சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழுவும் விசாரணைக் கமிஷன்களும் நியமித்து இயங்குகின்றன. எதிர்த்தரப்பினருக்கு வாதாடும் வக்கீல்களைக் கூட ஏசுவதும், தாக்குவதும் நடக்கிறது. ஆகவே ஆளும் கும்பல்களோடு சேர்ந்து சி.பி.ஐ.யும் பிற போலீசுப் பிரிவுகளும் மனித உரிமை மீறல்கள், அதிக்கிரமங்களைத் தொடரவே செய்யும்.



●

**''இந்திரா கொலையில் தொடர்புபடுத்தப்பட்ட பல்பீர் சிங்குக்கு எதிரான சாட்சியங்கள், ஆதாரங்கள் எல்லாமே சி.பி.ஐ.யால் இட்டுக் கட்டப்பட்டவை; போலியானவை.''**

●

● ● ●

சி.பி.ஐ. தனது எஜமான உத்திரவை ஏற்று, விசுவாசத்தை நிரூபிப்பதற்காக எவ்வளவு விபரீதமாகச் செயல்படக் கூடியது என்பதற்கு ஒரு சான்று ''மக்களு விவகாரம்''. அதற்காக நடக்காத குற்றச் சம்பவத்தைக் கூட நடந்ததாக கற்பித்து வழக்கு ஜோடிக்கவும் தயங்காததுதான் சி.பி.ஐ; தானுண்டு, தனது தொழில் - குடும்பம் உண்டு என்றுவாழும் அப்பாவி இந்திய குடிமகனைக் கூட தனது எஜமானர்களுக்காக பலியிடத் தயங்காதது சி.பி.ஐ. என்பதற்கான சான்று இந்த ''மக்களு விவகாரம்.''

1981 ஏப்ரல் 27-ந் தேதி, அப்போதைய உள்துறை மந்திரி ஜெயில்சிங், பிரதமர் இந்திரா காந்தி வெளிநாடு போக இருந்த விமானத்தில் நாசவேலை செய்து கொல்வதற்கு சதி நடந்துள்ளது என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அதிர்ச்சியடைந்த அனைத்துக் கட்சிகளும் தீர விசாரிக்கும்படி கூச்சலிட்டன. உடனே வழக்கு சி.பி.ஐ. இடம் ஒப்படைக்கப்பட்டது.

உண்மையில் அப்படி எதுவும் நாசவேலையோ, கொலை முயற்சியோ நடக்கவே இல்லை. விவகாரம் இதுதான். ''மக்களு'' என்பது ஏர்-இந்தியாவின் போயிங் 707 ரக விமானம். ஏப்ரல் 15-ந் தேதி அது அபுதாபியிலிருந்து திரும்பியது. சோதனைக்குப் பின் சிங்கப்பூர் செல்ல இருந்தது. ஏப்.20-ந் தேதி அதை சோதித்த விமான பொறியியல்லாளர் குமார் கணேசன், விமானம் எழும்புவதற்கான அழுத்தம் ஏற்பட மறுப்பதைக் கண்டார். அவை வேண்டுமென்றே வெட்டியிருப்பதைப் போல தோன்றியது. அதுவும் சரி செய்யப்பட்டு ஏப்ரல் 26-ந் தேதியே ''மக்களு'' விமானம் சிங்கப்பூர் பறந்து போய்விட்டது.

அடுத்த நாள் அதைத்தான் இந்திராவைக் கொல்ல நடந்த சதி - நாசவேலை என்று புனைந்து சி.பி.ஐ.யிடம் விசாரணைக்கு அனுப்பினர். ஏனென்றால் அடுத்த மாதம் மே.5-ந் தேதி இந்திரா வெளிநாட்டுப் பயணம் போகவிருந்த மூன்று போயிங் விமானங்களில் ஒன்று ''மக்களு''வாம்! உண்மை என்னவென்றால் பிரதமரின் வெளிநாட்டுப் பயணத்துக்கென நான்கு வேறு வேறு பாதுகாப்பு அமைப்புகளால் பரிசோதிக்கப்பட்ட மூன்று விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்படும். 24 மணி நேரத்துக்கு முன்புதான் எந்த விமானத்தில் போவது என்று தீர்மானித்து, அதன் பிறகு மேலும் பலத்த காவல் போடப்படும்.

ஆகவே, ''மக்களு'' விமானத்தில் தான் இந்திரா போவார் என்பது நிச்சயமில்லை. யாருக்கும் தெரியாது. அப்படியே நாசவேலை நடந்திருப்பதாக சந்தேகம் எழுந்திருந்தாலும் அந்தத் தடயங்களைப் பாதுகாத்து, விமானத்தைத் தடுத்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறின்றி விமானம் சரி செய்யப்பட்டு சிங்கப்பூர் போய்விட்டது. எனவே இந்திராவைக் கொல்ல நடந்த நாசவேலை என்பது பின்னர் கட்டிவிடப்பட்ட கதைதான்! வரவிருந்த அரசுத் தலைவர் பதவி தனக்குக் கிடைக்காது வெங்கட்ராமனுக்குப் போய்விடும் என்று பயந்த ஜெயில்சிங், இந்திராவிடம் தனக்குள்ள விசுவாசத்தைக் காட்டுவதற்காகக் கட்டிவிட்ட கதை

---

ஏற்று ''ராஜமரியாதை''யுடன் வரவழைத்து கண்துடைப்பு விசாரணை நடத்தினர்.

ஆயுத பேர ஊழல்கள் பற்றி சில அதிகாரிகளிடம் சி.பி.ஐ. விசாரித்தபோதும் சம்பந்தப்பட்ட, சந்தேகத்துக்குரிய ராஜீவிடம் விசாரிக்கவே இல்லை. முன்னாள் இராணுவத் தளபதி சுந்தர்ஜி சில இரகசியங்களை வெளியிட்டதும், வேறு உளவு வழக்கை விசாரிப்பதாகப் போய் அவரை மிரட்டியது, சி.பி.ஐ. ஆட்சி மாறிய பிறகு வி.பி.சிங் அமைத்த சிறப்பு விசாரணைக் குழு ஆயுத பேரங்கள் பற்றிய சில இரகசியங்களை வெளிநாடுகளில் இருந்து பெற்றதோடு, சுவிஸ் வங்கி கள்ளக் கணக்குகளை முடக்கியது. ஆனால், சந்திரசேகர் ஆட்சிக்கு ஆதரவளிப்பதற்கான நிபந்தனையாக இந்த ஊழல் விசாரணைகளை முடக்க வேண்டுமென்றது. ராஜீவ் கும்பல். இப்போது இவ்விசாரணைகள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டன.

● ஆயுத பேர ஊழல் இரகசியங்களை அறிந்துள்ள சந்திராசாமி, அருண் நேரு ஆகியோரை மடக்கவும், மிரட்டவும் அதுவரை கண்டு கொள்ளாதிருந்த சில விவகாரங்களைக் கிளறியது சி.பி.ஐ. சந்திராசாமி அந்நியச் செலாவணி குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு, மிரட்டி, ராஜீவ் கும்பலுக்கு ஆதரவாக மாற்றப்பட்டார். பிறகு வி.பி.சிங் மகன் வெளிநாட்டில் கள்ளக் கணக்கு வைத்திருப்பதாக ''போர்ஜரி'' - போலி ஆவணங்கள் தயாரித்து அவதூறு செய்ய சந்திராசாமி பயன்படுத்தப்பட்டார். செக். நாட்டு கைத் துப்பாக்கிகளை வாங்கியதில் ஊழல் செய்ததாக அருண் நேரு மீது புகார்கூறி, விசாரித்துப் பிரச்சாரம் செய்தது, சி.பி.ஐ. ஆனால், ஆதாரமில்லாததால் வழக்கை இழுத்தடித்து பின்வாங்கி விட்டது.

எதிர்த்தரப்புத் தொல்லை கொடுக்கும் முகமாக நுஸ்லி வாடியாவின் குடியுரிமை விவகாரத்தைக் கிளறிக் கைது செய்தது. அதிலும் சி.பி.ஐ. வெற்றி பெறமுடியவில்லை. வி.பி.சிங்கின் உறவினரும் அமேதி ''ராஜா''வுமான சஞ்சய் சிங், பூப்பந்தாட்ட வீரர் சையது மோசடி கொலை வழக்கில் சிக்கினார். அவருக்கும் சையது மோடி மனைவி அமீதாவுக்கும் இடையிலான கள்ள உறவை அம்பலப்படுத்தி எதிர்த்தரப்புக்கு எதிராக பிரச்சாரம் செய்தது. சி.பி.ஐ. ஜனதா தள ஆட்சியில் அவ்வழக்கைத் தொடர்ந்து நடத்தாது இழுத்தடித்தது. சந்திரசேகரோடு சஞ்சய் சிங் கட்சி மாறி ஆட்சி அமைத்தபோது வழக்கைக் கிடப்பில் போட்டது. சஞ்சய் சிங்கின் கூட்டாளியும் சையது மோடியின்



படிப்பகம்

www.padippakam.com

தான்! அப்போது நடக்கவிருந்த பல இடைத் தேர்தல்களில் இந்திரா கொலை முயற்சி - நாசவேலை எனக்காட்டி ஓட்டுப் பொறுக்கவும் தேவைப்பட்ட கதைதான்!

அதன் பிறகு சி.பி.ஐ. இன் கைவரிசை துவங்கியது. சி.பி.ஐ. பொறுப்பேற்ற இரண்டே நாளில் ஏர்-இந்திய நிறுவனப் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட ஐந்து பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களில் மூவர் கேபிள் - கம்பி சேதமடைந்ததை மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தவர்கள். இருவர் சுப்ரீம் கோர்ட் போய் வாதாடித் தப்பித்தனர். அவர்கள் பின்னர் குவைத் மற்றும் இலங்கை விமான நிறுவனங்களுக்குப் போய்விட்டனர். முதன் முதலில் சேதத்தைக் கண்டுபிடித்த குமார் கணேசன் உட்பட ஐந்து அதிகாரிகள் நாச வேலையில் சம்பந்தப்பட்டிருந்ததாக கைது செய்யப்பட்டனர். பின்னர் ஆதாரம் இல்லை என விடுவிக்கப்பட்டனர்.

இனி விசாரணையை சி.பி.ஐ. எப்படி நடத்தியது எனப் பார்ப்போம். நாசவேலை எனப்பட்ட கேபிள் கம்பிகள் தவிர சி.பி.ஐ. இடம் வேறு தடயம் ஏதும் கிடையாது. நாசவேலைதான் என நிரூபித்தாலும்(!) இந்திராவைக் கொல்வதற்காக நடந்த சதிதான் என்பதற்கும் ஆதாரம் கிடையாது. ஏனென்றால் இந்திரா இந்த 'மக்களு' விமானத்தில்தான் போவார்; இந்த நாசவேலை சோதனைகளின்போது தப்பிவிடும்; தப்பினாலும் இந்திரா பயணத்தின் போதுதான் விபத்து நேரும் என்றெல்லாம் யாரும் தீர்மானித்து அதைச் செய்திருக்க முடியாது. இது ஆதாரமற்ற கட்டுக்கதைதான் என்பதை அறிந்த எதிர்க்கட்சிகளும் மடக்கினர். ஆகவே கொலை முயற்சி - நாசவேலை என நிரூபிக்க வேண்டிய நிலைக்கு அரசு, குறிப்பாக மந்திரி ஜெயில்சிங் தள்ளப்பட்டதும் அந்தப் பொறுப்பை சி.பி.ஐ. ஏற்றது.

அந்த ''கேபிள் - கம்பிகளை யாரும் வேண்டுமென்று வெட்டி நாசவேலை செய்திருக்க முடியாது. ஏனென்றால் அவற்றை மூடி வார்க்கப்பட்டிருந்த உறை சேதமடையாமல் அப்படியே இருக்கின்றன. ஒரே வார்ப்பாக உள்ள கேபிளின் சில கம்பிகளைப் பிரித்து வெட்டி விடுவதும் எளிதல்ல என ஏர் - இந்திய விமான தொழில் நுட்ப வல்லுநர்கள் தெரிவித்தனர்.





**'மக்களு' விமானம் - இந்திரா கொலை முயற்சி தொடர்பாக கைது செய்யப்பட்ட ஊழியர் சுரேஷ் இனாம்தார். சி.பி.ஐ.யின் சித்திரவதை தாங்க முடியாமல் செய்யாத குற்றத்தை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.**

இருந்தாலும் சி.பி.ஐ. விடவில்லை. ஒரு நிபுணரைக் கொண்டு வெட்டுக் கத்திரியால் கேபிள் - கம்பிகள் வெட்டப் பட்டதாக முடிவு செய்தது. அந்த விமானப் பணிமனையில் இருந்த நூற்றுக் கணக்கான வெட்டுக் கத்திரிகளில் 570-ஐ கைப்பற்றியது. உருப்பெருக்கி மற்றும் இரசாயனச் சோதனைகள் மூலம் ஒரு வெட்டுக் கத்திரியில் நாசவேலை செய்த கேபிள் - கம்பிகளின் துகள்கள் ஒட்டி இருப்பதாகக் ''கண்டு பிடித்தது''. இடையில் பல நாட்கள் வெட்டுக் கத்திரிகள் எல்லாமே அப்படிப் பல வேலைகளுக்குப் பணிமனையில் பயன்பட்டிருந்தன. ஆனாலும், குறிப்பிட்ட வெட்டுக் கத்திரியை வைத்திருந்த சுரேஷ் பாண்டுரங்க் இனாம்தார் என்ற ஊழியரைக் கைது செய்தது. ஒப்புதல் வாக்கு மூலத்துக்காக மாஜிஸ்ட்ரேட் முன்பு நிறுத்தியபோது பல நாட்கள் சி.பி.ஐ. சித்திரவதைக்குள்ளானது வெளியாகியது. மருத்துவப் பரிசோதனையிலும் அது நிரூபணமானது.

சுரேஷ் இனாம்தாரைக் கைதுசெய்து கொண்டு போன சி.பி.ஐ. இரண்டு நாட்கள் அவரைத் தூங்க விடாது, நீர் நிரம்பிய ரப்பர் குழாயால் மூக்கிலும், பின் இடையிலும் முழங்காலிலும் தொடர்ந்து அடித்து சித்திரவதை செய்தது. பிறகு சாராயத்தை ஊற்றி மீண்டும் அடித்துத் துன்புறுத்திக் கட்டாயக் கையெழுத்து வாங்கியது. ஒரு வாரத்துக்குப் பிறகு நிர்வாணப்படுத்தி சுவரைப் பார்த்து நிற்க வைத்து மிளகாய்ப்பொடி தூவிய இரும்புக் கம்பியை அவரது ஆசனவாயில் நுழைக்கப் போயிற்று. பீதியுற்ற சுரேஷ் இனாம்தார் செய்யாத குற்றத்தை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

**கொலைகாரனுமான ஒருவன் கொலை செய்யப்பட்ட பிறகும் நடவடிக்கை எடுக்காமல் முடக்கிவிட்டது.**

**● ராஜீவ் கொலை விசாரணை என பல கோடி ரூபாய் செலவிட்டு நாயாய் அலையும் சி.பி.ஐ. 1984 நவம்பர் இந்திரா சாவைத் தொடர்ந்து 5000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் டில்லியில் கொல்லப்பட்ட வழக்கை முடக்கி வைத்திருக்கிறது. காரணம் காங்கிரசு மந்திரிகள், எம்.பி.கள் உட்பட ராஜீவ் கும்பலின் எடுபிடிகள்தாம் இக்கொலைகளைச் செய்தவர்கள். குறிப்பாக காங். எம்.பி. சஜ்ஜன் குமார் மீதான கொலைக் குற்றத்துக்குப் பிடிவாரண்டுடன் போன சி.பி.ஐ. அதிகாரிகளைக் காங்கிரசு குண்டர்கள் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டுத் தாக்க முனைந்தபோது, குற்றவாளியின் உதவியோடு தப்பி வந்தார்கள். அதே போல நுஸ்லி வாடியாவை அம்பானியின் ஆட்கள் கொல்வதற்கு முயன்ற சதி வழக்கைக் கைப்பற்றிய சி.பி.ஐ. அவர்கள் தப்பிவிடும் வகையில் வழக்கை முடக்கிவிட்டது.**

**● ராஜீவ் கும்பலைச் சேர்ந்தவர்கள் மீதான பிற மோசடி வழக்குகளுக்குப் பொறுப்பேற்ற சி.பி.ஐ. அவற்றை வேண்டுமென்றே முடக்கி வைத்ததற்கும் சான்றுகள் உள்ளன. உதாரணமாக, ராஜீவின் பின்பலமும் பினாமி முதலாளியுமான அம்பானி லார்சன் அண்டு டூப்ரோ கம்பெனியைக் கைப்பற்ற அரசு நிதி நிறுவனங்களைக் கேடாகப் பயன்படுத்திய வழக்குகள், அம்பாணியின் ரிலையன்ஸ் கம்பெனியின் அந்நியச் செலாவணி, பங்குச் சந்தை மோசடி வழக்குகளைப் புலனாய்வு செய்ய எடுத்துக் கொண்டு உண்மையில் அவற்றை முடக்கவும் மூடி மறைக்கவும் வேலை செய்தது. சி.பி.ஐ.**

**● ராஜீவின் கூட்டாளி சத்தீஷ் சர்மா செய்த சர்க்கரை இறக்குமதி ஊழலையும் , இன்னொரு கூட்டாளியான சாம் பிட்ரோடா செய்த தொலைபேசி ஒப்பந்தம் (சி.டாட்) மோசடியையும் இதே போல மூடி மறைக்க வேலை செய்தது, சி.பி.ஐ. 1989-இல் ராஜீவ் அரசு செயற்கையான பற்றாக்குறை ஏற்படுத்தி ''வீல் இன்டர்நேஷனல்'' என்கிற பதிவு செய்யாத நிறுவனத்தின் மூலம் பல கோடி ரூபாய்க்கு சர்க்கரை இறக்குமதி செய்தது. அந்தக் கம்பெனிக்கு சத்தீஷ் சர்மாதான் சிபாரிசு செய்தார் என மந்திரியின் குறிப்பும் உள்ளது. ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு உழைப்பதாகப் பீற்றிக் கொள்ளும்**



படிப்பகம்

www.padippakam.com

இந்திராவைக் கொல்ல முயற்சி, நாச வேலை, விமான சட்டம் மீறல் ஆகிய குற்றங்களை முதலில் சுரேஷ் இனாம்தார் மீது சுமத்திய சி.பி.ஐ. கொலை முயற்சியை நிரூபிக்க முடியாது என உணர்ந்து அதை மட்டும் பிறகு நீக்கி விட்டு வழக்கைத் தொடர்ந்தது. இந்திராவைக் கொல்வதற்கு நாச வேலை சதி என நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய ''மக்களூ விவாகர''த்தில் சி.பி.ஐ.யின் எஜமான விசுவாசத்துக்காக பலியிடப்பட்ட சுரேஷ் இனாம்தாரின் வழக்கு நமக்குத் தெரிய இன்னமும் விசாரணைக்குக் காத்திருக்கிறது!

● ● ●

நிரபராதிகள் மீது கொலைப் பழி சுமத்தித் தண்டிப்பதைப் போலவே, கொலையாளிகளைத் தப்புவிப்பதும் சி.பி.ஐ.யின் வாடிக்கையாக உள்ளது. இதற்குச் சான்றாக விளங்குவது எல்.என்.மிஸ்ரா கொலை வழக்கு. இந்திய அரசியல் வரலாற்றில் முதன்முதலாக, அதுவும் வெடிகுண்டு வைத்துக் கொல்லப்பட்டவர் மத்திய அமைச்சர் லலித் நாராயண் மிஸ்ரா. இந்த கொலைச்சதியில் பாசிச இந்திராவே சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்கான தடயங்கள் சிக்கின. எனவேதான் ஆரம்பத்தில் வழக்கைத் திசைதிருப்ப முயன்ற சி.பி.ஐ. விசாரணைப் பொறுப்பேற்று 16 வருடங்களாகியும் குற்றவாளிகளைப் பிடிக்காது, வழக்கைக் கிடப்பிலே போட்டுவிட்டது.

பாசிச இந்திராவின் அவசர நிலை ஆட்சிக்கு முந்தைய மந்திரி சபையில் முக்கிய புள்ளி எல்.என்.மிஸ்ரா. காரணம் அவர் இந்திராவின் பிரதிநிதியாக இருந்து பல லஞ்ச ஊழல் மோசடிகள் செய்தவர். இரயில்வே தொழிலாளரது 1974-ம் ஆண்டு மாபெரும் போராட்டத்தை ஒடுக்கியவர். சஞ்சயின் மாருதி கார் கம்பெனியில் ஏராளமாக முதலீடு செய்திருந்தவர். ஆனால் பாண்டிச்சேரி லைசென்சு ஊழல் - கள்ளக் கையெழுத்து உட்பட பல வழக்குகளில் அம்பலமாகி இருந்தும் அவரை மந்திரி சபையிலிருந்து நீக்க முடியாதபடி இந்திரா சிக்கிக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில்தான், 1975 ஜனவரி 3-ந் தேதி பீகார், சமஸ்திபூரில் ஒரு புதிய ரயில்பாதை திறப்புவிழா மேடையில் குண்டு வெடித்து படுகாயமுற்றார். உடனடி சிகிச்சை அளிக்காது, அன்றே மாண்டு போனார். அவரது உடல் மருத்துவப் பரிசோதனை செய்யாமல் எரிக்கப்பட்டது. காங்கிரசு சதிதான் மிஸ்ரா கொலைக்குக் காரணம் என எதிர்க்கட்சிகள் வாதாடின. அப்போது நடந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையிலான 'முழுப்புரட்சி' இயக்கம் உருவாக்கிய நிலைமைதான் காரணம் எனக் காங்கிரசு பழிபோட்டது. ஆர்.எஸ்.எஸ். ஆனந்த் மார்க்கம், ரயில்வே தொழிலாளர்கள் எனச் சந்தேகம் விரிந்தது. சி.பி.ஐ.யிடம் வழக்கு ஒப்படைக்கப்பட்டது. அது அருண் குமார் தாகூர், அருண் குமார் மிஸ்ரா ஆகிய இருவரைப் பிடித்து விசாரிக்கவே சிவநாராயண் சர்மா, ''தலைவர்'' ஜா ஆகிய இருவர் தூண்டுதலால் எல்.என்.மிஸ்ராவைக் கொன்றதாக வாக்குமூலம் அளித்தனர். ஆனால் எவ்வளவோ முயன்றும் ''தலைவர்'' ஜா என்பவர் யார் எனக் கூற மறுப்பதாகவும் மேற்கொண்டு அவர்களை விசாரிக்கும்படியும் பொறுப்பை பீகார் இரகசியப் போலீசிடம் (சி.ஐ.டி) விட்டுவிட்டது சி.பி.ஐ.



**எல்.என்.மிஸ்ரா கொலை விசாரணையை வேண்டுமென்றே சிதைத்து, நாசம் செய்தது, சி.பி.ஐ. ஏனெனில், காங்கிரசு தலைமை இதில் சம்பந்தப் பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் சிக்கின.**

சமஸ்திபூர் ஜெயிலர் எஸ்.ஏ.ரகிமான் தாகூர், மிஸ்ராவிடம் நைச்சியமாகப் பேசி ''தலைவர்'' ஜா என்பவர் அப்போதைய பீகார் மேலவை காங்கிரசு உறுப்பினர் ராம் விலாஸ் ஜா எனக் கண்டுபிடித்து, ஒரு டேப்பில் பதிவும் செய்துவிட்டார். 20000 ரூபாய்க்கு எல்.என்.மிஸ்ராவைக் கொல்லும்படி தூண்டியவர் காங்கிரசுக்காரர் ஜா என்பதற்கு ஆதாரம் சிக்கியது. ஆனாலும் வழக்கை வேறு திசையில் திருப்புவதற்காக பீகார் சி.ஐ.டி.யை முதலில் கழட்டிவிட்டது சி.பி.ஐ. அப்போது உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி ரேவைக் கொல்ல முயன்றதாகக் கைதான நான்கு ஆனந்த மார்க்கிகளை எல்.என்.மிஸ்ரா கொலை வழக்கில் சேர்த்துக் கொண்டது. பிறகு முதலில் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் தந்திருந்த தாகூர், மிஸ்ரா ஆகிய இருவரையும் சிறையிலிருந்து அனுப்பிவிட்டது.

கைதான நான்கு ஆனந்த மார்க்கிகளில் ஒருவரான விக்ரம் ''அப்ரூவராகித் தந்த'' வாக்குமூலத்தின் அடிப்படையில் மீதி மூவர்க்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. வழக்கு மேல் முறையீட்டுக்குப் போனது. அதற்குள் அவசர நிலை வந்து போய் ஜனதா ஆட்சி ஏற்பட்டது. ஆனந்த மார்க்கிகள் நிரபராதிகள் என்றும் மீண்டும் விசாரணை நடத்த வேண்டும் என்றும் எல்.எஸ்.மிஸ்ராவின் மனைவி கமலேஸ்வரி அப்போதைய உள்துறை மந்திரி சரண்சிங்கிடம் கோரினார். காங்கிரசு எம்.எல்.சி. சம்பந்தப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ளும் ஒலிநாடாவை சரண்சிங்குக்குப் போட்டுக் காட்டியது பீகார் சி.ஐ.டி. அப்படியும் எதையும் பெறவில்லை என சி.பி.ஐ மறுத்தது. ஆனால் சி.பி.ஐ பெற்றதற்கான அத்தாட்சி தரப்பட்டதும் அது குறித்து விசாரிக்கும்படி உத்திரவிட்டார் சரண்சிங். பொறுப்பேற்ற

**அரசின் அறிவியல் ஆலோசகர் சாம்பிட்ரோடா தொலைபேசித் துறையை நவீனப்படுத்தும் திட்டம் வரைந்தார். அதற்கான இயந்திரங்களை அமெரிக்காவில் உள்ள தனது சொந்தக் கம்பெனியிடம் இருந்தே இறக்குமதி செய்து மோசடியில் ஈடுபட்டார். சர்க்கரை, தொலைபேசி சாதனங்களை கொள்ளை விலையில் இறக்குமதி செய்த இவ்விருவர் மீதும் வழக்குத் தொடுக்காமல் இழுத்தடிக்கிறது. சி.பி.ஐ.**

**● முன்னாள் பிரதமர் ராஜீவும், இன்னாள் பிரதமர் நரசிம்மராவும் நேரடியாக சம்பந்தப்பட்ட இரு வழக்குகளை முடக்கி வைத்திருக்கிறது சி.பி.ஐ. ஏ-320 ரக விமானங்களின் விபத்தை அடுத்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது வி.பி.சிங் அரசு. ஆனால், நிபுணர்களின் சிபாரிசை மீறி பிரெஞ்சு கம்பெனியிடம் ரூ.2500 கோடிக்கு விமானங்களை வாங்கியதில் ஊழல் நடந்திருப்பது சம்பந்தமான கோப்புகள் மாயமாய் மறைந்து போயின என்றது. சி.பி.ஐ. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விசாரித்த சி.பி.ஐ. ராஜீவை விசாரிக்கவே இல்லை.**

**● வி.பி.சிங் மகனுக்கு வெளிநாட்டில் கள்ளப் பணம் இருப்பதாக சந்திராசாமி கும்பல் மூலம் போர்ஜரி - போலி ஆவணங்கள் தயாரித்து அவதூறு செய்தது ராஜீவ் அரசு. அப்போதைய வெளியுறவு மந்திரியாக இருந்த நரசிம்மராவ் இதற்கு உடந்தையாக இருந்தார் என்பது கண்டுபிடிக்கப் பட்டது. அதனால் சந்திரசேகர் - நரசிம்மராவ் ஆட்சிகள் ஏற்பட்ட பிறகு இந்த வழக்கையும் கிடப்பில் போட்டுவிட்டது. சி.பி.ஐ.**

**● இதேபோல ராஜீவ் கும்பலின் கூட்டாளிகள் மீதான வழக்குகளைக் கூட விசாரணைக்கு எடுத்துக் கொண்டு முடக்கி விடுகிறது. சி.பி.ஐ. உதாரணமாக ஜெயலலிதா - ஜானகி நடத்திய சக்களத்திச் சண்டையின் போது, அ.தி.மு.க. எம்.பி. தங்கராஜு தன்னை விலைக்கு வாங்க ஜெயலலிதா கொடுத்தது என ரூ.5 லட்சத்தை நாடாளுமன்றத்தில் கொட்டிக் காட்டினார். அப்பணமும் விசாரணையும் சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்பட்டது. விசாரணை நடத்தி குற்றவாளி ஜெயலலிதாவைத் தண்டிப்பதற்குப் பதில் அவரை மிரட்டி அரசியல் ஆதாயம் அடைவதற்கு ராஜீவ் கும்பலுக்கு உதவியது. சி.பி.ஐ.**

**● வி.பி.சிங்கின் பெயரால் ஒரு போலிக் கடிதம் - ''போர்ஜரி'' வெளியிட்டார், தேவிலால் - ராஜீவ் கும்பலின் உதவியுடன். இந்த**



படிப்பகம்

www.padippakam.com

சி.பி.ஐ. அதிகாரி தவறேதும் நடக்கவில்லை. மறுவிசாரணை தேவையில்லை எனக் கூறிவிட்டார்.

பிறகு உள்துறைத் துணை மந்திரி டி.கே.மண்டல், பீகார் முதல்வர் கர்பூரிதாகூர் ஆகியோர் முயற்சியால், வழக்கைப் பரிசீலிக்கும்படி முதலில் பிரபல வக்கீல் கார்ல் கண்டலவாலாவும் பிறகு நீதிபதி தார்குண்டேயும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். தார்குண்டேயின் பரிசீலனையில் சி.பி.ஐ.யின் கைவரிசை பற்றிய பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

எல்.என்.மிஸ்ரா கொலை விசாரணையை வேண்டுமென்றே சிதைத்து நாசம் செய்துவிட்டது. சி.பி.ஐ: இதற்கு இந்திராவே துண்டுதலாக இருந்திருக்க வேண்டும்: முதலில் கைது செய்யப்பட்ட தாகூர், மிஸ்ரா ஆகியோர் தந்த வாக்குமூலப்படி கொலைக்குத் துண்டிய காங்கிரசு எம்.எல்.சி. ராம்விலாஸ் ஜாவையும் அவரது கூட்டாளியுமான ரகுநாத் பாண்டேயையும் கொலைக்குச் சில நாட்கள் முன்பு இரகசியமாக பீகார் வந்த இந்திராவின் அந்தரங்கத் தூதர் யஷ்பால் கபூர் சந்தித்திருக்கிறார்.

முன்னாள் போலீசுக்காரரான இந்த எம்.எல்.சி. ஜா மீது எல்.என்.மிஸ்ரா மனைவி சந்தேகம் எழுப்பினார். உடனே சி.பி.ஐ. இயக்குனர் டி.சென், ''ஜாவைச் சந்தேகிக்க வேண்டாம். அப்புறம் அது யஷ்பால் கபூரையும் மேல் மட்டத்தையுமே சந்தேகிக்க வேண்டிப்போகும்'' என்று கூறித் தடுத்துவிட்டார். அது மட்டுமல்ல; குற்றவாளிகளிடம் காங்கிரசு எம்.எல்.சி. தொடர்பு பற்றிய ஆதாரத்தைப் பெற்ற ஜெயிலர் ரகுமான் விவகாரத்தில் இந்திராவே நேரடியாகத் தலையிட்டார்: அப்போதைய பீகார் முதல்வரை டில்லிக்கு அழைத்து அந்த ஜெயிலருக்கு ஏன் பதவி உயர்வு அளித்தீர் எனக் கடிந்து கொண்டார். இந்திரா. நாட்டின் பிரதமர் ஒரு மாவட்ட ஜெயிலர் விவகாரம் குறித்துக் கவனம் செலுத்தியது புதிராக உள்ளதென்றார் தார்குண்டே.

ஆனந்தமார்க்கிகள் மீது குற்றஞ்சுமத்திய சி.பி.ஐ. முக்கிய சாட்சியமாக பொதுப்பணித்துறை ஊழியரும் போலீசு உளவாளியுமான மதன் மோகன் ஸ்ரீவத்சவாவை நிறுத்தியது. தான் ஆனந்த் மார்க்கத்தில் விசுவேசுநானந்த் என்ற பெயரில் உறுப்பினராக இருந்ததாகவும், எல்.என்.மிஸ்ரா, அப்துல் கபூர் போன்ற தலைவர்களை கொல்ல வேண்டுமென பிற ஆனந்த் மார்க்கிகள் பேசிக் கொண்டதை ஒட்டுக்கேட்டதாகவும் சாட்சியம் சொன்னார். இந்தப் பொய் சாட்சிக்காக 11 ஆண்டுகளுக்குப் பிறகு பழைய சீனியாரிட்டி கிராக்கிச் சம்பளத்தோடு மீண்டும் பொதுப்பணித் துறையில் வேலை தரப்பட்டது. வேறொரு கொலை முயற்சியில் ஈடுபட்டதாக அவர் கூறிய ஒப்புதல் வாக்குமூலமும் கண்டு கொள்ளப்படவில்லை. உண்மை என்னவென்றால் அவர் ஆனந்த் மார்க்கியே அல்ல; போலீசு உளவாளியாக செயல்படுபவர்.

சமஸ்திப்பூர் கலெக்டர் அலுவலக ஊழியர் **கிரிஜானந்தன்** பிரசாத்தைப் பிடித்து. குண்டு வைப்பதற்கு முன்பு ஆனந்தமார்க்கிகள் தனது வீட்டில் தங்கியிருந்ததாக சாட்சியம் கூறவைத்தது, சி.பி.ஐ. அது சித்திரவதை காரணமாகக் கூறிய சாட்சியம் என்று பின்னர் அவரும் அதை மறுத்து விட்டார். அப்ரூவராக்கப்பட்ட ஆனந்தமார்க்கி விக்ரம் தனது மூக்கில் கம்பியை நுழைத்து மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்ததால் ஒப்புதல் சாட்சியம் அளித்ததாக கூறிவிட்டார். நீதிபதி ஏ.என்.ரே மீதான கொலை முயற்சி வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்த மூன்று ஆனந்தமார்க்கிகள் 11 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை ஆயினர். ஆனால் எல்.என்.மிஸ்ரா கொலை வழக்கைக் கிடப்பில் போட்டு விட்டது, சி.பி.ஐ. தனது எஜமானர்களான இந்திரா கும்பல் மீதான சந்தேகத்தில் இருந்து வழக்கைத்தான் திசை திருப்பிவிட்டதே! பிறகென்ன?

**● ஆர். கே.**

# அச்சுறுத்தலுக்கு அஞ்சிடோம்!

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

ராஜீவ் படுகொலை தொடர்பாக விசாரித்து வரும் சி.பி.ஐ.யின் சிறப்பு புலனாய்வுக் குழு, ஆளுங் கும்பலுக்கு விசுவாசமாக அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் புதிய ஜனநாயகம் இதழை கோழைத்தனமாக மிரட்டியதைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

கடந்த ஜூலை மாதம் 17-ம் தேதியன்று இக்குழுவைச் சேர்ந்த இருவர் நமது இதழுக்கு அச்சக உரிமம் அளித்துள்ள அச்சகத்தார், ஒளி அச்சுக் கோர்ப்பவர், ஒப்பந்த அச்சகத்தார் ஆகியோரிடம் சென்று சட்ட விரோதமாக இதழ் அச்சிடுவதை நிறுத்திவிடுமாறு எச்சரித்துள்ளனர். புதிய ஜனநாயகம் இதழை அச்சிடுவது சட்ட விரோதமானது. தேச விரோதமானது என்கிற தொனியில் அச்சுறுத்தியுள்ளனர்.

இதன் விளைவாக பீதியடைந்த அச்சகத்தார் நமது இதழைத் தொடர்ந்து அச்சிட மறுத்து விட்டனர். எனவே புதிய ஜனநாயகம் இதழ் மீதான சி.பி.ஐ.யின் மிரட்டல் பற்றி பத்திரிகை கவுன்சிலிடம் முறையிட்டோம். இதைத் தொடர்ந்து நமது புகார் மனுவுக்கு விளக்கம் அளிக்குமாறு சி.பி.ஐ.யிடம் பத்திரிகை கவுன்சில் கோரியுள்ளது.

மேற்கூறிய நிலைமைகளின் காரணமாகவும், உடனடியாக இதழைத் தொடர்ந்து அச்சிட மாற்று ஏற்பாடுகளைச் செய்ய சாத்தியமில்லாததாலும் கடந்த ஆகஸ்ட் மாத இரு இதழ்களையும் எம்மால் வெளியிட இயலவில்லை. அதே சமயம் இத்தகைய சட்ட விரோத அச்சுறுத்தலுக்கு அடிபணிவதோ, சமரசம் செய்து கொள்வதோ புதிய ஜனநாயகத்தின் வழியல்ல. மக்களைச் சார்ந்து நின்று போராடுவதன் மூலமே ஆளுங்கும்பலின் ஏவல் நாயான சி.பி.ஐ.யின் அதிக்கிரமங்களை முறியடிக்க முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். இப்போராட்டத்தில் உழைக்கும் மக்களின் ஒத்துழைப்பு நிச்சயம் எமக்குண்டு என்ற நம்பிக்கையுடன் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

புதிய ஜனநாயகம் இதழ் மீதான சி.பி.ஐ.யின் மிரட்டலை அறிந்ததும் உடனடியாக சுவரெழுத்து - சுவரொட்டி பிரச்சாரம் செய்து, மக்களிடம் இப் பிரச்சினையைக் கொண்டு சென்ற புரட்சிகர அமைப்புகளுக்கும் வாசகத் தோழர்களுக்கும் எமது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

**— ஆசிரியர் குழு.**

வழக்கு விசாரணையை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்தது வி.பி.சிங் அரசு. பிரதமர், அரசுத் தலைவர், துணைப் பிரதமர் சம்பந்தப்பட்ட இந்த ''போர்ஜரி'' கடித வழக்கில் வேறு பிறரை விசாரித்த சி.பி.ஐ. தேவிலாலை அணுகவே இல்லை. ராஜீவை ஆதரிக்கவும், வி.பி.சிங் மீது அவதூறு பரப்பவும் செய்த ''போர்ஜரி'' என்பதால், இவ்வழக்கையும் முடக்கிவிட்டது, சி.பி.ஐ.

— இந்தச் சான்றுகள் எல்லாம் காட்டுவது என்ன? அரசு மற்றும் அதன் ஆதரவு பிரச்சாரச் சாதனங்கள் பரப்புவது போல சி.பி.ஐ. என்பது துப்பறியும் தொழிலில் சூரப்புலியோ, பாரபட்சமில்லாத நடுநிலையானதோ, நேர்மை - வாய்மை உடையதோ அல்ல. அது லஞ்ச ஊழலுக்கு அப்பாற்பட்டதோ, அரசியல் சார்பற்றதோ அல்ல. மூன்றுமுறை பதவி நீட்டிப்புப் பெற்ற மோகன் கத்ரே என்ற அதன் முன்னாள் இயக்குநரே நுஸ்லிவாடியா கொலை முயற்சி சதி வழக்கை விசாரிக்கக் கூடாதென சுப்ரீம் கோர்ட்டால் தடை செய்யப்பட்டிருந்தார். ஏனெனில், எதிரி அம்பாணியின் கம்பெனியில் இந்த சி.பி.ஐ. இயக்குநர் ஒரு பங்குதாரர். காஷ்மீர் ''பயங்கரவாதிகள்'' பட்டியலில் இருந்து ஒருவரை நீக்குவதற்காக சி.பி.ஐ.யின் டி.ஐ.ஜியே 10 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கிப் பிடிபட்டார். சந்திராசாமி சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்த இன்னொரு டி.ஐ.ஜி. சந்திரசேகர் - ராஜீவ் கும்பலால் பழிவாங்கப்பட்டு துணை ராணுவப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்; அவர் வழக்கும் போட்டுள்ளார்.

சி.பி.ஐ. ஒரு இரக்சிய உளவு அமைப்பு என்பதால் அதன் திரை மறைவு வேலைகள் பலவும் வெளி வருவதில்லை. அதன் செயல்பாடுகளில் நம்பிக்கை இல்லாததால்தான் நாட்டிலுள்ள 25 மாநிலங்களில் 11-இல் சி.பி.ஐ. தடை செய்யப்பட்டிருக்கிறது. அங்கு சி.பி.ஐ. நுழைந்து தனது கை வரிசையைக் காட்ட முடியாது. சி.பி.ஐ.யின் அதிகார முறைகேடுகள், அதிக்கிரமங்கள் பலவும் இந்தியச் சட்டத்துக்கே எதிரானவை, மாறானவை. நியாயமாக, சட்டப்படி விசாரித்து நடவடிக்கை எடுத்தால் சி.பி.ஐ.யின் கிரிமினல் குற்றங்களே கடுமையான தண்டனைக்குரியவை. ஆனால், அரசின் மிக முக்கியமான, இரகசியமான அங்கம் என்பதால் இக்கிரிமினல் குற்றங்களுக்கான தண்டனையில் இருந்து சி.பி.ஐ. தப்பித்துக் கொண்டு வருகிறது. அதன் தகிடுதத்தங்களால் பல நிரபராதிகள் பலியிடப் படுகின்றனர்.●



படிப்பகம்

www.padippakam.com

# கட்டுப்பாடற்ற கொள்ளைக்கு கதவு திறந்தது

ஆட்சிக்கு வந்ததுமே ரூபாயின் மதிப்பைக் குறைத்தும், தங்கத்தை அடகு வைத்தும், கடும் நிபந்தனைகளை ஏற்று கடன் வாங்கியும் நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்த சிறுபான்மை காங்கிரசு அரசு, ஏழைகளை ஏறி மதிக்கும் மிகப் பெரிய பொருளாதாரத் தாக்குலை பட்ஜெட் என்ற பெயரில் கொண்டு வந்துள்ளது. பரந்துபட்ட மக்களுக்காகப் போராடும் பலம் வாய்ந்த ஒரு அமைப்பு இல்லாத தைரியத்தில் மீண்டும் கட்டண உயர்வு, விலையேற்றம், வரி விதிப்புகளைத் தீவிரமாக்கியுள்ளது.

பெட்ரோல் - பெட்ரோலியப் பொருட்களின் விலையை கிடுகிடுவென உயர்த்தியும் ரயில்வே பயண - சரக்கு கட்டணங்களை அநியாயமாக கூட்டியும், புதிதாக 2,617 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளைப் போட்டும், உரம், சர்க்கரை விலையை உயர்த்தியும், பாமர மக்களின் தலையில் மேலும் பொருளாதாரச் சுமைகளை ஏற்றியுள்ளது. அதேசமயம் அன்னிய ஏகாதிபத்தியங்கள் நாட்டைச் சூறையாடவும், தரகுப் பெரு முதலாளிகளின் கொள்ளைச்-சுரண்டலுக்கும் கணக்கற்ற சலுகைகளை வாரியிறைத்துள்ளது.

### மறு அடகு வைத்தும் கூட மறுபடியும் பற்றாக்குறை

உலகெங்கும் பெட்ரோல் விலை நிலைப்படுத்தப் பட்டுள்ளபோது இந்தியாவில் மட்டும் விலை உயர்வு; கடந்த ஆண்டைவிட வருவாய் அதிகரித்த போதிலும் கூட புதிதாக ரயில் கட்டண உயர்வு; உற்பத்தி பெருகிய போதிலும் சர்க்கரை விலையேற்றம்; இத்தனையும் போதாதென்று 2617 கோடி ரூபாய்க்கு வரி விதிப்பு. ஆகா! இது முற்போக்கான பட்ஜெட் என்று துதிபாடுகின்றன பத்திரிக்கைகள். பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கை என்று ஆரவாரிக்கின்றனர் தரகுப் பெருமுதலாளிகள்.

இருப்பினும் 7,719 கோடி ரூபாய்க்கு பட்ஜெட்டிலே பற்றாக்குறை. பட்ஜெட் பற்றாக்கறை பணவீக்கத்திற்கும் விலையேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பது பொருளாதார அரிச்சுவடி. ஆனாலும், அவை கட்டுப்படுத்தப்படும் என்று நம்பச் சொல்கிறார் நிதி மந்திரி.

இதில் வேடிக்கை என்னவென்றால், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதே எங்கள் முதற்கடமை என்று சிறுபான்மை காங்கிரசு அரசு சவடால் அடித்துக் கொண்டிருக்கும்போதே பட்ஜெட் அறிவிக்கப்பட்டதும் அத்தியாவசியப் பொருட்கள் கிடுகிடுவென விலையேறிவிட்டது. பருப்பு விலை கிலோ 22 ரூபாயாக உயர்ந்துவிட்டது. சமையல் எண்ணெய் கிலோ 40 ரூபாயாக அதிகரித்து விட்டது. பட்ஜெட்டுக்கு முன்பு ஏறிய காய்கறிகளின் விலை இன்னும் இறங்கவே இல்லை. சர்க்கரையின் விலையைக் கேட்டாலே கசக்கிறது.

ஆனாலும், இது நெருக்கடியில் சிக்கிய பொருளாதாரத்தை சரியான பாதைக்குத் திருப்பி விடும் முயற்சி; அதை விமர்சிப்பது சரியல்ல; முந்தைய அரசினால் ஏற்பட்ட பற்றாக்குறை இழப்பை புதிய அரசு உடனடியாக ஈடு செய்ய முடியாது; எனவே நாட்டு நலன் கருதி மக்கள் இந்தச் சுமைகளை தற்காலிகமாக ஏற்றுத் தியாகம் செய்ய வேண்டும் என்கின்றனர், ஆட்சியாளர்களும் பத்திரிகைகளும்.

முந்தைய பட்ஜெட்டுகளுக்கும் தற்போது 'பொருளாதார சூரப்புலி' மன்மோகன் சிங் தயாரித்துள்ள பட்ஜெட்டுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு முற்றாக மறு அடகு வைத்து தயாரிக்கப்பட்டுள்ள பட்ஜெட் என்பதுதான் இது.

### உலக வங்கி உத்திரவுப்படி உருவான பட்ஜெட்

ரூபாய் மதிப்பைக் குறைப்பது, அன்னிய முதலீடுகளுக்கு தடையற்ற விரைவான அனுமதி, உணவு மற்றும் சேவைத் துறைகளுக்கான மானியங்களை வெட்டுவது, தனியார் மயமாக்கலை தீவிரமாக்குவது, அரசுத் துறையை முடமாக்குவது, சிறு விவசாயிகள் - கைத்தொழிலுக்கான கடன்களை நிறுத்துவது, கட்டுப்பாடற்ற தாராள தொழிற்கொள்கை - என்பன ஐ.எம்.எப். விதிக்கும் கடும் நிபந்தனைகள்.

ஐ.எம்.எப்.பிடம் கடன் வாங்குவதற்காக அதன் நிபந்தனைகளை நிறைவேற்றும் விதத்தில்தான் புதிய பட்ஜெட் தயாரிக்கப் பட்டுள்ளது. இதன்படி பெருமுதலாளிகள் ஏகபோகமாக குறிப்பிட்ட தொழிலில் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்கும் ஏகபோகத் தடுப்புச் சட்டம் (MRTP) குப்பைக் கூடையில் வீசப்பட்டுள்ளது. அந்நிய நிறுவனங்கள் 51% வரை நேரடியாக முதலீடு செய்ய தாராள அனுமதி, 18 தொழிற்துறைகளைத் தவிர மற்றவற்றுக்கு பெருமுதலாளிகள் லைசென்சு பெறத் தேவையில்லை; அன்னிய தொழில்நுட்பக் கூட்டுக்கு உடனடி அனுமதி, சுங்க வரி எக்சைஸ் வரி குறைப்பு, அரசுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்கும் வகையில் அதன் பங்குகளை விற்பது, கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கிக் கொள்ள உதவிகள் - என்று அடுக்கடுக்கான சலுகைகளை தரகுப் பெருமுதலாளிகளுக்கும், அன்னிய ஏகாதிபத்தியங்களுக்கும் நிதி மந்திரி வாரிக் கொடுத்துள்ளார்.

> தற்போதைய பட்ஜெட் வெறுமனே பொருளாதார ரீதியான தாக்குதல் மட்டுமல்ல; அரசியல், பொருளாதாரம், இராணுவம் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு மறுஅடகு வைப்பதற்கான ஏற்பாடு.

அதே சமயம், சிறு விவசாயிகளுக்கான கடன் தருவதை நிறுத்தி வைப்பது, உரத்துக்கான மானியத்தை ரத்து செய்து விலையேற்றம், சர்க்கரை விலையேற்றம், மக்களின் அடிப்படை வசதிகளை - சாலை, மின்சாரம், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி முதலானவற்றுக்கான மானியங்களை வெட்டிச் சுருக்குவது, விவசாயத்தையும் கிராமப் புறங்களையும் முற்றாகப் புறக்கணிப்பது, அரசுத் துறையிலுள்ள தொழிலாளர்களை படிப்படியாக வேலையிலிருந்து விரட்டுவது என்பதாக முழுக்க முழுக்க ஐ.எம்.எப். உத்திரவுப்படி நிதிமந்திரி இந்த பட்ஜெட்டைத் தயாரித்துள்ளார். ஆட்சியாளர்களின் எஜமானர்களான ஏகாதிபத்தியங்களும், உலக வங்கியும் பொருத்தமான பட்ஜெட் தயாரித்துள்ளதாக நிதி மந்திரியைப் பாராட்டியுள்ளனர்.

### மன்மோகன்சிங்கின் மாய்மாலம்

முந்தைய தே.மு. அரசு கூட்டுறவு வங்கிகளிடம் விவசாயிகள் பெற்ற கடனை ரத்து செய்வதற்காகக் கூறி பின்னர் பட்டை நாமத்தைப் போட்டு ஏய்த்தது. அதேபோல இப்போதைய காங்கிரசு அரசும் பட்ஜெட்டிலே விவசாயிகளுக்கு எந்த நிவாரண உதவியுமின்றி ஓட்டாண்டிகளாக்கியுள்ளது. போதாக்குறைக்கு உரவிலையை 30% உயர்த்தி விவசாயிகளை வறுமைப் படுகுழியில் தள்ளிவிட்டுள்ளது.

ஆனாலும், விவசாயம் - கைத்தொழில் மேம்பாட்டுக்காகவும் கிராமப்புற வளர்ச்சிக்காகவும் 50%க்கு மேல் ஒதுக்கியுள்ளதாக மாய்மாலம் செய்கிறார் நிதிமந்திரி. மத்திய திட்டச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 15% நிதியில்தான் விவசாயத்துக்கென 50% ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது மொத்த பட்ஜெட்டில் ஏறத்தாழ 7.5% தான் விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

### ராணுவத்துக்குப் பெருந்தீனி

கடந்த ஆண்டைவிட பற்றாக்குறையைக் குறைத்துவிட்டதாக பாசாங்கு செய்து கொண்டே, மிக அதிகமாக ராணுவச் செலவுகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது காங்கிரசு அரசு. எல்லையில் போருக்கான அபாயம் இல்லாத போதிலும் கூட மொத்தப் பட்ஜெட்டில் 13%ஐ ராணுவத்துக்கு ஒதுக்கி கடந்த ஆண்டைவிட மேலும் 1000 கோடி ரூபாயை விரயமாக்குகிறது. பெரும் வல்லரசுகளே ஆயுதக் குறைப்பில் ஈடுபடும்போது ஏழை நாடான இந்தியா தனது வருவாயில் 13% தொகையை ராணுவத்துக்காக செலவி


படிப்பகம்

www.padippakam.com

டுவது என்பது அக்கிரமமானது. தெற்காசிய பிராந்தியத்தில் விரிவாக்க துணை வல்லரசாக ஆதிக்கம் செய்யத் துடிக்கும் ஆளும் வர்க்கங்களின் பேராசைக் கொள்கையின் பிரதிபலிப்புதான் இது. ஆனாலும், போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து எதிர்த் தரப்பும் இப் பூதாகரமான ராணுவச் செலவை நியாயப்படுத்தவே செய்கின்றன.

### கிராமப்புறங்கள் புறக்கணிப்பு

கடந்த ஆண்டைவிட கிராமப்புற வளர்ச்சிக்காக ஏறத்தாழ 400 கோடி அதிகரிப்பு என்கிறார் நிதி மந்திரி. ஆனால், கிராமப்புற வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் தொகை பெரும்பாலும் வறட்சி நிவாரணப் பணிகளுக்கே போய்விடுகின்றன. இதிலே அதிகார வர்க்கம் விழுங்கியது போக கிராமப்புறங்களுக்குக் கிடைப்பது அற்பத் தொகைதான். மற்றபடி காங்கிரசு கட்சி தனது தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்த இதர கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களை எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தான் நிறைவேற்ற முடியும் என்கிறார் நிதி மந்திரி. சுருக்கமாகச் சொன்னால் இவையனைத்தும் கிராமப்புறங்களை அறவே புறக்கணிப்பதன்றி வேறல்ல.

அதே சமயம் நவீனவகை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பணக்கார விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் ஏராளமான சலுகை, மானியங்களை வாரி வழங்கியுள்ளார் நிதிமந்திரி. சிறிய வகை டிராக்டர், ''ஸ்பிரிங்க்லர்'' முறை பாசனக் கருவிகள், ஆழ் குழாய் கிணறு அமைத்தல் ஆகியவற்றுக்கு மானியங்கள் தரப்பட்டுள்ளன. சூரியகாந்தி, காட்டுக் கடுகு எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்கு எக்சைஸ் வரிச் சலுகை, ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படும் பழக்கூழ், பால் பொருட்கள், காபி, டீ முதலானவற்றுக்கு வரிக்குறைப்பு முதலானவை பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் சீரான விவசாய வளர்ச்சிக்குப் பதில் பாசன வசதி கொண்ட திட்டுத் திட்டான பகுதிகளில் பணப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு சலுகைகளை வாரியிறைக்கின்றார் நிதி மந்திரி. இதன் மூலம் விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியை ஈட்டி சுயசார்பான பொருளாரத்தை கட்டியமைத்துவிட முடியும் என்று நம்பச் சொல்கிறார். ஆனால், இதன் விளைவாக, விவசாயம் புறக்கணிக்கப்படுவதோடு உணவு தானியங்களுக்காக அமெரிக்காவிடம் கையேந்த வேண்டிய நிலை தான் ஏற்படும்.

### ஏகாதிபத்திய இரும்புப் பிடியில் இந்தியப் பொருளாதாரம்

இதேபோல, அன்னிய மூலதனத்தை தாராளமாக சலுகைகளுடன் அனுமதித்து, ஏற்றுமதி அடிப்படையிலான தொழிலுற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு பட்ஜெட்டும், புதிய தொழிற் கொள்கையும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தியானது இறக்குமதியை மேலும் அதிகரிக்கும். அதாவது சர்வதேச அளவில் போட்டி




யிடும் அளவுக்கு தரமான பொருட்களைத் தயாரிக்க வேண்டுமானால் நவீன இயந்திரங்களையும் தொழில் நுட்பத்தையும் ஏகாதிபத்தியங்களிடமிருந்து மேலும் இறக்குமதி செய்ய நேரிடும். இதனால் மீண்டும் அந்நியச் செலாவணி பற்றாக்குறை அதிகரித்து, திரும்பவும் ஏகாதிபத்தியங்களிடம் கடனுக்காக கையேந்த நேரிடும். அன்னிய ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கம் அதிகரிக்கும். அதன் இரும்புப் பிடிக்குள் இந்தியப் பொருளாதாரம் சிக்கி நாடு திவாலாகும்.

அந்த திசையை நோக்கித்தான் பட்ஜெட்டும் புதிய தொழிற் கொள்கையும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் தொழில் நுட்ப நகரத்தை நிறுவப் போகிறது. ஆலைகள், பயிற்சிப் பள்ளிகளைக் கொண்ட இந்த நகரத்தில் இந்திய அரசு தலையிட முடியாது. ஜப்பானின் கட்டுப்பாட்டில் இந்த நகரம் இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் நவீன வகை காலனியாதிக்கம் தான் இது. இப்படி நாட்டை விலைபேசும் கொள்கையைத்தான் காங்கிரசு அரசு தனது பட்ஜெட்டிலும் புதிய தொழிற் கொள்கையிலும் கொண்டு வந்துள்ளது.

இதிலே கொடுமை என்னவென்றால் வாங்கிய கடனுக்கு வட்டி கட்டவே பட்ஜெட்டில் 21% தொகை போய் விடுகிறது. இந்தியாவின் மொத்த வெளிநாட்டுக் கடனோ 1.63 லட்சம் கோடி. உலகின் மிகப் பெரிய கடனாளி நாடுகளான பிரேசில், மெக்சிகோவை அடுத்து மூன்றாவது இடத்தில் இந்தியா இருக்கிறது. இது தவிர உள்நாட்டுக்கடன் 3.2 லட்சம் கோடியாக உள்ளது. இதுவும் போதாதென்று ஐ.எம்.எப் -உலக வங்கியிடம் அடுத்தடுத்து இந்தியா கடன் வாங்க அலைகிறது. இப்படி ஆண்டுக்காண்டு பெருகும் கடனும் வட்டியும் சேர்ந்து நாட்டை திவாலாக்கப் போவது மட்டும் நிச்சயம்.

ஐ.எம்.எப்.பிடம் கடன் வாங்கி அதன் நிபந்தனைகளை செயல்படுத்திய மெக்சிகோ நாட்டில் தொழிலாளரின் ஊதியம் 25 சதவீதம் குறைந்தது. பணவீக்கம் 73% அதிகரித்தது. விலைவாசிகள் 200%க்கு உயர்ந்தன. பிரேசில் நாட்டில் பணவீக்கம் 230% உயர்ந்தது. விலைவாசிகள் மூன்று மடங்கு அதிகரித்தன. அடுத்த பத்தாண்டுகளில் இந்நாடுகள் திவாலாகின. அன்னிய ஏகாதிபத்திய ஆதிக்கம் பெருகியது. மக்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டனர். பிரேசில், மெக்சிகோவுக்கு அடுத்தபடியாக பெருமளவுக்கு கடன் வாங்கியுள்ள இந்தியாவுக்கு நேரப் போகும் விளைவுகள் இத்தகையதாகத்தான் இருக்கும்.

நாட்டை அடகு வைக்கும் இப்பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தும் எதிர்க்கட்சிகளிடம் இதற்கு மாற்றான கொள்கையோ திட்டமோ கிடையாது. இன்னும் சொல்லப் போனால் தமது ஆட்சிக் காலத்தில் இதே கொள்கையைத்தான் அவர்கள் செயல்படுத்தினார். இப்போதைய காங்கிரசு அரசு அதை மேலும் தீவிரமாக்கியிருக்கிறது என்பது தான் வித்தியாசம்.

ஒரு ஜனநாயக அமைப்பில், ஒரு சிறுபான்மை அரசு தேசிய முக்கியத்துவமுடைய கொள்கை பூர்வமான முடிவுகள் எடுக்க அதிகாரம் கிடையாது என்று இதுவரை எதிர்த்தரப்பினர் கூச்சலிட்டு வந்தனர். ஆனால், இப்போதோ ஆட்சி கவிழ்ந்தால் நெருக்கடி ஏற்படும் இன்னொரு தேர்தலை நாடு தாங்காது; நாட்டின் உறுதிப்பாடு குறையும் என்று கூறி சிறுபான்மை காங்கிரசு அரசை மறைமுகமாக எதிர்க்கட்சிகள் ஆதரிக்கின்றன. இத்தகைய மண்திரை ஓட்டுக் கட்சிகளை உழைக்கும் மக்கள் நம்ப முடியாது.

தற்போதைய பட்ஜெட்டும் புதிய தொழிற்கொள்கையும் வெறுமனே பொருளாதார ரீதியான தாக்குதல் மட்டுமல்ல; அரசியல், ராணுவம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு அடகு வைப்பதற்கான ஏற்பாடு. எனவே, நாடு சூறையாடப்படுவதற்கு முன்னே விழித்தெழுங்கள்! நாட்டு மக்களை வறுமை, பட்டினிச் சாவுக்குள் தள்ளுமுன்னே, புரட்சிகர அமைப்புகளில் திரண்டு தேசவிரோத - மக்கள் விரோத சிறுபான்மை காங்கிரசு அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுங்கள்!

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# இரத்த வெள்ளத்தில் தாழ்த்தப்பட்டோர்





அரசு பேருந்து ஒன்று ஆயுதம் தரித்த கும்பலால் வழிமறிக்கப்பட்டது. பேருந்தில் தேவநந்தம் என்ற விவசாயி ஒருவர்தான் தாழ்த்தப்பட்டவர். அவரை இழுத்துப்போட்டு ஆசை தீரும்மட்டும் தாக்கியது அக்கும்பல். பிறகு மண்ணெண்ணை ஊற்றி பற்ற வைத்து அவரை உயிரோடு கொளுத்தி வெறிக் கூச்சலிட்டது - ஆந்திரா, சுண்டூர் கிராமத்தில் ஆகஸ்டு 6-ந் தேதி மேல்சாதி ரெட்டி நிலப் பிரபுக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மீது நடத்திய தாக்குதலில் ஒன்றுதான் இது.

சிறு சிறு சம்பவங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் ரெட்டி நிலப்பிரபுக்களால் தாக்கப்படுவது மூன்றாண்டுகளாக சுண்டூரில் நடந்து வந்தது. இதனால் தாழ்த்தப்பட்டவர்கள், ரெட்டி நிலப்பிரபுக்களின் வயல்களில் வேலை செய்வதை புறக்கணித்தனர். படித்த மற்றும் தலித் அமைப்பு இளைஞர்கள் நிலப்பிரபுக்களின் அட்டூழியங்களுக்கு எதிராக குரல் கொடுத்தனர். சில சமயம் இரு சாதியினருக்கும் இடையே மோதல்களும், கைகலப்புகளும் நடந்தன. அண்மையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி செய்து வந்த யாகூப் என்பவர் நிலப்பிரபுக்களால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சில மோதல்கள் நடந்தன. சுண்டூரில் 144 தடைச் சட்டம் போடப்பட்டு ஆகஸ்டு 4-ந் தேதியே போலீசு குவிந்தது.

ஆகஸ்டு 6-ந் தேதி சுண்டூர் தாழ்த்தப்பட்ட காலனியில் புகுந்த போலீசு ''மேல் சாதிக்காரர்கள் உங்களை வெட்ட கும்பலாக வருகிறார்கள்'' என பீதியூட்டி ஆண்களையெல்லாம் துரத்தியது. பதட்டமான அத்தருணத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் பலர் வயல் - வரப்புகளுக்கும், ரயிலடி ஓரங்களுக்கும் மறைவிடம் தேடி ஓடினார்கள். அங்கு தயாராக காத்திருந்த நிலப்பிரபுக்களின் அடியாட்கள் சிதறி ஓடியவர்களை எல்லாம் துரத்திப் பிடித்து தாக்கி கொன்று போட்டனர். இன்னொரு புறம் மேல்சாதிக்காரர்கள் ஆயுதங்களுடன் லாரிகளிலும், டிராக்டரிலும் ஊருக்குள் சுற்றிவந்து கண்ணில்பட்ட தாழ்த்தப்பட்டவர்களை எல்லாம் தாக்கினர். தெருவில் போனவர்கள், பேருந்தில் வந்தவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் அடையாளங் காணப்பட்டு கொடூரமாகத் தாக்கப்பட்டனர். சிலரை தாக்கி உயிரோடு கொளுத்தியது சாதிவெறிக் கும்பல்.

இத்தாக்குதலில் இறந்து கிடந்தவர்களில் சிலரை இழுத்துச் சென்று தெருவிலேயே குவித்து தீவைத்து குதூகலித்தது நிலப்பிரபுத்துவ கும்பல். பலரை சாக்குப் பையில் கல்லோடு சேர்த்துக் கட்டி அருகில் உள்ள துங்கபத்திரா பாசன கால்வாயில் வீசியது. அனைத்தையும் வேடிக்கைப் பார்த்த போலீசு கும்பல் மேல்சாதிக்காரர்கள் வந்த லாரி - டிராக்டரிலேயே ஏறி உடன் சென்றது.

கால்வாயிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களை மருத்துவ பரிசோதனை செய்த மருத்துவர் ரவிசந்தர் குமார் ஒரு தாழ்த்தப்பட்டவர். பரிசோதனைக்குப் பின் அவருக்கு சாப்பிடவே பிடிக்காமல் தமது சாதியினருக்கு இழைக்கப்பட்ட கொடுமையை எண்ணி எண்ணி வருந்தினார். பலரிடம் சொல்லி சொல்லி அழுதார். இறுதியில் மனமுடைந்து போய் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார்.

மன்று பரிசுத்த ராவ், இவர் இப்படுகொலையில் இறந்த ரமேஷ் என்பவரின் அண்ணன். தனது சாதியினருக்கு நேர்ந்ததை எண்ணி எண்ணியே மனநிலை பாதிக்கப்பட்டார். பார்ப்பவர்களிடமெல்லாம் புலம்பிக் கொண்டே இருந்தார். உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மாரடைப்பு வந்து இறந்து போனார்.

சம்பவத்தின் கொடுமையை எழுத்தால் யாராலும் எழுதிக் காட்ட முடியாது என எண்ணியிருப்பார்களோ இவர்கள்! இப்படி தமது உயிரையே கொடுத்து சித்திரமாக்கி காட்டுகிறார்களே!

50க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் இச்சம்பவத்திற்குப் பின் என்ன ஆனார்கள் என்று தெரியாத நிலையில் 20 பேர்தான் கொல்லப்பட்டார்கள் என்கிறது அரசு. எஞ்சியவர்கள் உறவினர்கள் வீட்டில் அல்லது எங்காவது பாதுகாப்பாக மறைந்திருப்பார்கள் என நம்பச் சொல்கிறது. கேடுகெட்ட அரசு மூன்று நாள் தாமதமாக வந்தே மீட்புப் பணியில் இறங்கியது. இதனால் 8 சடலங்களை மட்டுமே கால்வாயிலிருந்து மீட்க முடிந்தது. தாழ்த்தப் பட்டவர்களிடையே நிலவிய கொந்தளிப்பைக் கண்ட ஆட்சியாளர்கள் கண் துடைப்பிற்காக சில அதிரடி நடவடிக்கைகள் எடுத்தனர். சிலரைக் கைது செய்தனர். ஆனால், படுகொலைக்கு முக்கியமானவர்கள் என பகுதி மக்கள் சுட்டிக்காட்டிய 6 ரெட்டியார்களை கைது செய்ய மறுத்துவிட்டது போலீசு. ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரையும் ஒரு சப் இன்ஸ்பெக்டரையும் உடந்தையாக இருந்ததற்காக தற்காலிக பதவி நீக்கம் செய்தனர். ஆனால், அந்த இருவரும் அதற்குப் பின்னும் வேலைக்குப் போய் வருகிறார்கள்.

என்.டி.ராமராவ் ஆட்சியில் ஆந்திராவில் கரம்சேடு, நீருகொண்டா ஆகிய பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் கம்மாசாதி நிலப்பிரபுக்களால் கொல்லப்பட்டனர். கொலைகாரர்கள் தமது சாதியினர் என்பதால் என்.டி.ஆர். பிரச்சினையை கிடப்பில் போட்டார். இன்றுவரை எந்த நிலப்பிரபும் தண்டிக்கப்படவில்லை. சில நிலப்பிரபுக்களை 'நக்சலைட்டுகள்' தான் தண்டித்தனர்.

இன்று சுண்டூர் சம்பவமும் இதே திசை நோக்கியே நிற்கிறது. தனது அமைச்சரவையில் 14 ரெட்டியார்களைக் கொண்டுள்ள காங்கிரசு முதலமைச்சர் ரெட்டி நிலப்பிரபுக்களை தண்டிப்பார் என நம்ப யாரும் தயாரில்லை.

ஆமாம், சுண்டூர் தாழ்த்தப்பட்ட மக்களும்தான்! ஆறுதல் கூற ஓடிவந்த என்.டி. ஆரை கம்மா சாதி நிலப்பிரபுக்களுக்கு எதிராக அன்று என்ன கிழித்தாய் என இடித்துரைத்து திருப்பி அனுப்பினர். முதலமைச்சர் ஜனார்த்தனன் ரெட்டியை முற்றுகையிட்டு திரும்பிப் போகும்படி கோஷமெழுப்பினர்.



படிப்பகம்

www.padippakam.com







வர் கார்மீது கற்களையும் செருப்புகளை ம் வீசியதோடு கேள்விகேட்டு மூக்கு -த்து அனுப்பினர்.

இதேபோல் ரெட்டி நிலப்பிரபுக்க க்கு ஆதரவாக செயல்பட்ட துணைச் சபா பகர் தர்மாராவை முற்றுகையிட்டு அவர் பிட்டு மன்னிட்டு கேட்ட பின்னரே விடு ந்தனர். ஆந்திர தலித் மகாசபையினர் கலூர் பகுதியில் வணிகவரித்துறை மைச்சர் கே.பாபிராஜுவை முற்றுகை டு ஆகஸ்டு - 15 அன்று தேசியக் கொடி றியதை தடுத்து கருப்புக் கொடியை ஏற்ற த்தனர். ஆகஸ்டு 15ஐ துக்க நாளாக வித்து எதிர்ப்பு தெரிவித்தனர். ''எங்க கு நீதிதான் வேண்டும்; பிச்சைக் காசல்ல ன்று கூறி அரசு தரும் நிவாரணத்தை வாங்க மறுத்து போராடி வருகிறார்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்.

ஓட்டுக்கட்சிகளை ஓட ஓட விரட்டிய சுண்டூர் மக்கள் புரட்சி கலைஞர் கத்தார் தலைமையிலான ஜனநாட்டிய மண்டலி யின் புரட்சிகர கலைநிகழ்ச்சியையும், புரட்சி கர எழுத்தாளர் சங்கத் தோழர் வரவரராவ் பேச்சையும் உற்சாகத்தோடு வரவேற்றனர். புரட்சியாளர்களின் வரவால் சுண்டூர் மக்கள் புதுவேகம் பெற்றனர் என முதலாளித்துவ பத்திரிக்கைகளே ஒத்துக் கொண்டன.

சுண்டூர் படுகொலை சிந்திய ரத்தம் உறைவதற்குள் மேலும் இரு சம்பவங்கள்!

பீகாரில் காகாரியா கிராமத்தில் ஆகஸ்டு 14ந் தேதி நிலப்பிரச்சினை தொடர் பாக மணிதேவி என்ற தாழ்த்தப் பட்ட பெண் யாதவ் நிலப்பிரபுக்களின் ஆட்க ளால் உயிரோடு கொளுத்தப்பட்டாள்.

ஆந்திரா - சிலாகுர்டி கிராமத்தில் ஆகஸ்டு 16-ந் தேதி ரெட்டி நிலப்பிரபுக்க ளால் பிற்படுத்தப்பட்ட சாதிப் பெண் சித்திர வதைக்கும் அவமானத்திற்கும் உள்ளா னாள். தனது தங்கை ஒருவனுடன் ஓடிப் போனதற்கு உதவி செய்ததாக சந்தேகப் பட்டு முத்தம்மாவை இழுத்து வந்து தாக்கி னார் வரகல நாராயண ரெட்டி. பலவந்தமாக அவள் வாயிலே சாராயத்தை ஊற்றிய தோடு நிர்வாணமாக்கி, கிராமப் பொதுச் சந்தையிலே ஒரு மணி நேரமாக நிறுத்தி சித்திரவதை செய்தனர், மேல் சாதி நிலப்பி ரப்புக்கள்.

இப்படி சிறிதும் பெரிதுமாக நாளும் நடப்பதில் சில மட்டுமே நம்மை எட்டுகின் றன. அவற்றிலும் ஒன்று, இரண்டுதான் ஓட் டுக் கட்சிகளால் அரசால் அக்கறை காட்டப் படுகின்றன! பின்னர் அதுவும் சட்டவாதத் திற்குள்ளும், கால இழுத்தடிப்புக்குள்ளும் சிக்கி உருத்தெரியாமல் போய்விடுகிறது.

ஜனதா தளத்தைச் சேர்ந்த ராம்விலாஸ் பஸ்வான் பாராளுமன்றத்தில் சுண்டூர் படு கொலை பிரச்சினையைக் கிளப்பினார். உடன் காங்கிரசு, பாரதிய ஜனதா... என அனைத்து கட்சி எம்.பி.க்களுமே கண்டனக் குரல் எழுப்பினர். சமூகத்தில் பின் தங்கிய பிரிவினருக்கு தக்க பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என அனைவரும் கூப் பாடு போட்டனர். ஏனெனில் எந்த கட்சியா லும் நாங்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களின் பிற்படுத்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் -பாதுகாவலர்கள் என உரிமை கொண்டாட முடியவில்லை. எல்லா மாநிலங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடக் கின்றன. எனவே, சர்வகட்சி பிரச்சினை யாக்கி கும்பலாக கோவிந்தா போட்டார் கள். கூட்டாக சமூகத்தில் பின் தங்கியவர்க ளுக்கு பாதுகாப்பு கொடுக்கப் போகிறார்க ளாம்!

அம்பேத்கார், பெரியார், பூலே என தாழ்த்தப்பட்டவர்களுக்காக பலத் தலைவர் களைக் கண்டது வரலாறு. இன்று பலர் நாங் கள்தான் அவர்களின் வாரிசுகள் என பட்ட யம் கட்டிக் கொண்டு வலம் வருகிறார்கள். இதுவரை என்ன செய்ய முடிந்தது இவர்க ளால்? தாழ்த்தப்பட்டவர்கள் மீதான கொடு மையைத் தடுக்க முடிந்ததா? பீகார் - பெல்ச்சி படுகொலை, தமிழக கீழ்வெண் மணி படுகொலை... ஏதாவது ஒன்றிலாவது இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார் களா? இல்லையே! அன்றைய தலைவர்க ளும் இன்றைய வாரிசுதாரர்களும் கோரு வது சீர்திருத்தத்தைத்தான்! இச்சமூக அமைப்பிற்குள்ளேயே ஒரு மாற்றத்தைத் தான்! தாழ்த்தப்பட்டவர்களுக்கு சமூக அந் தஸ்து, சலுகை, சன்மானங்களைத்தான்! ஆனால், தாழ்த்தப்பட்டவருக்கான விடிவு இவற்றின் மூலம் வராது என்பதையே வர லாறு மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறது. சாதியம் புரையோடியுள்ள இச் சமூக அமைப்பையே தூக்கியெறியும் வர்க்கப் போராட்டத்தில்தான் அதன் விடிவு - கொடு மைக்கான முடிவு அடங்கியுள்ளது.

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்


ஒரு ஸ்கூட்டரின் பின் இருக்கையில் அமர்ந்து யானை பயணம் செய்ய முடியுமா? முடியும்! பீகார் வனவிலங்குத் துறை அதிகாரிகள் அதை சாதித்துக் காட்டியிருக்கிறார்கள். முந்தைய காங்கிரசு ஆட்சிக் காலத்தில் வன விலங்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல டிரக்குகள், லாரிகள் பயன்படுத்தியதாகவும் இதற்காக பல லட்சக் கணக்கில் வாடகை கொடுக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் கணக்கு காட்டி ஏப்பம் விட்டனர்.

பின்னர் இது பற்றி புகார்கள் கிளம்பியதும் ஒரு ஆய்வுக் குழு நிறுவப்பட்டு விசாரணை நடந்தது. வாடகைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் பதிவு எண்களைப் பரிசீலித்தபோது, அவை கார்கள், ஸ்கூட்டர்களின் எண்களாக இருந்தன! "இதெல்லாம் ஒரு ஊழலா? ரயில்வே பிளாட் பாரத்தையே அரசுக்கு விற்றதாக அதிகாரிகள் கணக்குக் காட்டி ஏய்க்கும் பீகாரில் இந்த மோசடி எல்லாம் சாதாரணமானது" என்கிறார் ஒரு பீகார் மாநில எம்.எல்.ஏ.! ஊழலில் கூட்டுச் சேர்ந்து பங்கு போட்டுக் கொள்ளும் மாண்புமிகு மக்கள் பிரதிநிதிகளே இப்படிச் சொல்லும்போது நம்பாமலா இருக்க முடியும்?

குண்டு வெடிப்பில் மாண்ட ராஜீவ் கொலை பற்றிய படங்களை - இரத்தமும் சதைக் கோளங்களுமாக பரபரப்பாக "ஜூனியர் விகடன்" வார ஏடு வெளியிட்டது. அந்தப் படங்களின் மூல ஃபிலிம்களை வெளிநாட்டு பத்திரிக்கை ஒன்றுக்கு 8 லட்ச ரூபாய்க்கு அடுத்த சில நாட்களில் விற்று, விகடன் முதலாளி கொழுத்த லாபம் ஈட்டியுள்ளார். இத்தகவலை "இல்லஸ்டிரேடட் வீக்லி" என்ற ஆங்கில வார ஏட்டின் முது நிலை பத்திரிக்கையாளரான கே.பி.சுனில், அந்த ஏட்டில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். 'மாபெரும் தேசத் தலைவர்' ராஜீவின் சாவுக்காக ஒப்பாரி வைத்த விகடன் முதலாளிக்கு மாண்டுபோன 'தலைவரின்' மரணம் கூட வியாபாரமாகி விட்டது.

உத்திரப் பிரதேச சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏ.க்களில் பலர் சாதுக்கள், மகந்துகள், சன்னியாசிகள்தான். இவர்களில் மகந்து வைத்திய நாத்தும் ஒருவர். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏக்களில் பாதிப்பேர் பிரபல கிரிமினல் பேர்வழிகள். இவர்களில் ஓம்பிரகாஷ் பாசி என்பவரும் ஒருவர். வேடிக்கை என்னவென்றால் இந்த கிரிமினலும் கிழட்டுச் சாமியாரும் நெருங்கிய கூட்டாளிகள். சாமியாரின் நிர்பந்தத்தால் பாரதீய ஜனதா அரசு ஓம் பிரகாஷை துணை மந்திரியாக்கியுள்ளது. சாதுக்கள், சாமியார்களைத் தேர்தலில் நிறுத்தி இந்துமத புனிதத்தையும், ராம ராஜ்ஜியத்தையும் நிறுவப் போவதாக பாரதீய ஜனதா வாக்களித்தது. கடைசியில் ராமராஜ்ஜியம் ரௌடிகள் - கிரிமினல்களின் ராஜ்ஜியமாகிவிட்டது.

மகாராஷ்டிரா சட்டமன்றத்தின் பல எம்.எல்.ஏக்கள் ரகசிய உலகப் பேர்வழிகளுடன் தொடர்புடையவர்கள். மாஃபியா கும்பலின் கூட்டாளிகள். மாஃபியா கும்பல்களுக்கு இடையே நடக்கும் தொழில் போட்டியின் காரணமாக பம்பாயின் பல இடங்களில் துப்பாக்கிச் சண்டையும் கொலைகளும் தொடர்ந்து வருகின்றன. இதனால் எதிர்த்தரப்பு மாஃபியா கும்பலால் தமது உயிருக்கு ஆபத்து நேரக்கூடும் என்று பீதியடைந்த பல எம்.எல்.ஏக்கள் அரசிடம் தமக்கு துப்பாக்கிகள் வழங்குமாறு கோரியுள்ளனர். அதன்படி சலுகை விலையில் சட்டபூர்வமாக துப்பாக்கிகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.



ராஜீவ் வீட்டில் கட்சிப் பணிகள் என்ற பெயரில் எடுபிடி வேலை செய்து வந்த காங்கிரசு கட்சியின் சேவாதள தொண்டர்களை ராஜீவ் சாவுக்குப் பிறகு சோனியா மூட்டை கட்டி அனுப்பிவிட்டார். ராஜீவ் மாண்ட பிறகு துக்கம் விசாரிக்க அவரது உறவினரும் எதிர்க்கட்சி பிரமுகருமான அருண்நேரு வந்தபோது அவரை வீட்டிற்குள் அனுமதித்ததுதான் சேவாதள தொண்டர்கள் செய்த குற்றம். இவர்களை வேலையிலிருந்து விரட்டியதோடு பிரதமர் அலுவலகத்தில் நுழைய விடக்கூடாது என்று நரசிம்மராவுக்கு சோனியா உத்திரவு போட்டுள்ளார். பதவிக்கு வருமுன்னரே இந்த அளவுக்கு சர்வாதிகாரம் என்றால் நாளை சோனியா ஆட்சிக்கு வந்தால் என்ன ஆகுமோ? காங்கிரசு கொத்தடிமைகளுக்கே வெளிச்சம்!

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) சமீபத்திய ஆய்வறிக்கையின்படி உலகிலேயே இந்தியாவில்தான் மிக அதிகமான கொத்தடிமைகள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் இளஞ்சிறுவர்கள். விவசாயம், பட்டாசு ஆலை, கம்பள நெசவு, வைரம் பட்டைத் தீட்டுதல், கண்ணாடி பீங்கான் ஆலைகள், செங்கற் சூளைகள், கல் உடைக்கும் குவாரிகள், சிறு பட்டறைகளில் இளங்குழந்தைகள் பல லட்சக்கணக்கில் கொத்தடிமைகளாக உழல்வதாகவும், உரிய நடவடிக்கை எடுத்து அவர்களை விடுவிக்குமாறு ஐ.நா தீர்மானத்தைக் காட்டி இந்த அமைப்பு இந்திய அரசைக் கோரியுள்ளது. இதுதவிர 11 மாநிலங்களில் 26 லட்சம் கூலி விவசாயிகள் கொத்தடிமைகளாக அவதிப்படுவதாகவும், குறிப்பாக மத்திய பிரதேசம் ரெய்பூர் மாவட்டத்தில் மட்டும் 8,000 கொத்தடிமைகள் உள்ளதாகவும் இந்த அமைப்பு கூறுகிறது. ஆனால், இவையெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட தகவல் என்றும் கடந்த ஆண்டில் 2,42,532 கொத்தடிமைகள் கண்டறியப்பட்டு அவர்களில் 2,18,2.. பேர் விடுவிக்கப் பட்டுதள்ளதாக வழக்கம் போலவே இந்திய அரசு மாய்மாலம் செய்கிறது. ஆனால், காந்தீய அமைதி நிறுவனம் என்ற அமைப்பு, இந்திய அரசு புள்ளிவிவரம் பொய்க்கணக்கு காட்டி ஏய்ப்பதாக வெளிப்படையாகக் குற்றம் சாட்டி ஆட்சியாளர்களின் முகத்தில் கரி பூசியுள்ளது.

ரஷியாவிலிருந்து வெளிவரும் SOVIET WOMAN - "சோவியத் பெண்மணி" என்ற பத்திரிகை 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பொறுப்பிலுள்ள நேஷனல் புக் ஏஜென்சி என்ற புத்தக நிறுவனத்தின் மூலம் வங்க மொழியிலும் பதிப்பிக்கப்படுகிறது. இப்போது அந்தப் பத்திரிக்கை ஆபாசமாகவும் அருவெறுக்கத்தக்க பாலியல் வக்கிரம் கொண்டதாகவும் உள்ளது என்று 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் அதைப் பதிப்பிப்பதை நிறுத்தியுள்ளனர். கட்சியின் கொள்கைகளுக்கே எதிராக இருப்பதாக அணிகள் கட்சித் தலைமையிடம் முறையிட்டார்கள். அதன்பிறகே இவ்வாறு முடிவு செய்தது என்கிறார் மே.வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சி செயலாளர். ஆனாலும் தமது குருபீடமான ரஷ்ய கட்சியைப் பற்றி விமர்சிக்கத் தயங்குகிற...



படிப்பகம்

www.padippakam.com

அதாவது, சீரழிவைப் பரப்பும் ரஷிய பத்தி ரிக்கைக்கு எதிர்ப்பு; அதேசமயம் குருபீடத் துக்கு விசுவாசம்! ''விமர்சன பூர்வமான ஆதரவு'' என்ற 'மார்க்சிஸ்டு'களின் கொள்கை இதுதான் போலும்!

ஆந்திராவில் காஸ்ட்ரோ என்டிரி டீஸ் எனும் வயிற்றுப் போக்கு நோயினால் கடந்த இரு மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 750 பேர் மாண்டு போயுள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் குழந்தைகள்! 1986ல் இதே போன்ற தொற்று நோய் பரவி 638 பேர் ஆந்திராவில் மாண்டதாக அரசு கணக்கு காட்டுகிறது. ஆனாலும், அதன்பி றகு கூட நோய் தடுப்புக்கு உரிய நடவடிக் கைகளை அரசு எடுக்கவில்லை. இன்றுபல மருத்துவ மனைகளில் உரிய மருத்துவ வச தியின்மையாலும், அரசின் அலட்சியப் போக்கினாலும் பல உயிர்கள் காவு கொள் ளப்பட்டுள்ளதாக மருத்துவர்களே பகிரங்க மாக குற்றம் சாட்டுகின்றனர். மக்கள் நல னில் மயிரளவும் அக்கறையற்ற ஆட்சியா ளர், அதே ஆந்திராவிலுள்ள சிறீஹரிகோட் டாவிலிருந்து பல கோடி ரூபாய் செலவில் 'திரிசூல்'' என்ற ஏவுகணையை வெற்றிகர மாக விண்ணில் செலுத்தி அவலத்தின் டுவே குதுகலித்துக் கொண்டி ருக்கின்றனர்.

கடந்த ஜூலை 27 அன்று அசாமின். ர்ராங் மாவட்டத்திலுள்ள திமிலா சௌக் னும் கிராமத்தில் எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) ஒரு வேன், போராளிக ளால் குண்டு வீசித் தகர்க்கப்பட்டது. இத னால் ஆத்திரமடைந்த அப்படையினர் அப் பாவி கிராம மக்கள் பலரைப் பிடித்துச் சென்று மிருகத்தனமாக சித்திரவதை செய்த னர். விவசாய வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கிராம மக்களை ''உயிர் பிழைக்க வேண்டுமானால் தப்பி ஓடுங்கள்'' என்று துரத்தியபடியே கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். மற்றொரு இடத் தில், கிராம மக்களை வரிசையாக நிற்க வைத்து பின்னர் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினர். எல்லைப் பாதுகாப்புப் படை யின் தாக்குதலில் 7 பேர் மாண்டனர். பலர் படுகாயமடைந்தனர். 'தீவிரவாதிகளுடன் நடந்த மோதலில் நடந்த சாவு' என்று இக் கொலையை எல்லைப் பாதுகாப்புப் படை வழக்கம்போல் பூசி மெழுகியது. ஆனால், வழக்கறிஞர்களும், இச்சம்பவத்தில் உயிர் பிழைத்தவர்களும் அளித்த சாட்சியத் தினால் துணை ராணுவப் படையின் கொலை வெறியாட்டம் இப்போது அம்பல மாகியுள்ளது.

''உங்களைக் கொல்வதற்கு எத் தனை குண்டுகள் தேவைப்படும்?'' கைது செய்யப்பட்ட அந்த இரு இளைஞர்களிடம் கொண்டலடித்தான் பஞ்சாப் போலீசு சூப்பி ரண்டெண்டு சமீத்சய்னி. கடந்த ஜூலை 22 அன்று ஒரு போலீசைக் கொன்று மூன்று போலீசாரை தீவிரவாதிகள் தாக்கிவிட்டு தப் பியோடினர். சண்டிகார் அருகே மலோயா கிராமத்தில் நடந்த இச்சம்பவத்தை அடுத்து, ஜிந்தார் சிங், குர்லிந்தர் சிங் எனும் இரு அப்பாவி இளஞ்சிறுவர்களை போலீசார்




பிடித்து வைத்துக் கொண்டு இவ்வாறு மிரட் டினர். தீவிரவாதிகளுடன் தொடர்புடைய வர்கள் என்று பொய்க் குற்றம் சாட்டி இவ் விரு இளைஞர்களின் வீடுகள் சூறையாடப் பட்டன. ''இவர்கள் இனிமேல் தப்ப முடி யாது. இவர்களது உடல்களைப் பெற்றுக் கொள்ளவும், இறுதிச் சடங்குக்கும் ஏற்பாடு செய்து விடுங்கள்'' என்று அவர்களின் பெற் றோரிடம் கூறிவிட்டு இளைஞர்களை இழுத் துச் சென்றது பஞ்சாப் போலீசு.

பின்னர், தலைநகருக்கு கொண்டு செல்ல போலீசாரிடம் உரிய வாகன வசதி இல்லாததால், மத்திய ரிசர்வ் போலீஸ் படை யிடம் இவர்களை ஒப்படைத்தது. ரிசர்வ் போலீசார் ஒருவார காலம் இவ்விரு இளை ஞர்களை சித்திரவதை செய்துவிட்டு, ரகசிய போலீஸ் (சி.ஐ.டி) படையிடம் ஒப்படைத்த னர். அங்கும் கொடூரமான சித்திரவதை களை அனுபவித்த இவர்கள் பின்னர் குற்ற வாளிகள் அல்ல என்று நடைபிணமாக விடு விக்கப்பட்டுள்ளனர். மரணவாயிலில் நுழைந்து உயிருடன் மீண்டு வந்த இவ்விரு இளைஞர்களை ''அதிசயப் பிறவிகள்'' என்று பஞ்சாப் கிராம மக்கள் பலர் நேரில் வந்து வாழ்த்திவிட்டுச் செல்கின்றனர். ஆட் சிகள் மாறினாலும், கவர்னர்கள் மாறினா லும் பஞ்சாபில் நீடிப்பது அரசு பயங்கரவாத அடக்குமுறைதான் என்பதற்கு இச்சம்பவம் இன்னுமொரு சாட்சி!



முன்னாள் பிரதமர் நேருவின் பிறந்த நாளை குழந்தைகள் தினவிழா என் றும், இந்திராவின் பிறந்த நாளை தேசிய ஒருமைப்பாட்டுத் தினமாகவும் இந்திய அரசு கொண்டாடி வருகிறது. இதோடு ஆகஸ்ட் 20ந் தேதியன்று ராஜீவின் பிறந்த நாளையும் கோலாகலமாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. மாண்டுபோன பிரதமர்களுக்கு மட்டும்தான் விழாவா? உயிரோடு இருப்பவர்களுக்கு நடத்தக் கூடாதா என்று புதிய ஆட்சியாளர்கள் தீவிர மாக யோசித்தார்களாம். அதன்படி முன் னாள் பிரதமர்களான மொரார்ஜி தேசாய், வி.பி.சிங், சந்திரசேகர் ஆகியோருடன் நர சிம்மராவின் பிறந்தநாள் விழாவையும் அரசு விழாவாகக் கொண்டாடுவதென அதி காரிகள் முடிவு செய்துள்ளனர். சம்பந்தப்பட் டவர்களிடம் அனுமதி கேட்டு கடிதமும் அனுப்பியுள்ளனர். எனவே, இவ்வாண்டில் ஏராளமான அரசு விழாக்கள், நமது வரிப்ப ணத்தை வாரியிறைத்து கோலாகலமாக நடக்கப்போகிறது. மக்களின் முதுகில் வரிச் சுமையேற்றி, வயிற்றைச் சுருக்கி தியாகம் செய்யுமாறு காங்கிரசு பெருச்சாளிகள் எதற் காக உபதேசிக்கிறார்கள் என்று இப்போது புரிகிறதல்லவா?

பல்கலைக் கழக மானியக் குழு (UGC), நாடெங்கும் 27 போலி பல்கலைக்க ழகங்கள் சட்ட விரோதமாக செயல்படுவ தாக அண்மையில் அறிவித்துள்ளது. இவற் றில் தமிழகத்தில்தான் இத்தகைய மோசடி கல்வி நிறுவனங்கள் அதிகமாக உள்ளன. போடியில் உள்ள தெஸ்தார் ஆராய்ச்சி பல்க லைக் கழகம், புத்தூரிலுள்ள சமஸ்கிருத பல் கலைக் கழகம், ஆம்பூரிலுள்ள பைபிள் பல்க லைக்கழகம், ஈஸ்டர் ஆர்தடாக்ஸ் பல்க லைக்கழகம், கும்பகோணத்திலுள்ள குளோப் யுனிவர்சிடி, கீழநத்தத்திலுள்ள புனித ஜான் பல்கலைக் கழகம் முதலானவை இவற்றில் சில.

இவை தவிர அங்கீகரிக்கப்படாத பட் டப்படிப்பு கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் கணக்கின்றி உள்ளன. இந்த லட்சணத்தில் தனியார் சுய நிதி கல்லூரிகள் தொடங்க ஊக் கம் அளிக்கப் போவதாக தமிழக அரசு அறி வித்துள்ளது. மோசடி கல்வி நிறுவனங்க ளில் தமிழகம் முதலிடம் வகிக்க வேண்டும் என்பதில் ஆட்சியாளருக்கு எவ்வளவு அக் கறை பாருங்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# நாடு கடத்தப்படுவோமா?

**ராஜீவ் கொலையைத் தொடர்ந்து தமிழகத்திலிருந்து ஈழ அகதிகளைத் துரத்தியடிக்க ஜெயலலிதா - காங்கிரசு கும்பல் முயற்சித்து வரும் அதே நேரத்தில், மேலை நாடுகளில் தஞ்சம் புகுந்த ஈழ அகதிகளும் தற்போது இதே போன்ற அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். ''ஐரோப்பா வெள்ளையருக்கே!'' என்ற நாஜிசத்தின் ஒரு பகுதியாக எடுக்கப்பட்ட இந்த முடிவு, தஞ்சம் கோரிய அகதிகளின் உயிர்ப் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கி உள்ளது.**

ஜெர்மனியிலிருந்து தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவிருக்கும் விஷயம் இன்று இலங்கைவரை பரவி, முக்கிய செய்தியாக அடிபடுகிறது. ஜூன் மாதம் 30-ம் தேதிக்குப் பின்னர் எந்த வித தகுதியான ''விசா''வும் இல்லாமல் திகிலடைந்து போயிருந்த அகதிகளின் குழப்பம் இன்னும் தீரவில்லை.

உண்மைச் செய்திகளைவிட வதந்திகளே எல்லோரையும் தேவையற்று பயமுறுத்தின. ''திருப்பி அனுப்பவுது என்றால் விலங்கு போட்டுத்தான் அனுப்புவார்கள்'' என்று ஒரு மூலையில் ஆரம்பிக்கும் உரையாடல் மறு மூலைக்குப் போய் திரும்பி வரும்போது, ''ஒரு தமிழ் ஆளை விலங்கு போட்டு விமானத்தில் ஏற்றியதை தொலைக் காட்சியில் காட்டினார்கள்; நான் பார்த்தேன் என்று உருமாற்றம் பெற்றிருக்கும். வதந்திகளை நம்பாமல் உண்மைத் தகவல்களைப்




பெற சட்டத் தரணிகளுடனும், அகதி உத[...] நிறுவனங்களுடனும் நேரடியாகத் தொட[...] கொள்வதே பயனுள்ளதாகும்.

முதலில் ஜூன் 1-ம் தேதியிலிரு[...] என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை[...] பார்ப்போம்.

பலரும் கருதுவதைப் போல புதிய [...]டம் எதுவும் ஜூலை மாதம் இயற்றப்ப[...]வில்லை. 1991 ஜனவரி மாதம் அமுலு[...] வந்த புதிய வெளிநாட்டவர் சட்டத்தின் [...]காரம், அரசியல் தஞ்சம் நிராகரிப்பட்ட[...]லும், தாய்நாட்டில் பிரச்சினை சுமுகமா[...] வரை தற்காலிகமாக ஜெர்மனியில் த[...] அனுமதிக்கும் ''சகிப்புப் பத்திரம்'' (D[...]ldung) என்ற நடைமுறை ஜூன் மா[...] 30-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது.

அதாவது, ''டுல்டுங்'' பத்திர ந[...]முறை இல்லாததால் அரசியல் தஞ்சம் நிர[...]ரிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய த[...] நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப் படுவ[...]கள். இதுவே தற்போது நடைமுறைக்கு [...]துள்ளது.

இரண்டாவது, இதுவரையில் இன [...]லது குழு அடிப்படையில் - தஞ்சம் நிராக[...]கப்பட்டாலும் - தற்காலிகமாக தாய் நாட்[...] பிரச்சினை முடியும்வரை இங்கு தங்க அ[...]மதிக்கப்பட்டது. உதாரணமாக தமிழர்[...] என்ற அடிப்படையிலேயே தமிழ் அகதி[...] திருப்பி அனுப்பப்படாமல் ''டுல்டுங்'' ப[...]ரம் வழங்கப்பட்டது. இந் நடைமுறை இ[...] மேல் இல்லாததால் தனித்தனியாக [...]வொரு அகதியும் விசாரிக்கப்பட்டு, அ[...]கள் ஏன் திரும்பிப்போக முடியாதென வி[...]

## ஒரு அகதியின் அவலக்குரல்

*அகதியாக அல்லற்படும் ஈழத் தமிழர் ஒருவர் எமக்கு எழுதிய கடிதத்தை இங்கே பிரசுரித்துள்ளோம். இக்கடிதத்தில் அவர் குறிப்பிடும் சமரசத் திட்டம் பற்றிய கட்டுரை நீண்டதாக இருப்பதாலும், அத்திட்டத்தில் எமக்கு உடன்பாடு இல்லாததாலும் அதனை வெளியிட இயலவில்லை. மேலும் ஈழத் தமிழர் பிரச்சினையை கடவுள் தீர்க்க உதவுவார் என்பதிலும் எமக்கு நம்பிக்கையில்லை. இருப்பினும் இலட்சக்கணக்கான ஈழத் தமிழ் அகதிகள் அனுபவித்து வரும் கொடுமைகளையும் அவலத்தையும் அவரது கடிதம் வெளிப்படுத்துவதால், அவரது உணர்வை மதித்து இக்கடிதத்தை வெளியிட்டுள்ளோம்.*

**— ஆசிரியர் குழு**

**ஐயா,**

அகதி முகாமில் தினந்தோறும் அழுதுகொண்டே வாடும் ஒரு அப்பாவி நான். என்னைப் போன்று அகதி முகாமில் கண்ணீரும் கம்பலையுமாக வாடுகின்ற லட்சக்கணக்கான மக்களின் கண்ணீரைப் பற்றி இந்தியாவில் யாரும் கவலை கொள்வதாக இல்லை. எங்கேயோ உள்ள ஈராக்கில் அமெரிக்கா குண்டு போட்டதற்கு துடித்து நின்ற இந்தியப் பத்திரிகையாளர்கள், தினந்தோறும் இலங்கை அரசு அப்பாவித் தமிழர்கள் மீது குண்டு போட்டுக் கொல்வதைக் காணாமலே இருந்து விடுகின்றனர். ஏன்?

இலங்கையில் தமிழனாகப் பிறந்த பாவத்தை விட நான் எவ்வித பாவமும் செய்யவில்லை. நான் மட்டுமா? இலட்சக்கணக்கானோரின் நிலை இப்படி. எவ்வளவு காலத்திற்கு அகதி முகாமில் இந்த வாழ்க்கை நாங்கள் வாழ முடியும்? வாழ்க்கை முழுவதும் அகதி முகாமில் வாழ்வதற்காகவா நாங்கள் பிறந்தோம்? மற்ற மனிதர்களைப் போல் வாழும் பாக்கியம் எங்களுக்கு இல்லையா? நாங்களும் மனிதர்கள் தானே. இதனை யார் நினைக்கிறார்கள்?

தமிழ்நாட்டில் யாரோ செய்த பிழைக்காக யாரையோ எல்லாம் தண்டிக்கிறார்கள். ''பழி ஓரிடம்; பாவம் ஓரிடம்'' என்பது போன்று காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இந்தியா எங்களுக்கு எதுவும் செய்யும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அப்பாவித் தமிழர்கள் சார்பில் இந்தியா எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே இந்திய வெளியுறவு அமைச்சு ''இலங்கைத் தமிழர் பிரச்சினையை நாங்கள் கை கழுவி விட்டோம். அப்பிரச்சினையைப் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. அதில் யாரும் தலையிடுவது பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை'' - என ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட வேண்டும் என தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

இப்பிரச்சினையில் தீர்வு காண ஆ[...]முள்ள நாடுகள் இந்தியாவின் பிரவே[...] காரணமாக முன்வராமல் இருக்கின்றன. [...]தியா ஒரு தடைக்கல் போன்று உள்ளது. [...]தியா ஒரு பகிரங்க அறிக்கை விட்டால் ம[...]தாபிமானமுள்ள நாடுகள் தலையிட்டு இ[...]ரச்சினையை தீர்க்கும் என நாம் நம்[...]றோம்.

புலிகள் பிடிவாதப் போக்குடைய[...]கள். இலங்கை அரசு பாசிசப் போக்கு[...]யது. இவர்கள் இடையில் நாம் சிக்கித் த[...]கிறோம். இந்நிலையில் ஒரு கட்டுரை எ[...] அனுப்புகிறேன். தயவு செய்து இதனை [...]கள் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி க[...]ளின் பெயரால், இயேசுவின் பெயரால், [...]தரின் பெயரால், அல்லாவின் பெயரா[...] காந்தியின் பெயரால் உங்களி[...] கோரிக்கை விடுக்கிறேன்.

இக்கட்டுரை உங்கள் பத்திரிக்கையி[...] வந்ததும் அதனை உலகத் தலைவர்களு[...] அனுப்ப உள்ளேன். பத்திரிகைகளுக்கு [...]பர் பிரேமதாசா மதிப்பு கொடுப்பவர். [...]யாதை செலுத்துபவர். ஒருவேளை இ[...] சமாதானத் திட்டத்தைக் கண்டதும் அதை[...] முன்வைக்க அவர் முன்வரலாம். இ[...] மாபெரும் மனித அவலத்தை நீக்க உங்[...] பேனா உதவுமாக இருந்தால் கட்டாயம் [...]வுள் உங்களை ஆசிர்வதிப்பார்.

**தங்கள் அன்புள்[...]**
**தேவபால[...]**



படிப்பகம்

www.padippakam.com

# வதைபடும் ஈழ அகதிகள்

**உத்தமபாளையம் வட்டத்திலுள்ள பண்ணைப்புரத்தில் இளம்பெண் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து விவசாயிகள் விடுதலை முன்னணி கடந்த 21.7.91 அன்று கம்பம் நகரில் பேருந்து மறியல் போராட்டத்தை நடத்தியது. இதில் பங்கேற்ற 14 வி.வி.மு. தோழர்கள் மதுரை மத்திய சிறையில் 13 நாட்கள் அடைக்கப்பட்டனர். சிறையில், உணவு இடைவேளையின் போது கைதிகளைச் சந்தித்து அவர்கள் உரையாடியபோது, அதிர்ச்சியூட்டும் பல உண்மைகள் தெரியவந்தன. தோழர்கள் எமக்கு அனுப்பிய தகவல்களை இங்கே தொகுத்தளித்துள்ளோம்.**

தற்போது மதுரை மத்திய சிறைக்கு கதிகளாக ஈழத் தமிழர்கள் ஒவ்வொரு ளும் வந்தவண்ணம் இருக்கிறார்கள். றத்தாழ 50 பேர்வரை அடைக்கப்பட்டிருந் னர். அவர்களிடம் விவசாயிகள் விடுதலை ன்னணியை அறிமுகப்படுத்தி, அவர்க ளப் பற்றி கேட்டபோது அவர்கள் கூறி வை எம் நெஞ்சை உலுக்குவதாக இருந் து.

ராஜதுரை என்பவர் மூன்று பிள்ளைக க்குத் தகப்பனார். இலங்கையிலிருந்து .000 ரூபாயுடன் வந்த இவரை தனுஷ் டி போலீசார் 19.7.91 அன்று கைது ய்து பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ன்று நாட்கள் தமது கட்டுப்பாட்டில் வைத் கொண்டு மிருகத்தனமாக சித்திரவதை ய்தனர். பின்னர் 22.7.91 அன்று கோர்ட் ஆஜர் செய்து, உண்மையைப் பேசி ல் கொன்று விடுவோம் என்று மிரட்டி வரை வாயடைத்தனர். பாஸ்போர்ட் இல் மல் வந்ததாக கோர்ட்டில் குற்றம் சாட்டப் டு அவர் சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

ராஜதுரை ஒரு வருடத்துக்கு முன்பே னவி மற்றும் குழந்தைகளுடன் இந்தியா கு வந்தவர். புலிகளுக்கும் இலங்கை அர தம் மோதல் ஏற்பட்ட சமயத்தில் அவர் நெல்வேலி - வள்ளியூர் அகதி முகா கு வந்து சேர்ந்தார். பின்னர் ஒழுங்கு ற விற்பனைக் கூடத்தில் வேலை செய்து தார். இதில் கிடைக்கும் வருமானத்தைக் ண்டு குடும்பத்தை நடத்த இயலாமால் கவே, இலங்கைக்குச் சென்று தனது த்தை அற்ப விலைக்கு விற்றதில் அவ தக் கிடைத்ததுதான் இந்த 40,000 ய். "இத்தொகையை எதிர்பார்த்து காத் கொண்டிருக்கும் என் குடும்பத்தாருக்கு என்ன சொல்வது?" என்று அவர் னையில் குமுறுகிறார். இரத்தக் கண் வடிக்கும் அவருக்கு நாம் எப்படி ஆறு கூறுதென்றே தெரியவில்லை.

செல்வம் என்பவர் தன் மனைவி மற் ஒரு பெண் குழந்தையுடன் கரை வந்த வர். அவரை மண்டபம் போலீசார் கைது செய்து, "உன் மனைவியை இன்று மட்டும் அனுப்பு; உன்னை விட்டு விடுகிறோம்" என்றனராம். இதற்கு இணங்க அவர் மறுக் கவே, அவரை ஒற்றைக்கண் சிவராசனுடன் தொடர்புள்ளவர் என்று பொய்க் குற்றம் சாட்டி சிறையிலடைத்துள்ளனர். "எங்களது உயிரும் மானமும் இரக்கமில்லாமல் பறிக் கப்படும்போது, சிங்கள அரசுக்கெதிராக இறுதிச் சொட்டு இரத்தம் உள்ளவரை போராடி வீர மரணமடையாமல் வந்த என் னைப் போன்றவர்களுக்கு இந்த தண்டனை தேவைதான்" என்று தன்னைத்தானே நொந்து கொண்டு அவர் விம்மினார்.

இதேபோல ஒவ்வொரு ஈழத் தமிழ ருக்குப் பின்னால் எத்தனையோ சோகங்கள்!

—

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவரு டன் உரையாடியபோது, இந்தியாவின் உளவு நிறுவனமான "ரா" (RAW) புலிகளை யும், ஈழ விடுதலைப் போராட்டத்தையும் சீர்குலைத்தது என்றார். "இந்தியாவின் ஆட் சிக் காலத்தில் சீக்கியர்களுக்கு எதிரான பொற்கோவில் நடவடிக்கையில் நாங்களும் ஈடுபடுத்தப்பட்டு, தாக்குதல் நடத்தினோம்" என்று இதுவரை கேட்டிராத செய்தியைக் கூறினார். லண்டனிலிருக்கும் கிட்டு வுக்கு புலிகள் இயக்கத் தலைமை மரண தண்டனை விதித்துள்ளதாகச் சொன்னார். இலங்கை யில் ஜே.வி.பி. இயக்கம் வளர்ந்து வருவதா கவும், 18 வயதாகும் இளைஞர்கள்தான் அதன் தலைவராக உள்ளார் என்றும் கூறி னார். அரசியல் பிரச்சாரம் இல்லாமல் வெறும் ராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டதால் ஈழத்தமிழர்களிடம் புலிகள் தனிமைப்பட்டுப் போயுள்ளதாக ஒப்புக் கொண்டார்.

சிறையில் பலதரப்பட்ட ஈழத் தமிழர்க ளுடன் நாங்கள் உரையாடினோம். அவர்க ளது அவலத்தை விவரிக்க பக்கங்கள் போதாது. வந்தாரை வாழ வைக்கும் செந்த மிழ் நாட்டை நம்பி அகதிகளாய் வந்த ஈழத் தமிழர்கள், இன்று சிறைக் கொடுமைக்கும் சித்திரவதைக்கும் ஆளாகி அல்லற்படுவ தைப் பார்த்து எங்கள் கண்கள் குளமாயின. ஈழத் தமிழர்கள் நமது மண்ணில் நாதியற்ற வர்களாக, அடக்குமுறைக்கு ஆளாகி நிற் பதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது.

இக்கொடுமைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம் என்று உறுதிய ளித்துவிட்டு, ஈழத் தமிழர்களின் அவலத்திற் குக் காரணமான ஆளும் கும்பல்கள் மீது வெஞ்சினத்தை நெஞ்சில் தேக்கி, சிறையில் வாடும் ஈழத் தமிழர்களிடம் பிரியாவிடை பெற்று நாங்கள் திரும்பினோம்.

---

படுவார்கள். இவ் விசாரணையில் படும் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட லை எனில் இந்த அகதிகள் திருப்பி ப்பப்படுவர்.

அகதிகளைத் திருப்பி அனுப்ப முயற் ம் ஜெர்மானிய மத்திய அரசின் வ எதிர்த்து சர்வதேச பொது மன்னிப் பை, மனித உரிமைச் சங்கங்கள், அகதி நிறுவனங்கள், அகதிக் குழுக்கள் மற் ல அமைப்புக்கள் தமது எதிர்ப்பைத் ர்ந்து வெளிக்காட்டி வருகின்றன. ஊர் கள். உண்ணாவிரதங்கள், பொதுக் ங்கள், கையெழுத்து சேகரிப்பு என களும், ஜெர்மன் மக்களும் சேர்ந்து ான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ாடு கடத்தப்படும் பயத்தினால் பலர் நாடுகளுக்குப் போய்க் கொண்டிருக் ள். எல்லையைக் கடக்கும் போது சாரால் பிடிக்கப்பட்டால் நாடு கடத் வதற்கு இதுவே போதுமான காரண டும்.

டு கடத்தும் திட்டத்தை கனடா, சுவிஸ், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுக ளும் வைத்திருக்கும் செய்திகள் இப்போது வெளியாகியுள்ளன. பிரான்சில் "விசா" இல்லாமல் உள்ள 3 லட்சம் வெளிநாட்டவ ரில் சுமார் ஒரு லட்சம் பேர் இவ்வருட இறு திக்குள் நாடு கடத்தப்பட உள்ளார்கள். அத் துடன் வேலை தடைச் சட்டமும் நடைமு றைக்கு வரவுள்ளது.

**"அகதிகளை வெளியேற்றாதே!" - ஜெர் மனியில் ஈழத்தமிழர்களின் ஆர்ப்பாட்டம்.**




சுவிஸிலிருந்தும் தஞ்சம் நிராகரிக்கப் பட்டவர்கள் நாடு கடத்தப்பட உள்ளார்கள். வேலை தடைச்சட்டம் 3 மாதங்களிலிருந்து 6 மாதங்களுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இவற் றையே பின்பற்றும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை.

ஜெர்மனியில் இருக்கும் தற்காலிக 'விசா' உள்ள தமிழ் அகதிகளை இன்று மிரட் டிக் கொண்டிருக்கும் விஷயம், இலங் கைக்கு நாடு கடத்தப்படவிருப்பதாகும். "ஐரோப்பா வெள்ளையருக்கே!" என்ற நாஜிசத்தின் ஒரு பகுதியாக எடுக்கப்பட்ட இந்த முடிவு இங்கு தஞ்சம் கோரிய அகதிக ளின் உயிர்ப் பாதுகாப்பைக் கேள்விக்குள் ளாக்கி இருக்கிறது.

நாடு கடத்தல் எப்படி நடக்கப் போகி றது என்பதை திட்டமிட்ட வகையில் ஜெர் மன் அரசு மறைத்து வைத்துள்ளதால் அகதி களுக்கு உதவி செய்யும் சட்டத் தரணிகளுக் கும், அகதி உதவி நிறுவனங்களும் இந் நட வடிக்கையை எப்படி எதிர்கொள்வதெனத்



படிப்பகம்

www.padippakam.com

தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றன. ஜெர்மனியில் நீண்டதான கோடைகால விடுமுறையில் பல மாணவர்களும், உதவி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளுக்குப் போயிருக்கும் சமயம் பார்த்து நாடு கடத்தலுக்கான சந்தர்ப்பத்தைத் தெரிந்தெடுத்மைகூட திட்டமிட்ட நடவடிக்கையே ஆகும்.

ஜெர்மனியின் நீண்டகால முடிவு தற்போது செயல்படுத்தப்பட உள்ளமைக்கு பல காரணங்கள் உள்ளன. சோசலிச நாடுகள் எனப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தோல்வியும் முக்கிய காரணமாக உள்ளது. குறிப்பாக ஜெர்மனியில், கிழக்கு - மேற்கு ஜெர்மனி இணைவையடுத்தும், வளைகுடாப் போரையடுத்தும் சாதாரண ஜெர்மன் மக்கள் மேல விழுந்துள்ள வரிச்சுமையினால் அரசாங்கத்தின் மீது ஏற்பட்டுள்ள எதிர்ப்பைத் திசைதிருப்புவதற்கும் இந் நடவடிக்கை வாய்ப்பாக உள்ளது. இதற்கு எதிராக ஆளும் கட்சியோ அல்லது முக்கிய எதிர்க்கட்சியோ பிரச்சாரம் செய்யாமல் உள்ளனர்.

மேற்கிலிருந்து ஆயுத வியாபார அரசுகளால் உலகின் ஏனைய பாகங்களில் அழிவுகள் உண்டாக்கப்பட்டு, அதனால் அகதிகளாக்கப்பட்ட மக்கள் இந்த நாடுகளில் தஞ்சம் கோருவதையும் தடைசெய்யும் இந் நாட்டு அரசுகளின் ஜனநாயக முகமூடிகளைக் கிழிக்க வேண்டியது நமது கடமை.

எனவே அனைத்து நாட்டு அகதிகளும் ஒன்றிணைந்து இம்மனித விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட வேண்டும். அத்துடன் தங்கள் நாடுகளில் நடக்கும் மனித உரிமை மீறல்களையும், அரச பயங்கர வாதங்களையும், அங்குள்ள மக்களின் துயர்களையும் தாங்கள் தஞ்சம் கோரியுள்ள நாட்டின் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அகதிகள் எப்படி உருவாகிறார்கள் என்பதையும், இதற்குப் பின்புலங்களாக இருந்து மேற்கு நாடுகள் எப்படி வன்முறைகளைத் தூண்டி விடுகின்றன என்பதும் எடுத்துக் காட்டப்பட வேண்டும்.

நாம் இங்கு சிறிது காலமாவது இருப்பதற்கான உரிமைக்காக குரல் கொடுப்பதோடு நின்று விடாது. இலங்கையிலும் இந்தியாவிலும் பட்டினியாலும், மருத்துவ சுகாதார வசதியில்லாமலும், காடுகள், பதுங்கு குழிகள், முகாம்களிலும் அகதிகளாக்கப்பட்டுள்ள எமது மக்களைப் பற்றியும் சிந்திப்போம். நாம் பல்வேறு நாடுகளில் அகதிகளாக சிதறியுள்ள போதிலும், எமது நாட்டில் ஒரு இடைக்கால அமைதிக்காவது வழிவகுக்க எம்மால் முடியும். பால்பவுடர் வாங்க முடியாமையினால் துடிக்கும் குழந்தைகளும், உயிர் — உளரீதியான பாதிப்புக்குள்ளாகும் எமது மக்களுக்கு இதனால் சிறிதளவாவது உதவ முடியும். அதற்கான நடவடிக்கையை இப்போதே ஆரம்பிப்போம்.

*(ஜெர்மனியில் வாழும் ஈழத் தமிழர்கள் நடத்தும் "தூண்டில்" ஏட்டிலிருந்தும், அந்நாட்டிலுள்ள ஈழத்தமிழர் அமைப்பொன்று அண்மையில் வெளியிட்டுள்ள "அகதிகளாக சிதறியுள்ள தமிழ் மக்களுக்கு" என்ற துண்டுப் பிரசுரத்திலிருந்தும் தொகுக்கப்பட்டது)*

# புலிகளின் பாசிசம்

**தம்மைத் தவிர வேறு எந்த விடுதலைப் போராட்ட அமைப்பும் ஈழத்தில் செயல்படக் கூடாது என்று அவற்றைத் தடை செய்து போராளி களை அழித்தொழிப்பது, ஜனநாயக சக்திகளைக் 'கைது' செய்து துரோகி கள் என முத்திரை குத்தி கொன்றொழிப்பது என்பதாக புலிகளின் பாசிசம் இன்று கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்து விட்டது. நேற்று ராஜினி திராணகம புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்று பிரபல ஈழத் தமிழ் எழுத்தாளரான கேசவன் புலிகளால் கைது செய்யப்பட்டு 'கா ணாமல்' போயுள்ளார். இதையொட்டி ஈழ நண்பர்கள் வெளியிட்டுள்ள துண்டறிக்கையை இங்கே பிரசுரித்துள்ளோம்.**

ஈழத்தில் "தீப்பொறி" அமைப்பை நிறுவியவர்களில் ஒருவரான **கேசவன்** உட்பட மொத்தம் 10 பேர் அண்மையில் புலிகளினால் 'கைது' செய்யப்பட்டுள்ளனர்.

மே 17-ந் தேதி நள்ளிரவு சீருடையிலும் ஆயுத பாணிகளாகவும் காணப்பட்ட புலிகள், கேசவன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றிவளைத்து கேசவனைக் 'கைது' செய்தனர். இதைத் தொடர்ந்து மே 21-ந் தேதி நள்ளிரவில் மீரா உட்பட 4 பெண்களும், யாழ் பல்கலைக் கழக மாணவர்களான சிறீநிவாசன் (கலைப்பீடம் 2-ம் வருடம்), கோவிந்தராசன் (கலைப்பீடம் 3-ம் வ
டம்) ஆகியோரும் இன்னும் 2 மாணவ
ளும் (பெயர் தெரியவில்லை) புலிகளா
பிடித்துச் செல்லப்பட்டனர். மேலதிக உத
அரசாங்க அதிபராக இருந்த கோவிந்
என்பவரும் புலிகளால் 'கைது' செய்யப்
டுள்ளார்.

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களில் கு
பிடத்தக்கவரான கேசவன் (நோபே
**கோவிந்தன், டொமினிக்** என்ற பெயர்
லும் அழைக்கப்பட்டவர்) மலையகத்தை
பிறப்பிடமாகக் கொண்டவர். 70-க
கலை - இலக்கியப் பத்திரிகைத் துறை

***பு**லிகளின் பாசிசத்துக்கு எதிராக, அதற்கு மாற்று அமைப்பாகக் கூறிக் கொள்ளும் "பிளாட்" (PLOT) துரோகக் கும்பல் இந்திய - இலங்கை பாசிஸ்டுகளின் காலை நக்கிக் கொண்டு தனது இருப்பை தக்க வைத்துக் கொள்ள முயன்று வருகிறது. அதன் துரோகத்தை அம்பலப்படுத்தி "பிளாட்"டிலிருந்து வெளியேறியோர் அண்மையில் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரம் இது.*

●

**த**மிழீழ விடுதலைப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்டு ஆயுத வடிவங்களே போராட்ட வடிவங்கள் என்னும் இன்றைய நிலைவரை, எமது விடுதலைப் போராட்டத்தில் தமது உயிரை நம்பிக்கைகளுடன் இழந்து போயுள்ளவர்கள் பலர். இதில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் (PLOT - பிளாட்) தம்மை இணைத்துக் கொண்டு பயிற்சிப் பாசறைகளிலேயே புதையுண்டு போன ஆயிரக்கணக்கான போராளிகளின் கனவுகள் - எதிர்பார்ப்புகளைக் குழிதோண்டிப் புதைத்த பெருமை உமாமகேஸ்வரன் கும்பலையே சாரும். இந்த தலைமையின் அரசியல் ஒட்டாண்டித்தனத்தால், இவ்விளைஞர்களின் கருத்துக்களும் முனகல்களும் எழுந்த போது அதற்குப் பதிலாக உமா கும்பல் படுகொலைகளையே பரிசாகக் கொடுத்தனர். இந்த வகையில் 500-க்கும் மேற்பட்டோரை இந்திய மண்ணில் கொன்று புதைத்தும் ஈழ மண்ணில் மென்டிஸின் தலைமையில் பல இளைஞ
ளைக் கொன்றும் ஒழித்தனர்.

இன்று புலிகளின் (LTTE) அட
முறைகள் பாசிச வழிமுறைகளை அ
துள்ளது. தமிழீழ மக்களின் கருத்து, எழுத்
பேச்சு சுதந்திரத்தை முற்றாக மறுத்து, ம
ளின் வாழ்வை மரணத்தின் விளிம்பிற்கு
தள்ளிய புலிகளுக்கு எதிராகப் போரா
தாகச் சொன்ன பிளாட் கும்பல், இந்திய
லும் இலங்கையிலும் தமது இயக்கத்தி
தமது இயக்கத்தின் கருத்து - எழுத்து சுத
ரத்திற்காகப் போராடிய தோழர்களை
கொன்றொழித்தது. இதுமட்டுமின்றி
டி.டி.ஈ., ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எ.
டெலோ போன்ற அமைப்புகளைச் சே
போராளிகளையும் எல்.டி.டி.ஈ. பாண
லேயே கொன்று குவித்தது.

நடுவீதியில் அநாதைப் பிணம
கிடந்த உமாமகேஸ்வரனுக்கு அஞ்
செலுத்தும் உமாவின் கொலைகார சகா
புலிகளின் பாசிசத்தை மட்டும் சொ
தாங்கள் இன்று இலங்கை இராணுவத்
கால்களை நக்கிப் பிழைப்பதை ம
முயல்கின்றனர்.

இவர்கள் தமது அராஜகத்தி
கொல்லப்பட்ட எமது தோழர்களுக்கும்
களின் படுகொலைக்குமான அஞ்சலி
நிராகரிக்க முடியுமா?

அவர்களின் லட்சியங்கள் ஒரு
முளைவிடத்தான் செய்யும்.



படிப்பகம்

www.padippakam.com

# இரத்த சாட்சி



**புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் விமலேஸ்வரன் (பிறப்பு: 1963; படு கொலை: 18.7.'88)**

1986 இறுதியில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் புலிகளின் அராஜகத்துக்கு எதி ராகக் கிளர்ந்தெழுந்த போது அப்போராட் டத்தை முன்னெடுத்துச் சென்ற மாணவர் தலைவர் இவர். இப்போராட்டத்தில் முன்ன ணியில் நின்று செயல்பட்ட மாணவர் விஜித ரன் புலிகளால் கடத்தப்பட்டார்.

விஜிதரனை விடுதலை செய்யக் கோரி யும், போராளி குழுக்களின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் மக்கள் தாம் விரும்பும் அரசியல் ஸ்தாபனங்களில் இருந்து செயல்படுவதற்கான சுதந்திரத்தை அங்கீகரிக்கக் கோரியும் விமலேஸ்வரன் தலைமையில் யாழ் பல்கலைக்கழக மாண வர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். போராட்டம் தொடங்கி 10-வது நாளில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் புலிகளின் சார்பாக சமரசம் பேசி, போராட்டத்தை வேறு வடிவங்களில் தொடர ஆலோசனை கூறியதன் பேரில் உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. ஆனால் அடுத்த சில நாட்களிலேயே இப்போராட் டத்தில் பங்கேற்ற மாணவர்களை புலிகள் மிருகத்தனமாக தாக்கினர்.

இதனால் விமலேஸ்வரன் தலைமறை வாகி கிராமப்புற பகுதியில் மக்களுடன் ஐக் கியப்பட்டு அரசியல் பணிகளைச் செய்து வந்தார். பின்னர், 'இந்திய அமைதிப்படை' (I.P.K.F.) ஈழத்தில் தனது இருப்பைப் பேணிக்கொள்ள முயன்ற போது, அப்போ திருந்த அரசியல் சூழ்நிலை தேச விடுத லைப் போராட்டம் என்ற புதிய பாய்ச்சல் நிலைக்கு முன்னேறியது. இந்த நிலையில் விமலேஸ்வரன் வெளி வந்து மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களோடு இணைந்து கல்வி கற்றுக் கொண்டே அரசி யல் பணிகளில் ஈடுபட்டார்.

தமது கருத்துக்கும், ஆதிக்கத்துக்கும் உடன்படாதவர்களை எல்லாம் துரோகிக ளாக முடிவு செய்துவிட்ட புலிகள் 18.7.88 அன்று மாலை விமலேஸ் வரனை சுட்டுக் கொன்றனர். இறந்து போன போது ஒரு அஞ்சலிக் கூட்டத்தைக் கூட காணமுடியா மல் போன அந்தத் தியாகியின் போர்க்கு ணம், நாட்டுப்பற்றும் ஜனநாயகப் பற்றும் கொண்ட போராளிகளுக்கு இன்றும் புதுரத் தம் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது.

உழைத்தவர். அற்புதமான சிறுகதைகளை "...சேர்த்தக்கரை" எனும் பத்திரிகையில் எழுதி ...வர். 80களில் பிளாட் (PLOT) அமைப்பில் இணைந்து கொண்டு உழைத்தவர். தள பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். பின் ...ர் "பிளாட்"டின் உட்கட்சி அராஜகம், படு கொலைகளினால் வெளியேறி "தீப்பொறி" அமைப்பினை நிறுவியவர். புகழ்பெற்ற "புதியதோர் உலகம்" நாவலையும் இக்கா ... பகுதியிலேயே எழுதினார்.

இவர்களைக் கைது செய்யும்போது, "உங்களை மீறி வேலை செய்யக்கூடிய எவ ...யும் நாம் விட்டு வைக்கமாட்டோம். தீப் பொறியை முக்கியமான சக்திகளில் ஒன்றா ... கருதுகின்றோம். எனவே உங்களைக் ...து செய்கிறோம்" எனப் புலிகள் கூறியுள் ...ர்.

பல்கலைக்கழக மாணவர்களைக் கைது ...த பின்னர் பல்கலைக் கழகத்தில் புலி ... கூட்டமொன்றைக் கூட்டினர். அங்கு ...ய புலிப் பிரமுகர் ஒருவர் 'கைதான' ...வர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக் ... பலவற்றைக் கூறினார். பின்னர் கூட்ட ...வில் "கைதானவர்களுக்கு என்ன தண் ...ன வழங்கப்பட வேண்டும்?" என ...வர்களைக் கேட்டார். நீண்டநேர ...னத்திற்குப் பின் மாணவர் ஒருவர் ...ச்சலுடன் எழுந்து "இவர்களை மன் ...துவிட முடியாதா?" எனக் கேட்டார். ...கு எந்தவித பதிலுமில்லாமல் கூட்டம் ...க்கப்பட்டது.

இக்'கைது' பற்றி தமது பத்திரிகையில் ...ய புலிகள் "பிடிபட்டவர்கள் பிளாட் ...கக் கும்பலைச் சேர்ந்தவர்கள்' என ...ட்டமாகப் பொய்க் காரணம் காட்டி யுள்ளனர். புலிகளால் பிளாட் தடை செய்யப் படு முன்னரே பிளாட்டின் அராஜகப் போக் குகளால் அதிலிருந்து வெளியேறியவர் கேசவன். பிளாட்டுக்கு தலைமறைவாக இருந்து கொண்டே, 1985-ம் ஆண்டின் முற் பகுதியில் பிளாட் மீதான மாயையுள் இருந்த மக்கள் மத்தியில் அதன் அராஜகப் போக்கை அம்பலப்படுத்தும் கடினமான முயற்சியில் ஈடுபட்டவர். "தீப்பொறி" பத்திரிகையின் இரண்டு இதழ்களினூடாகவும், "புதியதோர் உலகம்" நாவல் மூலமாகவும் பிளாட்டின் அராஜகப் போக்கை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர். இதை மக்களும் அறி வர்; புலிகளும் அறிவர்.

இப்படியிருக்க இவர் பிளாட் அமைப் பைச் சேர்ந்தவரென காரணம் கற்பிப்பது விஷமத்தனமானது. தமது உள்நோக்கம் கொண்ட செயலை வெளியில் நியாயப்ப டுத்துகின்ற முயற்சியே இது.

ஜூனில் யுத்தம் ஆரம்பமானதிலி ருந்து இன்றுவரை என்.எல்.எஃப்.டி. தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை, பி.எல்.எ ஃப்.டி., தீப்பொறி அமைப்புகளைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களும், மற்றும் இயக்கங்களிலிருந்து வெளியேறியி ருந்தவர்கள், எதுவுமே அறியாதவர்கள்... என எல்லோருமாக சுமார் 200-க்கும் மேற் பட்டோரும் புலிகளால் கடத்தப்பட்டு 'காணாமற்' போயுள்ளனர். யாழ் பல்கலைக் கழக மாணவன் விமலேஸ்வரன் படுகொ லையிலிருந்து இன்றைய "கைதிகள்' வரை பிடிபட்ட / கொல்லப்பட்ட எவருமே இலங்கை அல்லது இந்திய அரசுக்கு சார்பா னவர்கள் அல்ல என்பதும், எவ்வகையிலும் துரோகிகள்' எனப் பட்டம் சூட்ட முடியாத வர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? எங்கு 'சிறை' வைக்கப்பட்டி ருக்கிறார்கள் என்பது இவர்களது பெற் றோர், உறவினர்களுக்குக்கூட தெரியவரு வதில்லை.

**இத்தனைக்கும் இவர்கள் செய்த குற் றம் தான் என்ன?**

இந்திய அரசின் கெடுபிடி, இலங்கை அரசின் ஒடுக்குமுறை, புலிகளின் ஜனநாய மறுப்பு, மற்ற பெரிய இயக்கங்களின் அட்ட காசம் என்பவனற்றின் மத்தியிலும் சொந்த மண்ணில் வாழ்ந்தார்கள்; விடுதலையை நேசித்தார்கள்.

**இதுதான் இவர்கள் செய்த குற்றமா?**

நாட்டின் தலைவிதியை எண்ணி ஏங் கும் நெஞ்சங்களே,

மக்களின் உண்மையான விடுதலைக் கான முனைப்புகள் உயிருள்ளவை என்ற உண்மையை உணருங்கள்.

இந்த முனைப்புகளுக்கு புலிகள் தடை யாக இருக்கிறார்கள் என்பதை உணருங்கள்.

உண்மையை உணர மறுப்பது, 'சோலி வேண்டாம்' என்ற மனோபாவம் என்பவ னற்றிலிருந்து நாம் வெளியே வரவேண்டி யுள்ளது என்பதை உணருங்கள்.

காலம் காலமாக பல நல்ல சக்திகளைத் தமிழினம் இழந்து கொண்டு வருகிறது. இதைக் கேட்டுப் பழகிப் போனவர்களாக ஆகிவிடாமல், இவற்றைத் தடுக்க உங்க ளால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்

**— நண்பர்கள் (ஈழம்)**



படிப்பகம்

www.padippakam.com

## பி.சி.சி.ஐ. விவகாரம்:

# புதைந்து கிடக்கும் உண்மைகள்

ஐம்பதாயிரம் கோடி ரூபாய்க்கு சொத்துடைய வங்கி, எழுபது நாடுகளில் 400 கிளைகளைக் கொண்ட வங்கி விபச்சாரம் நடத்துமா? போதை மருந்து கடத்துமா? ஆயுதக் கடத்தலில் ஈடுபடுமா? சர்வதேசக் கிரிமினல் பேர்வழிகளின் கறுப்புப் பணத்தை ரகசியமாக பதுக்கி வைக்குமா? - இந்த வங்கியைப் பற்றி அறியாதவர்களுக்கு அது ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால், இத்தகைய மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு அந்த வங்கியின் சொத்துக்கள் கடந்த ஜூலை முதல் வாரத்தில் முடக்கப்பட்டு, உலகெங்குமுள்ள அதன் கிளைகள் மூடப்பட்டன.

இந்த வங்கியின் பெயர் பாங்க் ஆப் கிரடிட் அண்டு காமர்ஸ் இன்டர் நேஷனல் பி.சி.சி.ஐ. (BCCI) என்று அது சுருக்கமாக அழைக்கப்படுகிறது. பாகிஸ்தானைச் சேர்ந்த ஆகா ஹாசன் அபேடி என்பவர் 1972-ல் இந்த வங்கியை நிறுவினார். லண்டனைத் தலைமையகமாகக் கொண்டுள்ள இந்த வங்கியை பின்னர் அபுதாபியின் மன்னரான ஷேக் சையத் விலைக்கு வாங்கினார்.

கடத்தல், விபச்சாரம், போதை மருந்து - ஆயுதக் கடத்தல், ரகசிய உலகப் பேர்வழிகளின் கறுப்புப் பணத்தை பிற நாடுகளில் முதலீடு செய்ய உதவி செய்வது, உளவு நிறுவனங்களுக்கும் பயங்கரவாத அமைப்புகளுக்கும் ரகசியமாகப் பணம் கொடுப்பது என்று அடுக்கடுக்கான மோசடி கிரிமினல் நடவடிக்கைகளால் இன்று உலகம் முழுவதும் அம்பலமாகியுள்ளது பி.சி.சி.ஐ. வங்கி. குறிப்பாக சர்வதேச மாஃபியா கும்பலின் கறுப்புப் பணத்தை பிற நாடுகளுக்கு கடத்தவும் மறு முதலீடு செய்யவும் இந்த வங்கி ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டின் பெரு முதலாளிகள் தமது கறுப்புப் பணத்தை ரகசியமாகப் பதுக்கி வைக்க இந்த வங்கி உதவியாக இருந்தது. இந்த வங்கியில் அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. ரகசிய கணக்கு வைத்திருந்தது. அதன் மூலம் உலகம் முழுதும் தனக்கு வேண்டாத ஆட்சிகளைக் கவிழ்க்கும் சதிச் செயலுக்கு கோடிக் கணக்கில் பணப் பட்டுவாடா செய்துள்ளது. சர்வதேச கடத்தல் பேர்வழிகள் தமது கருப்புப் பணத்தைக் குவித்து வைக்கவும், கடத்தலுக்குத் தடையாக நிற்கும் அந்தந்த நாடுகளின் சுங்கத் துறை அதிகாரிகள், அரசியல்வாதிகள், போலீசுத் துறையினரை சரிகட்டி கடத்தலைத் தொடர இந்த வங்கியே எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தது. இதற்காக அரசு உயர் அதிகாரிகளுக்கு விபச்சாரிகளை அனுப்பி வைத்தும் கோடிக்கணக்கில் லஞ்சம் கொடுத்தும் தனது காரியத்தை சாதித்துக் கொண்டது.

பனாமாவின் முன்னாள் போதை மருந்து கடத்தல் அதிபரான நோரீகா, பிலிப்பைன்ஸின் முன்னாள் சர்வாதிகாரி மார்க்கோஸ் மற்றும் சில ஏழை நாடுகளின் ஆட்சியாளர்கள் தமது சொந்த நாட்டைச் சூறையாடி அச்செல்வங்களை இந்த வங்கியி[ல்] ரகசியமாகப் பதுக்கி வைத்திருந்தனர். இதே போல் ஈராக்கின் சதாம் உசேனும் கோடிக்க[ண]க்கில் பதுக்கி வைத்துள்ளதாகக் கூறப்படு[]கிறது. பதவியிலிருந்த போது இந்த வங்[கி]யின் மோசடிகளுக்கு உடந்தையாக இருந்[த] முன்னாள் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்ட[]ருக்கு இந்த வங்கி கோடிக் கணக்கில் லஞ்ச[ம்] கொடுத்துள்ளது. பல கோடி ரூபாய் லஞ்ச[ம்] மற்றும் விபச்சாரத்தால் அரசு உயர் அதிகா[ரி]களின் கைகள் இந்த வங்கியால் கட்டி[ப்] போடப்பட்டதால் அமெரிக்கா, பிரிட்ட[ன்] உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் கூட இந்[த] வங்கியின் மீது நடவடிக்கை எடுக்க முடி[ய]வில்லை.


இந்த உலக மகா மோசடி வங்கிக்[கு] இந்தியாவில் பம்பாயில் மட்டும் ஒ[ரே]யொரு கிளை உள்ளது. இருப்பினும் இந்[த] ஒரு கிளையின் மூலமாக பல மோசடிகள் நடந்துள்ளன. வெளிநாடுகளில் வாழும் இ[ந்]தியர்கள் இந்த வங்கியில் தமது கறுப்பு[ப்] பணத்தை கோடிக் கணக்கில் பதுக்கி வை[த்]துள்ளனர். இந்த பணம் இந்தியத் தரகு மு[த]லாளிகளுக்கு முறைகேடாக பல வழிகளி[ல்] வழங்கப்பட்டுள்ளது. ராஜீவ் ஆட்சிக் கால[த்]தில் நிதியமைச்சக இயக்குனராக இருந்[த] பூரேலால் இது பற்றி விசாரிக்க கோரியு[ம்] கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்ப[ட]வில்லை 1987ல் ஒரு பயண ஏஜெண்டுக்[கு] போலிக் கையெழுத்துகள் போட்டு இரண்[டு] மாதங்களில் 13,200 டாலர் மதிப்புடை[ய] அந்நியச் செலாவணியை இந்த வங்[கி] மோசடி செய்தது. இதற்காக இந்திய ரிச[ர்வ்] வங்கி அபராதம் விதித்ததே தவிர, இ[ந்த] வங்கியின் இதர மோசடிகளை ஆராய்ந்[து] நடவடிக்கை எடுக்கவில்லை.

கரீபியன் தீவுக் கூட்டத்திலுள்ள "வ[ரி]யில்லா சொர்க்க"மான மான் தீவைச் சேர்[ந்த] ஃபியாஸ்கோ, கொரொக்கொடைல் ஆகி[ய] இரு போலி நிறுவனங்கள் ராஜீவின் கூட்ட[ா]ளியும் மோசடித் தரகுப் பெரு முதலாளி[யு]மான அம்பாணியின் ரிலையன்ஸ் நிறுவன[த்]தின் பங்குகளை 76 கோடி ரூபாய்க்கு வா[ங்]கியுள்ளன. இந்தப் பணம் பி.சி.சி.ஐ. மூல[மா]கவே வந்துள்ளது. பின்னர் இதன் மூலம் எ[ல்]அண்டு டி நிறுவனத்தின் பங்குகளை அ[ம்]பாணி கைப்பற்ற இந்தப் பணம் பயன்ப[டு]த்தப்பட்டுள்ளது. அதாவது, சர்வதேசக் க[ட]த்தல் பேர்வழிகளின் கறுப்புப் பணம் போ[லி] நிறுவனங்களின் பெயரால் அம்பாணிக்[கு] கொடுக்கப்பட்டு, அதன் மூலம் அவர் எ[ல்] அண்டு டி நிறுவனத்தை விழுங்க இ[ந்த] வங்கி உடந்தையாக செயல்பட்டுள்ளது.

இதுதவிர பாரத ஸ்டேட் வங்கி (SBI) பி.சி.சி.ஐக்கு ஏராளமாகக் கடன் கொ[டு]த்துள்ளது. அந்தத் தொகை முழுவதை[யு]ம் இந்த வங்கி, அம்பாணியின் ரிலையன்[ஸ்] நிறுவனத்துக்கு பல வழிகளில் முறை[கே]டாக கொடுத்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக உல[கெங்]கும் இந்த வங்கி முடக்கப்படுவதற்கு மு[ன்] நாட்களுக்கு முன்பாக, ஏறத்தாழ 25 கோ[டி] ரூபாய் லண்டனிலுள்ள இந்தியாவின் சி[ண்]டிகேட் வங்கிக் கிளையின் மூலமாக அம்[பா]ணியின் ரிலையன்ஸ் கம்பெனிக்குத் தரப்[பட்]டுள்ளது. இந்தத் தொகை பி.சி.சி.ஐ. (

மோசடியே மூலதனம்: பம்பாயில் உள்ள பி.சி.சி.ஐ. வங்கிக் கிளை.






படிப்பகம்

www.padippakam.com

மாக வந்துள்ளது. அடுத்த சில நாட்களில் அம்பாணி தான் புதிதாக 'ரிலையன்ஸ் எக்ஸ்போர்ட்' எனும் நிறுவனத்தை 25 கோடி ரூபாய் மூலதனத்துடன் நிறுவப் போவதாக அறிவித்தார்.

இந்தியத் தரகு முதலாளிகளின் வரி ஏய்ப்பு, அந்நியச் செலாவணி மோசடி பற்றி ஆராய ராஜீவ் ஆட்சிக் காலத்தில் இந்திய அரசால் அமர்த்திக் கொள்ளப்பட்ட ''பேர் ஃபாக்ஸ்'' எனும் துப்பறியும் நிறுவனத்தின் தலைவரான ஹெர்ஷ்மேன் என்பவரும் சில அமெரிக்க செய்தி நிறுவனங்களும் இத்தகவல்களை உறுதிப்படுத்தியுள்ளன. ஆனாலும், இந்திய அரசு அம்பாணியின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

பின்னர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பி.சி.சி.ஐ. மோசடிகள் பற்றி கூச்சல் போட்டதும், ''நாட்டுக்கு அபாயம் ஏற்படும் வகையில் எதுவும் நடக்கவில்லை. முதலாளிகளுக்கோ அரசியல்வாதிகளுக்கோ இந்த வங்கியின் மூலம் ரகசியமாக பணம் தரப்படவில்லை'' என்று நிதியமைச்சர் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தார். எதிர்க் கட்சிகளின் வெளிநடப்புக்குப் பிறகு இந்த விவகாரம் முடங்கிப் போய் விட்டது. தற்போது பி.சி.சி.ஐ.யின் பம்பாய்க் கிளைக்கு தற்காலிகப் பொறுப்பேற்றுள்ள பாரத ஸ்டேட் வங்கி (SBI), இம்மோசடி



**மோசடி வங்கியின் அதிபரும் அபுதாபி மன்னருமான ஷேக் சையத்.**

வங்கியில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தமது பத்திரங்களை ஸ்டேட் வங்கியில் மாற்றிக் கொள்ள சட்டபூர்வ அங்கீகாரமும் அளித்துவிட்டது.

அம்பாணி, இந்துஜா, சாபிரியா முதலான தரகுப் பெருமுதலாளிகள் திடீர் பணக்காரர்களாக வளர்ந்து ஆதிக்கம் செலுத்துவதையும், சர்வதேச கிரிமினல் - மாஃபியாக்களின் பினாமிகளாக இவர்கள் செயல்படுவதையும், ராஜீவின் கூட்டாளிகளான இவர்களின் மோசடிகளை இந்திய அரசு அங்கீகரித்து அரவணைத்து வருவதையும் பற்றி ஏற்கனவே நாம் அம்பலத்தில் எழுதியுள்ளோம். அதை பி.சி.சி.ஐ. விவகாரம் மீண்டும் நிருபித்துள்ளது. பாசிச ராஜீவ் கும்பலின் ஊழல் கொள்ளைக்கு நேற்று போபர்ஸ் விவகாரம், இன்று பி.சி.சி.ஐ., நாளை...?

○ குமார்

# சவால் விட்டு சதிராடிய காங்கிரசு கோழைகள்

"ஈழ அகதிகளை வெளியேற்றாதே!" என்ற தலைப்பில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் அரங்குக் கூட்டம் வடகோவை - குஜராத்தி சமாஜ்பவனில் 15.07.91 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தை அறிவிக்கும் பொருட்டு கோவை - ம.க.இ.க. மற்றும் தொழிலாளர் பிரச்சாரக்குழு இணைந்து சோமசுந்தரம் ஆலை, CSW ஆலை மற்றும் காளீஸ்வரா ஆலையில் கேட் கூட்டம் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில் தோழர் நசீம் இக்மத் உரையாற்றிய பொழுது பாசிச ராஜீவ் கொலைக்கு அனுதாபம் தேவையில்லை எனவும் ராஜீவின் அம்மணமான பிணத்தைக் காட்டி ஓட்டுப் பொறுக்கியது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் விளக்கிப் பேசினர்.

இதனைக் கேட்டு பொறுக்க முடியாத HMS சங்க கிளை நிர்வாகி சுப்ரமணியம் மற்றும் BNTUC சங்க கிளை நிர்வாகி சக்திவேல் ஆகியோர் 17.7.91 அன்று கண்டனக் கூட்டம் நடத்தினர். வக்கிரமாக கொச்சையாக பல அவதூறுகளை அள்ளி வீசினர். ராஜீவை திட்டிப் பேசியவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் இல்லையெனில் நடப்பதே வேறு என்றும் போஸ்டரை எல்லாம் கிழிப்போம் என்றும் சவடாலடித்தனர்.

இதற்கு பதில் சொல்லும் முகமாக 19.7.91 அன்று ம.க.இ.க. மற்றும் தொ.பி.கு. அமைப்புகள் சேர்ந்து கேட்கூட்டம் நடத்தின. தோழர்கள் ராஜீவின் பாசிச நடவடிக்கைகளை விலாவாரியாக அம்பலப்படுத்தியதோடு இத்தகைய மக்கள் விரோதிக்கு அனுதாபம் தெரிவிப்பது அரசியல் பச்சோந்திதனமே என்றும் விளக்கிப் பேசினர். மேலும் ''எமது கருத்தை இறுதிவரை உறுதியுடன் பிரச்சாரம் செய்வோம்... மன்னிப்புக் கேட்க முடியாது. காங்கிரசுக்காரர்கள் ரௌடித்தனத்தை கையிலெடுத்தால் அவற்றை சந்திக்கவும் தயாராக உள்ளோம்'' என எடுத்துக் கூறினர்.

பின்னர் காங்கிரசுக்காரர்கள் கூட்டம் நடத்தினாலும் அதில் ''இவர்கள் இத்தகைய போக்குடையவர்கள்தான். ஆலையிலே இருக்கின்ற வேறுபல பிரச்சினைகளைப் பாருங்கள்'' என்று கூறி ஆலை கேண்டீன் புதிய சம்பள பிரச்சினை, பதிலி, பெர்மணெண்ட், வேலை மாற்றிக் கொடுப்பது போன்றவற்றைப் பேசினர். தோழர்களின் உறுதியான தொடர் நடவடிக்கைக்கும் சரியான கருத்துக்கும் முகங்கொடுக்க முடியாமல் காங்கிரசுக்காரர்கள் இப்படி மறைமுகமாக பின்வாங்கி கொண்டு தங்களை யார் என்று இனங்காட்டிக் கொண்டனர்.

# காக்கிச் சட்டை ரௌடிகளின் கயவாளித்தனம்!

"ஒரு முதலமைச்சரை பிடாரி என்றெல்லாம் போஸ்டர் அடித்து ஒட்டுவது தவறு. ஈழப்பிரச்சினையில் உமது அணுகுமுறை அரசுக்கு எதிரானது. ஒரு Open Organisation (வெளிப்படையான அமைப்பு) இப்படியெல்லாம் செயல்படகூடாது'' - கடந்த 9.8.91 அன்று மக்கள் கலை இலக்கிய கழகம் கடலூர் கிளை சார்பில் மஞ்சக்குப்பம் தண்ணீர்த் தொட்டி அருகில் காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக உரிமையை வலியுறுத்தியும், ஈழ அகதிகளை வெளியேற்றும் முயற்சியைக் கண்டித்தும் பொதுக்கூட்டம் நடந்தது. பொதுக்கூட்டத்திற்கு அனுமதி அளித்த டி.எஸ்.பி., இறுதி நேரத்தில் தோழர்களை வரச்சொல்லி வழங்கிய அறிவுரைதான் இது. கூட்டத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அனுமதி வழங்கினார்.

தோழர் ரமேஷ் தலைமையில் தோழர்கள் சர்க்கரை, காளியப்பன் ஆகியோர் பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தோழர்கள் பேசும்போது போலீசின் கையாள் ஒருவன் பக்கத்து கட்டிடத்திலிருந்து தோழர்களைப் புகைப்படம் எடுக்க முயற்சித்தான். இதனை அறிந்த தோழர்கள் உடன் அவனை அப்புறப்படுத்தினர். இதனால் ஏற்பட்ட சிறிய சலசலப்பை சாக்காக வைத்து டி.எஸ்.பி., ஒரு வேன் நிறைய ரிசர்வ் போலீசு படையைக் கொண்டுவந்து இறக்கினார்.

அருகிலிருந்த ஒரு கடைக்காரரிடம், பத்து பேருடன் சென்று கூட்டத்தில் கலாட்டா செய்யும்படியும் தான் லத்தி சார்ஜ் செய்து தோழர்களை கைது செய்து விடுவதாகவும் கூறினார், டி.எஸ்.பி. ஆனால் கடைக்காரர் மறுத்து விடவே இதை யாரிடமும் சொல்லக் கூடாது என மிரட்டினார். இதேப்போல அ.தி.மு.க. பிரமுகர் ஒருவரையும் அணுகிய போது, அவர் ''ம.க.இ.கவிடம் நான் அதுமாதிரி நடந்து கொள்ள மாட்டேன்'' எனக்கூறி விட்டார். எனவே போலீசு, கடலூரின் பழைய நகர்பகுதியிலிருந்து அடியாள் கும்பலை கொண்டுவந்து இறக்கியது. ஆனால் அவர்களைக் கொண்டு கலவரமூட்ட சாதகமான சூழ்நிலை இல்லாததால் கூலி கொடுத்து திருப்பி அனுப்பி விட்டது.

மொத்தத்தில் ஒரு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கி பீதியூட்டி மக்கள் கூடாதவாறு கூட்டத்தை கலைக்க முயற்சித்தது. ஆனால், போலீசின் இந்நடவடிக்கை மக்களிடையே வெறுப்பைத்தான் வளர்த்தது. பலர் போலீசின் கீழ்த்தரமான நடவடிக்கையை வாய்விட்டே திட்டிக் கொண்டு போனார்கள்.



படிப்பகம்

www.padippakam.com




● *பொதுவுடமைக் கொள்கையுள்ள ரஷ்யாவில் பல நிறுவனங்கள் தனியார் வசம் ஒப்படைக்கும் சட்டம் இயற்றியுள்ளது பற்றி...?*

**— லவ்லி பாலகிருஷ்ணன், மங்களக்குடி.**

★ சி.பி.ஐ.. சி.பிஎம்.. சுசி. எம்.சி.பி.ஐ.. தமிழ் தேசியப் பொதுவுடமைக்கட்சி (மணியரசன்). இந்திய மக்கள் முன்னணி போன்ற போலிக் கம்யூனிச அமைப்புகள்தாம் ரஷ்யாவில் பொதுவுடமைக் கொள்கையுள்ளதாகவும், அந்நாடு சோசலிச நாடுதான் என்றும் இன்னமும் கூறுகின்றன. மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் யாரும் அவ்வாறு கருதவில்லை. ஸ்டாலினுக்குப் பிறகு ரஷ்யக் கம்யூனிசக் கட்சி மற்றும் அரசு அதிகாரத்தை ஒரு அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் குருச்சேவ் - பிரஷ்நேவ் கும்பல் கைப்பற்றியதும் அங்கு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் ஆட்சி நிறுவப்பட்டு விட்டது. அது சமூக ஏகாதிபத்தியமாகி அமெரிக்காவுடன் உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இறங்கி ரஷ்யப் பொருளாதாரத்தை இராணுவமயமாக்கி ஆயுதக் குவிப்பிலும் உலகப் போருக்குமான தயாரிப்பில் ஈடுபட்டது. இதனால் தீராத அரசியல், பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது. இதன் விளைவாக ரஷ்யாவில் ஏற்கனவே இருந்து வரும் அரசு ஏகபோக அதிகார முதலாளித்துவத்தை அகற்றிவிட்டு மேற்கத்திய பாணியிலான ''சுதந்திர''சந்தைப் பொருளாதாரத்தைக் கொண்ட தனியார் ஏகபோக முதலாளித்துவத்தை நிறுவும் வேலையில் இப்போது கோர்பி கும்பல் இறங்கிவிட்டது. எனவே, அங்குள்ள தொழில் - வர்த்தக நிறுவனங்களையும் நிலங்களையும் தனியுடமையாக்குவதில் வியப்பில்லை. இதற்கு வசதியாகவும் பொருத்தமாகவும்தான் சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் என்பதை சோவியத் சுயாதிபத்தியக் குடியரசுகளின் ஒன்றியம் என்றும் ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி என்பதை ருஷ்ய சமூக ஜனநாயகக் கட்சி என்றும் மாற்றிவிட்டனர். அக்கட்சியும் மார்க்சியம் - லெனினியத்தோடு பொதுவுடமைக் கொள்கையையும் கைவிட்டு, ''ஜனநாயக''த்தையும் தனி உடமையையும் ஏற்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்து விட்டது. இருந்தபோதும் இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் இன்னமும் அதைக் கம்யூனிசக் கட்சி என்றும், சோசலிச நாடு என்றும் தமது அணிகளை ஏய்க்கின்றனர்.

● *இந்தியாவில் பாராளுமன்றம் அரசியல் ரீதியாகக் காலாவதி ஆகவில்லை என்றும் இதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறும் நீங்கள் அதை அரசியல் ரீதியிலும் காலாவதியாக்க பாராளுமன்றத்தில் பங்கெடுத்துதான் ஆக வேண்டும் என்பதும் இல்லை என்கிறீர்கள். அரசியல் ரீதியாக காலாவதியாகி விட்டதா என்று பார்ப்பதே பாராளுமன்றத்தில் பங்கெடுக்கத் தானே? அதுதானே இந்த விவாதம் வந்ததன் நோக்கம்?*

— டி.மணி, மத்தூர்.

★ இந்தப் பார்வையில் பல தவறுகள் இருக்கின்றன. பரந்துபட்ட மக்களின் அரசியல் விழிப்புணர்வையும் எதிரிகளின் அரசியல் பலம் - பலவீனத்தையும் எடைபோட்டு பாராளுமனற முறை அரசியல் ரீதியில் காலாவதியாகி விட்டதா, இல்லையா என்று தீர்மானிப்பது புறநிலை யதார்த்தத்தைக் கணிக்கிற விசயம். பாராளுமன்றத்தில் பங்கேற்பதா, வேண்டாமா என்பது அரசியல் ரீதியில் அதைக் காலாவதியாக்குவதற்கு புரட்சிகர இயக்கம் மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகள் அடங்கிய அகநிலைக் கூறைத் தீர்மானிக்கிற விசயம். புறநிலை யதார்த்தத்துக்கேற்ப, அதை அடிப்படையாகக் கொண்டுதான் இயக்கத்தின் செயல்முறைகள் அடங்கிய அகநிலைக் கூறைத் தீர்மானிக்க வேண்டும்; அவ்வாறின்றி கைவசமுள்ள செயல் முறைகள் அடங்கிய அகநிலைக்கூறை வைத்துக் கொண்டு புறநிலை யதார்த்தத்தைத் தேட முடியாது; ஆகவே பாராளுமன்றத்தில் பங்கேற்பதற்காகத்தான் அரசியல் ரீதியில் அது காலாவதியாகிவிட்டதா? இல்லையா என்றுபார்ப்பது அகநிலை வாதமாகும்.

மேலும் புறநிலை யதார்த்தத்தைக் கணிப்பதற்கான பல்வேறு அம்சங்களில் ஒன்றுதான் பாராளுமன்ற முறை அரசியல் ரீதியில் கலாவதியாகிவிட்டதா, இல்லையா என்று மதிப்பீடு செய்வது. அவ்வாறு கணித்து, அதற்கேற்ப வகுக்கப்படும் யுத்த தந்திரத்துக்குப் பொருத்தமாகத்தான் செயல் முறைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அப்படி இல்லாமல் இந்த ஒரு அம்சத்தை மட்டுமே பார்த்து பாராளுமன்றப் பங்கேற்பையும் புறக்கணிப்பையும் தீர்மானிப்பது வறட்டுத்தனமானது. ஒட்டு மொத்த புறநிலை யதார்த்தத்தைக் கணித்து வகுக்கப்படும் யுத்த தந்திரம், செயல் தந்திரங்கள் என்கிற கோர்வையான முழுமையான பார்வையும் நடைமுறையும் வைக்காது இந்த ஒரு அம்சத்தை மட்டுமே பார்த்து, புறக்கணிப்பது, பங்கேற்பது என்ற தயார்நிலை செயல்முறைகளை மட்டுமே பின்பற்றுவதும் வறட்டுத்தனமானது. லெனின் அவ்வாறுதான் செய்யச் சொன்னார் என்பது லெனினையே கொச்சைப்படுத்துவது.

● ***நடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழுவினர் (PWG), இ.க.க. (மா-லெ) - ரெசிஸ்டென்ஸ் குழுவினர் நடத்திய பொதுக் கூட்டத்தில் குண்டு வீசி 30 பேர் இறந்ததாகவும் மேலும் பல தாக்குதலை நடத்தியதாகவும் ரெசிஸ்டென்ஸ் ஆங்கிலப் பத்திரிக்கையில் வந்துள்ளது. இந்தச் சம்பவம் உண்மையா?***

**— சேகுவாரா இளைஞர் மையம், திருப்பூர்.**

★ ஆந்திராவில் (PWG) மக்கள் யுத்தக் குழுவினருக்கும், மார்க்சிய லெனினியக் குழுக்கள் எனச் சொல்லிக் கொள்ளும் வேறுபிற அமைப்புகளுக்கும் இடையே பகைமையான உறவு நிலவுவது உண்மைதான். அதன் காரணமாக ஒருவரை ஒருவர் தாக்கி அழித்துக் கொள்வதும் கூட சில சமயங்களில் நடந்திருக்கிறது. பீகாரிலும் சில குழுக்களிடையே இப்படி நடக்கிறது. இவை சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தவறாக அதாவது பகைமையானதாகக் கையாள்வதன் விளைவாகும். இது புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களைப் பின்னடைவுக்குள்ளாக்கும் தவறான நடைமுறையாகும் என நாம் கடுமையாக விமர்சிக்கிறோம். இம்மாதிரியான பகைமையான அணுகுமுறையின் காரணமாக ஒரு குழு மற்றதற்கு எதிராக உண்மைகளைத் திரித்தும், மிகைப்படுத்தியும் அவதூறு செய்வதும் நடக்கிறது. வாசகர் இக்கேள்வியில் குறிப்பிடுவதும் அப்படிப்பட்ட தவறான பத்திரிக்கைச் செய்திதான். அதே சமயம் அரசு இம்மாதிரியான பொய்ச் செய்திகளைத் திட்டமிட்டுப் பரப்பி புரட்சிகர, ஜனநாயக சக்திகளிடையே பகைமையை வளர்க்க முயலுவதையும் குறிப்பிட வேண்டும்.

**★ சோசலிச ரஷியாவில் தனியுடமை ஏன்?**

**★ வாக்களித்தவர்களின் கைகள் வெட்டப்பட்டதா?**

● *ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழு (PWG) கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டங்களில் (நிஜாமாபாத்) நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போது, ''வாக்குரிமை செலுத்தினால் கை வெட்டப்படும்'' என்று சுவரொட்டிகள் அக்குழுவால் ஒட்டப்பட்டிருந்ததாக என்னிடம் ஒரு ஆர்.எஸ்.எஸ்.அபிமானி புலம்பினார். தகவல் உண்மை என்றால் அது தவறுதானே?*

**— பட்டாபிராமன், கோடம்பாக்கம்.**



படிப்பகம்

www.padippakam.com

★ இது உண்மையான தகவல் அல்ல. அரசும், பத்திரிக்கைகளும் ஆர்.எஸ்.எஸ்.-ம் காங்கிரசும் மக்கள் யுத்தக் குழுவுக்கு எதிராகப் பரப்பும் அவதூறு - பொய்த் தகவல். ''வாக்குரிமை செலுத்தினால் கை வெட்டப்படும்'' என்பது ம.யு.குழுவின் முடிவாக இருந்தால் அதற்குள்ள பலத்தை வைத்து ஓரிரு இடத்திலாவது அவ்வாறு செய்திருக்க முடியும். ஆனால், அப்படி எந்தச் செய்தியும் இல்லை. இதே அவதூறுக்காரர்கள், ''ம.யு. குழு தேசிய முன்னணி - 'இடது' சாரி கூட்டை குறிப்பாக, தெலுங்கு தேசக்கட்சியை ஆதரிக்கிறது'' என்று பிரச்சாரம் செய்தார்கள். இப்படிக் ''கைவெட்டும்'' சுவரொட்டி போட்டுக் கொண்டே, ஒரு தரப்பை ஆதரிக்க முடியுமா? இரண்டுமே பொய்தான். இவற்றை மறுத்து ம.யு. குழு அறிக்கை வெளியிட்டது. அரசும், அரசியல் கட்சிகளும் தேர்தல் வேலைகள் செய்வதைதான் தடுக்கிறோமே தவிர மக்கள் வாக்களிப்பதைத் தடுக்கவில்லை என்று அக்குழு அப்போதே கூறிவிட்டது. ஆகவே ஆர்.எஸ்.எஸ். அபிமானியின் புலம்பலை நம்பத் தேவையில்லை. அயோத்தி கர சேவைக்குப்போன 300க்கு மேற்பட்ட ராம பக்தர்கள் கொல்லப்பட்டதாகவும், காஷ்மீரில் இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டதாகவும் புளுகுகிறார்களே அப்படிப்பட்டதுதான் இதுவும்.

● *தங்களால் அமெரிக்கக் கிறுக்கு என்று வருணிக்கப்படும் மக்கள் சக்தி இயக்கத்தின் தலைவர் திரு. எம்.எஸ்.உதயமூர்த்தி அவர்கள் நதிகளை இணைக்கக்கோரி இயக்கம் எடுக்கிறாரே அது சரியான ஒரு செயல்தானே? நாட்டிற்கு அவசியமான இந்த இயக்கத்தில் தங்களின் அமைப்புகளும் ஏன் கூட்டாகச் செயல்படக் கூடாது?*

— *ராமமூர்த்தி, திருவில்லிப்புத்தூர்*

★ கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், போதை மருந்து, எயிட்ஸ், ஓரின உல்லாச வாழ்வு என்று எல்லா வகைச் சீரழிவுகளின் தலைமையகமாக விளங்குகிறது அமெரிக்கா. இன - நிறவெறி, ஆக்கிரமிப்பு - யுத்தவெறியின் சின்னமாகவும் விளங்குகிறது. இக் காரணங்களால் பொருளாதாரம், தொழில் - முதலீடு - உற்பத்தி ஆகியவற்றிலும் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இராணுவ - ஆயுத பலம் கொண்டுதான் அமெரிக்க வல்லரசு முட்டுக்கொடுத்து நிறுத்தப்படுகிறது. இவற்றையெல்லாம் மூடி மறைத்து அமெரிக்கா உலகிலேயே நாகரிகம், ஜனநாயகம், பண்பாடு மிக்க, கடும் உழைப்பும் - செல்வச் செழிப்பும் மிக்க சொர்க்கபுரியாக விளங்குவதாகவும் அதன் மீது மோகம் கொள்ளும்படியும் சோ, மணியன், விகடன் பாலசுப்பிரமணியன் முதல் சங்கராச்சாரி வரை ஒரு பெரிய கும்பலே இங்கு பிரச்சாரம் செய்து வருகிறது. அந்தக் கும்பலின் முக்கிய புள்ளி உதயமூர்த்தி. நெய்வேலி, மதுரை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் சில மாதங்களுக்கு முன்பு உதயமூர்த்தி பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தினார். அவற்றில் அமெரிக்கர்கள் கடும் உழைப்பாளிகள், இந்தியத்

**★ எம்.எஸ்.உதயமூர்த்தியின் செயல் சரிதானா?**

**★ இலவசத் திட்டங்கள் சலுகையா? உரிமையா?**

தொழிலாளர்கள் சோம்பேறிகள் என்று பேசியது உட்பட பலவற்றின் மீது பு.ஜ. வாசகர்கள் கேள்விகள் எழுப்பினர்; எதற்கும் பதில் கூறாது ஓடிவிட்டார் உதயமூர்த்தி. இப்படிப்பட்ட அமெரிக்கக் கைக்கூலிதான் அவர் என்பதை மறந்துவிட்டு அவரது இயக்கத்தை அணுகவோ ஆதரிக்கவோ முடியாது.

இவை ஒருபுறம் இருக்க, நதிகளை இணைப்பது ஒரு நல்ல, வரவேற்கத்தக்க யோசனை. தொழில்நுட்பம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் போன்ற பலவற்றையும் ஆய்வு செய்து சரியான திட்டம் வகுத்து மக்கள் நலனுக்கானதாக அமுலாக்க வேண்டும். இவ்வளவு பெரிய திட்டத்துக்கு உழைக்கும் மக்களின் நிலப்பாடையும், அவர்களது மேற்பார்வை, நிர்வாகமும் வேண்டும். ஆனால் சுற்றுச் சூழலை நாசப்படுத்தி, பூர்வகுடி மக்களது வாழ்வைச் சூறையாடும் நர்மதா, தரி அணைத் திட்டங்களைப் போன்று உலக வங்கி, ஐ.எம்.எஃப். ஆகிய ஏகாதிபத்திய நிதி - திட்டமிடுதலின் கீழ், அவர்களின் நலனுக்காக நதிகளை இணைக்கும் நோக்கமுடையதுதான் உதயமூர்த்தியின் இயக்கம். இத்தகைய திட்டங்களால் நீர்வளம் செல்வச் செழிப்புப் பெருகுவதற்கு பதிலாக பல ஆஃப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகள் பாலைவனங்களாகப் பட்டுள்ளன. எனவே ஏகாதிபத்தியக் கைக்கூலியும், தேச விரோதியுமான உதயமூர்த்தியின் இயக்கத்துடன் நாம் எப்படிக் கூட்டாகச் செயல்பட முடியும்?

● *லெனின்,மார்க்ஸ் இவர்கள் மாபெரும் புரட்சியாளர்கள் தான். இவர்கள் கிருத்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் தானே? இவர்கள் மதச் சடங்கு, சாத்திரம், சாமி கும்பிடுவது போன்ற செயல்களை செய்து இருப்பார்களா?*

— *கே.அய்யாக்கண்ணு, ஊராங்கனி.*

★ இவர்கள் பிறப்பால் கிருத்தவர்கள் தாம். ஆனால், விவரம் தெரிந்ததில் இருந்தே கடவுள், மதம் ஆகியவற்றில் நம்பிக்கை வைக்கவில்லை. அவற்றுக்குப் புறம்பாகவும் எதிராகவும் இருந்தார்கள். மதச்சடங்கு - சாத்திரம், சாமி கும்பிடுவது போன்ற எதையும் பின்பற்றியது இல்லை. ஆனால், கிருஸ்துமஸ் — குழைந்தைகளின் கேளிக்கை - மகிழ்ச்சிக்குரிய மதச் சடங்குகளற்ற விழாவாகக் கொண்டாடுவதை எதிர்த்திடவில்லை. இவ்வாறு செய்த காலகட்டத்தை மறந்துவிட்டு, இதையே மத நம்பிக்கையுடன் செய்தார்கள் என்று கூறுவது தவறாகும். மேலும் வெறும் நாத்திகவாதப் பிரச்சாரத்தினால் கடவுள், மதம் ஆகியவற்றை ஒழித்துவிட முடியாது; சமூக, அரசியல் பொருளாதார, பண்பாட்டுப் புரட்சியின் மூலம் கடவுள், மதம் ஆகியவற்றின் மீது மக்கள் நம்பிக்கையற்றுப் போவதற்கான பொருளாயத நிலைமையை உருவாக்க வேண்டும் என்றும் அதை ஏற்படுத்தவும் வழிவகைகளைக் கண்டு போராடினார்கள்.

● *மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகியவை இணைந்து நடத்திய தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தின் போது, ''எச்சில் சலுகைகளுக்கு நாங்கள் மயங்கிட மாட்டோம்'' என்று வாசகம் எழுதினார்கள். ஆட்சிக்கு வருபவர்கள் வழங்கும் இந்தச் சலுகைகளைப் பெறலாமா? அந்தச் சலுகைகள் உரிமையா? அல்லது சலுகையா? அது யாருடைய சொத்தையும் நிதியையும் கொண்டது?*

— *எஸ்.செ.செம்மான், திருச்சி.*

★ உழைப்புக்கேற்ற ஊதியமும், கொடுக்கப்படாத சம்பளமாகிய போனசும், வேலைப் பாதுகாப்பு வசதிகளும் கோருவது உழைப்பாளியின் உரிமை. வேலைவாய்ப்பு, கல்வி வசதி போன்றவை வழங்குவது அரசின் கடமை என்கிற முறையில் கோரிப்பெறுவது உரிமை. ஆனால், மக்களை இல்லாமை, வறுமையில் தள்ளி இலவச உணவு, அரிசி, வேட்டி - சேலை என்று கையேந்த வைப்பது சலுகை. இவை அரசுச் சொத்து, நிதியைக் கொண்டுதான் வழங்கப்படுகின்றன என்றாலும் ஆட்சியாளர்கள் தம்மைப் பெரும் நிலப்பிரபுத்துவ கொடைவள்ளலாகக் காட்டி தானதர்மம் புரிபவர்களாகப் பாவித்து மக்களைக் கேவலமான வாழ்நிலைக்குத் தள்ளுகின்றனர். இப்படி இலவச - கவர்ச்சித் திட்டங்களை வைத்து ஏழை எளிய மக்களை ஏய்ப்பதைத்தான் நியாயமான கோபாவேசத்துடன் ''எச்சில் சலுகைகள்'' என்கிறோம். ''நமது மக்களின் வாழ்வைப் பறித்து நமது குழந்தைகளைத் தட்டேந்த வைத்துவிட்டார்களே!'' என்று சத்துணவுத் திட்டம் குறித்துப் பிரச்சாரம் செய்வதைப் போன்றதுதான் இது!


படியுங்கள்!

**காந்தியும் காங்கிரசும் - ஒரு துரோக வரலாறு**

இச்சிறு வெளியீடு வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கள்ளக் குழந்தையே காங்கிரசு என்பதை ஆதாரப் பூர்வமாக அறைந்து கூறுகிறது. 'அஹிம்சா மூர்த்தி' காந்தியின் அருவெறுக்கத்தக்க துரோகத்தைப் பளிச்சென படம் பிடித்துக் காட்டுகிறது.

*வெளியீடு:*
புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (RSYF)
தமிழ்நாடு

**மூன்றாம் பதிப்பு**

**விலை ரூ.2/-**

நூலை தபாலில் பெற விரும்புவோர் ரூ.2.50 மதிப்புடைய அஞ்சற்தலைகளை [Stamps] புதிய ஜனநாயகம் முகவரிக்கு அனுப்புக.


படிப்பகம்

www.padippakam.com

## குன்னூர்:

# போலீசு தாக்குதல்: அப்பாவிகள் பரிதவிப்பு


பாதிக்கப்பட்ட பெரிய மலைச்சாமி

தேனி - மதுரை சாலையில் வைகை நதி அருகில் உள்ள பஞ்சாயத்து கிராமம் குன்னூரில் வசித்துவரும் கேங் கூலித் தொழிலாளி பாலசாமியின் குடும்பம் சந்தித்த போலீசு தாக்குதல் இது. போலீசின் உண்மை முகத்தை மேலும் படம் பிடித்துக் காட்டுகிறது.

பால்சாமியின் இளைய மகன் சின்னமலைச்சாமி குடிபோதையில் இதே ஊரைச் சேர்ந்த இளங்கோ என்பவரிடம் 16.5.91 அன்று வாய்த் தகராறு செய்திருக்கிறார். இளங்கோ க.விலக்கு போலீசு நிலையத்தில் புகார் கொடுத்ததும் போலீசுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகி விட்டது. கள்ளச்சாராய மாமூலுக்கும், லஞ்சத்திற்கும் பெயர்போன க.விலக்கு போலீசு நிலைய எஸ்.ஐ.கௌதவன் சின்னமலைச்சாமியைத் தேடி குன்னூருக்கு வந்தார். வீட்டில் சின்னமலைச்சாமி இல்லாததால் பால்சாமி மற்றும் அவரது மனைவி மகள் ஆகியோரை சட்ட விரோதமாக இழுத்துச்சென்று போலீசு நிலையத்தில் வைத்தார். மீண்டும் போலீசு கும்பலுடன் ஊருக்குள் சென்று தெருவில் வருவோர் போவோர்களை, சாவடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தவர்களை எல்லாம் மிரட்டி விரட்டினார். ராணுவத்தில் பணிபுரியும் காமையன் ''ஏன் இப்படி அனாவசியமாக கலவரப்படுத்துகிறீர்கள்?'' என்று கேட்டதால் அவரை அடித்து உதைத்து இழுத்துப் போய் பெண்ணை கேலி செய்ததாக வழக்கு பதிவு செய்து, அபராதம் கட்ட வைத்தார், எஸ்.ஐ.கௌதவன்.

இந்நிலையில் பால்சாமியின் மூத்தமகன் பெரியமலைச்சாமி வெளியூர் சென்று உறவினர் ஒருவரிடம் குடும்பச் செலவுக்காக ரூ.5500 பணம் வாங்கிக் கொண்டு வீட்டிற்குள் வந்தார். அங்கு காத்திருந்த எஸ்.ஐ கௌதவன், உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறோம் வா எனக் கூறி இழுத்து வந்து போலீசு நிலையத்தில் அவரது பெற்றோர்கள் முன்பே அடித்தார். அவரிடம் இருந்த பணத்தை பிடுங்கி கொண்டதோடு கைகளில் விலங்கு மாட்டி ஏட்டு பொன்ராஜ் என்பவனும் எஸ்.ஐயும் மாறி மாறி தாக்கினர். ''ஐயா... என் பிள்ளை தப்பு செய்யாதவன்ய்யா... அடிக்காதீங்கய்யா...'' என்று கெஞ்சிய பால்சாமியையும் தாக்கினர்.

மறுநாள் காலையிலும் பெரிய மலைச்சாமியை தாக்கினர். அவரது ஆணுறுப்பில் பூட்ஸ்காலால் எஸ்.ஐ. எட்டி உதைத்தில் ரத்தம் கசிந்து பெரியமலைச்சாமி மயங்கி விழுந்த பிறகே அடிப்பதை நிறுத்தினர். பின்னர் பீதியடைந்த எஸ்.ஐ. அருகே உள்ள சீதாலெட்சுமி தனியார் மருத்துவமனையில் பெரியமலைச்சாமியை சேர்த்து சொந்த செலவிலேயே வைத்தியம் பார்த்தார்.

ஆனால், அதற்குப் பிறகும் சிகிச்சைப் பெறவேண்டியிருந்ததால் பெரியமலைச்சாமி தனது உறவினர் வீட்டில் தங்கி தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றிருக்கிறார். மீண்டும் ஒருநாள் நினைவிழந்து போனதால் மருத்துவமனையில் சேர்த்து சோதித்ததில் பின் பிட்டத்தில் அடிபட்ட காயத்தில் சீழ் வைத்திருப்பதும் நரம்புகள் பாதிக்கப்பட்டு இருப்பதும் தெரிய வந்தது. அவற்றை ஆபரேசன் செய்து சரி செய்தனர். பல நாட்கள் உணர்விழந்து கிடந்த பெரியமலைச்சாமிக்கு மூக்கு வழியாக ஆகாரம் தரப்பட்டது. பின்னர் ஓரளவு குணமடைந்ததும் வீடுதிரும்பி தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்.

போலீசு உயரதிகாரிகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும் தந்தி மூலம் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி இரண்டு மாதத்திற்கு மேலாக காத்திருக்கும் பெரியமலைச்சாமிக்கு இது வரை எவ்வித பதிலுமில்லை. போலீசிடம் பறிகொடுத்த ரூ.5500-ம் மருத்துவச் செலவுத் தொகை ரூ.6000/-ம் இழந்து நிற்கிறார்.

இதில் குறிப்பிட வேண்டிய விஷயம்: ஊரில் சிலர், புகாருக்கு உரிய சின்னமலைச்சாமியை போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். பெரியமலைச்சாமியை அடித்துக் கொண்டிருந்த எஸ்.ஐ. கௌதவனிடம் ''அய்யா... சின்னமலைச்சாமி இவன்தான்; அவன் பெரியமலைச்சாமி! அவனை அடிக்காதீங்க'' என்று கூறினர். அதிகார மமதையில் வெறிபிடித்திருந்த கௌதவன், ''இரண்டு பேரும் வெளியே போங்கடா இல்லை உங்களையும் உள்ளே தள்ளிடுவேன்'' என விரட்டினார்.

இதுவன்றி பெரியமலைச்சாமி குடும்பத்தினர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தடுப்பதற்காக பலவழிகளில் பணம் கொடுத்து சமாதானம் செய்ய முயன்றார் எஸ்.ஐ. ஆனால், பெரியமலைச்சாமி குடும்பத்தினர் வன்மையாக மறுத்து விட்டனர்.

போலீசின் பூட்ஸ் காலுக்கடியில் சிக்கி தவிக்கும் சாதாரண மக்களில் சிலர் இப்படி போலீசுக்கு எதிராக நின்று போராடவும் முன் வருகிறார்கள். அனுபவ ரீதியாக போலீசைப் பற்றி பாடம் கற்ற இவர்கள் நாளை இந்த மக்கள் விரோத கிரிமினல் கும்பலை வேரோடு அழிக்க கை உயர்த்துவது திண்ணம்.

**— தகவல் வி.வி.மு. தேனி வட்டாரம்.**

# நீதி கேட்டு தொடரும் போராட்டம்

உத்தமபாளையம் தாலுக்காவிலுள்ள பண்ணைபுரத்தில் தங்கம்மாள் என்ற இளம்பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள். கொலையாளிகளை ஊரே அறிந்திருந்தும் உள்ளூர் முக்கிய புள்ளி ஒருவர் இதில் சம்பந்தப் பட்டிருப்பதால் போலீசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் கொலையாளிகளுக்கே பாதுகாப்பு கொடுத்தது. இதை அம்பலப்படுத்தி ஏற்கனவே புதிய ஜனநாயகத்தில் எழுதியுள்ளோம்.

இப்பிரச்சினை தொடர்பாக குற்றவாளிகளை தண்டிக்க வி.வி.மு. பல வழிகளில் போராடியும் எவ்வித பலனுமில்லாததால் 21.7.91 அன்று கம்பம் நகரில் சாலை மறியல் போராட்டம் நடத்தியது. இதற்கான பிரச்சாரத்தை இடம், நேரம் அறிவிக்காமல் சுவரொட்டி, தட்டி மற்றும் தெருமுனைப் பிரச்சாரங்கள் மூலம் எடுத்துச் சென்றது. முதல் நாளே தோழர்களை கைது செய்வதற்காக தேடுதல் வேட்டை நடத்தியது போலீசு. கைது செய்ய முடியாமல் போகவே 21-ந் தேதி கம்பம் நகர் முழுவதும் போலீசை கொண்டு வந்து நிறுத்தி பதற்ற நிலையை உருவாக்கி பகுதிவாழ் மக்களைப் பீதியூட்டியது.

21-ந் தேதி கோட்டை மைதானத்தில் திட்டமிட்டபடி தோழர்கள் மறியலுக்காக கூடியிருந்ததை வேவு பார்த்து தெரிந்து சுற்றி வளைத்து கைது செய்தது. இதையறிந்த மற்ற இரு தோழர்கள் வேறு ஒரு இடத்தில் பேருந்துகளை மறித்து போராட்டம் நடத்தினார்கள். சிறிது நேரத்தில் அவர்களும் கைது செய்யப்பட்டனர். தோழர்களை பலவந்தமாக வேனில் ஏற்றி போலீசு கொண்டு சென்றபோது தோழர்கள் விண்ணதிர போட்ட முழக்கங்களால் இப் பிரச்சினை மக்கள் கவனத்திற்குச் சென்று நல்ல பிரச்சாரமாகியது. போலீசு, கைது செய்தவர்களில் 2 பேரை பார்வையாளர்கள் என விடுவித்து விட்டு 14 பேர் மீது வழக்குப் போட்டு 13 நாள் காவலில் வைத்தது.

மத்திய சிறையில் தோழர்கள் வட்டமாக நின்று 'கைதட்டி கூட்டம்' போட்டும், பாட்டுப் பாடியும் தமது கருத்துக்களை கைதிகள் மத்தியில் பிரச்சாரம் செய்தனர். சிறைக் காவலர், தோழர் மோகனை அழைத்து பாட்டுப் பாடக் கூடாது என எச்சரித்தார்; மிரட்டினார். ஆனால், தோழர்கள் பிரச்சாரத்தை தொடர்ந்ததால் பின்னர் லாக்கப்பில் அடைக்கப்பட்டனர். அங்கும், உணவு இடைவேளையின் போதும் தோழர்கள் தமது பிரச்சாரத்தை தொடர்ந்தனர். வேறு வழியில்லாமல் சிறைக்காவலர் எனக்குத் தான் பாதிப்பு வரும் என அழாத குறையாக மன்றாடி கேட்கவே பின் தோழர்கள் பிரச்சாரத்தை நிறுத்திக் கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# பா.ம.க.வின் சாதிவெறி சந்தி சிரிக்கிறது

*பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் அதன் தலைவர் டாக்டர் ராமதாசுவின் சாதி ஒழிப்பு மோசடி, தனிநபர் வழிபாடு, புரட்சி சவடால ஆகியவற்றை தொடர்ந்து அம்பலப்படுத்துவதாக சென்ற இதழில் எழுதியிருந்தோம். இதோ பா.ம.கட்சி ஒரு சாதி வெறிக் கூட்டணியே என்பதை அப்பட்டமாக அம்பலப்படுத்துகிறது இக்கடிதம். வன்னியர்களால் (இதில் பா.ம.கட்சியை சேர்ந்தவர்களும் அடங்குவர்) பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களில் ஒருவர் அரசு உயர் அதிகாரிகளுக்கும் தமிழக முதல்வருக்கும் அனுப்பிய மனுவின் உள்ளடக்கம் இது.*



ஐயா....

தென்னாற்காடு மாவட்டம் விருத்தாச்சலத்திற்கு அருகில் உள்ள க.எளமங்கலம் என்ற கிராமத்தில் வசிப்பவன் நான். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எனது பெயர் சாமிதுரை. எங்கள் ஊரில் வன்னிய குல ஷத்திரியர்களால் கட்டப்பட்ட மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் 24.6.91 அன்று நடந்தது. இவ்விழாவின் கூலி வேலைகளுக்கு நானும் எனது சமூகத்தைச் சேர்ந்த பத்தொன்பது பேரும் சென்றோம். கும்பாபிஷேகத்திற்குப் பின் 26.6.91 அன்று, செய்த வேலைக்கு கூலி வாங்க நான், சி.ரெங்கசாமி, வி.கலியன் மூவரும் சென்ற போது கோவிலில் பூசை நடந்து கொண்டிருந்தது. கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதால் நாங்கள் மூவரும் கோவிலுக்கு வெளியே நின்று சாமியை எட்டிப் பார்த்தோம். இதை கவனித்த வன்னிய முக்கியஸ்தர்களில் ஒருவரான அய்யாசாமி என்பவர் உள்ளே வந்து பார்க்கும்படி அழைத்ததால் நானும், ரெங்கசாமியும் சென்று சாமி கும்பிட்டோம். பூசை முடிந்த பிறகு நேரமாகி விட்டதால் நாளை வாருங்கள்; கூலி தருகிறோம் என கோவில் நிர்வாகிகள் கூறவே வீடு திரும்பினோம்.

சிறிது நேரத்திற்குப் பிறகு கோவில் தர்மகர்த்தாக்கள் எங்களை அழைப்பதாக ஆள் வரவே சென்றோம். மாரியம்மன் கோவிலுக்கு முன்னால் தர்மகர்த்தாக்கள் ஊர் பஞ்சாயத்தை கூட்டி வைத்திருந்தார்கள். தர்மகர்த்தா கே. சமரசம் (பாட்டாளி மக்கள் கட்சியின் கிளைச் செயலர்) என்பவர் எங்களிடம் "நீங்க ரெண்டு பேரும் கோவிலுக்குள் நுழைஞ்சதால் கோவிலு தீட்டாயிடுச்சு, சாமியும் கோயில்ல தங்காம போயிடுச்சுன்னு சாமிவந்து சொல்லியிருக்கு. அதனால் மறு கும்பாபிஷேகம் செய்யணும். அதுக்கு ஆவுற செலவு எல்லாத்தையும் நீங்கதான் ஏத்துக்கனும்" என்று சொன்னார். மேலும் எழுதமுடியாத வார்த்தைகளால் சாதியைச் சொல்லி திட்டி எங்களை அவமானப்படுத்தினார். வீ. விஜயபாண்டியன் மற்றும் கோ. தனஞ்செயன் (முன்னாள் நீதிமன்ற எழுத்தர்) ஆகியோரும் சமரசம் போலவே இடையிடையே தகாத வார்த்தைகளால் ஏசினர்.

நாங்கள் எவ்வளவோ மன்றாடியும், விழுந்து கும்பிட்டு கதறியும் ஏற்காமல் ரூ.2000/- ஐ அபராதமாக விதித்தனர். "இவ்வளவு பணத்தை எங்களால் எப்படி தர இயலும்? ஆளுக்கு 100 ரூ. தருகிறோம்" என்று கெஞ்சினோம். அப்பொழுது ஜெயராமன் என்ற ஆசிரியர் "பணமாக ஏதும் தரவேண்டாம்; நீங்கள் கோவிலுக்குள் நுழைந்ததால் ஏற்பட்ட தீட்டை, நீங்களே அய்யர் வைத்து கழித்து விடுங்கள்" என்று கூறவே அனைவரும் ஏற்றுக் கொள்ள பஞ்சாயத்து கலைந்தது.

மறுநாள் (27.6.91) காலை தர்மகர்த்தா சமரசத்திடமிருந்து ஆள் வரவே அவரைச் சென்று பார்த்தோம். சமரசம் அப்போது "என்னங்கடா ஐயருகிட்ட போவலாமா" என்று கேட்டதற்கு ஒத்துக் கொண்டோம். அதற்குள் கோவிந்த படையாச்சி என்பவர் "எல... ஐயருகிட்ட போனா உங்களால செலவு தாங்க முடியாது. அபராதம் ரெண்டாயிரத்துல, ஆயிரத்து ஐநூறு கொடுத்து விட்டு போங்கடா" என்றார். நாங்கள் ஒப்புக் கொள்ளாமல் ஒருமணி நேரத்துக்கு மேலாக மன்றாடினோம். அதன் பிறகு சமரசம் "இறுதியாக ரூ.1300 -ஐ கட்டி விட்டு போங்கடா. 3.7.91-க்குள் கட்டிவிட வேண்டும். இதை மீறினால் வெட்டிப் பொதைச்சிடுவோம்" என மிரட்டியதோடு கையிலிருந்த ரூ.100-ஐ அபராதத்திற்கு அட்வான்சாக பிடுங்கிக் கொண்டார்.

வறுமையில் உழலும் நாங்கள் பணத்தை இழந்து பரிதவிப்பதோடு எந்நேரமும் வன்னியர்களால் தாக்கப்படுவோமோ என்று செத்து செத்து பிழைக்கிறோம். ஆகவே, உடனே எங்களது உடமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பு அளிப்பதோடு எங்களை இழிபிறவிகள் என்றும் தீண்டத்தகாதவர்கள் என்றும் எங்கள் சாதியைச் சொல்லியும் ஏசிய சமரசம், விஜயபாண்டியன், தனஞ்செயன் ஆகியோர் மீது தீண்டாமை ஒழிப்பு பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன். இந்தப் புகார் நான் அனுப்பியது தெரிந்தாலே நாங்கள் பெரும் சங்கடத்துக்கு ஆளாக நேரிடும் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
**வி.சாமிதுரை,**
கிராமத்தலைவர்.
கா.எளமங்கலம், சாத்துக்கூடல்.
விருத்தாசலம் - 606110.
தெ.ஆ. மாவட்டம்

இப்புகார் மனு அனுப்பட்டதற்குப் பின் போலீசு பிரச்சினையில் தலையிட்டதும் சமரம் மற்றும் பிற வன்னியத் தலைவர்கள், தாங்கள் சமரசமாக செல்வதாகவும் வாங்கிய அபராதத் தொகை ரூ.100/- ஐ திருப்பி கொடுத்து விடுவதாகவும் கூறினர். ஆனால் இன்றும் அடிபட்ட வெறியில் தாழ்த்தப்பட்டவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று பொறுமிக் கொண்டிருக்கின்றனர்.

தாழ்த்தப்பட்டவர் மீதான இத்தகைய தாக்குதலை தலைமையேற்று நடத்திய சமரசம் மட்டும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவரல்ல; இவ்வூரைச் சேர்ந்த பி. ராமசாமி என்பவரும் பா.ம.க.வின் ஒன்றியத் தலைவர். இவர் என்ன செய்தார் தெரியுமா? தாழ்த்தப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை குறைக்கும்படி பஞ்சாயத்துக்கு சிபாரிசு செய்தார். பா.ம.க.வின் சமூகநீதி தத்துவம் இதுதானோ என்னவோ?

"தாழ்த்தப்பட்டவர்களில் ஒருவரைத் தான் முதல்வராக்குவோம்", "தாழ்த்தப்பட்டவர்களுடன் வன்னியர்கள் ஒன்றுபட்டு ஒரு புரட்சியையே (?) சாதித்து விட்டோம். "ஒடுக்கப்பட்டவர்கள். உரிமைப் பறிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்கக் கூடிய ஒரே கட்சி பா.ம.க.; ஒரே தலைவர் டாக்டர் ராமதாசு" - இவை பா.ம.க. மற்றும் 'தினப்புரட்சி'யின் வெடி முழக்கங்கள்! இவற்றையெல்லாம் சமரசம், பி.ராமசாமி போன்றவர்கள் அன்றாடம் புஸ்வாணமாக்கி விடுகிறார்களே!

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த 16 ஜூன் - 15 ஜூலை 91 (6 - 15/16) இதழில் பக்கம் 17-ல் "கோவை மத்திய சிறை: காக்கிச் சட்டைக் கைதிகள் என்கிற தலைப்பில் உள்ள கட்டுரையில் 'ஜெயிலர்' என்று வரும் இடங்களிலெல்லாம் 'வார்டர்' என மாற்றிப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அதேபோல் இக்கட்டுரையின் இரண்டாவது பத்தியில் 11 வது வரியில் "இப்படி சடையன் என்ற கைதி தட்டிக் கேட்டார் என்பதால் பாளையங்கோட்டை சிறையிலிருந்து மாற்றியதோடு..." என்று இருக்க வேண்டும். "சிறைக்கு" என மாறி அச்சேறியுள்ளது.

மேற்கண்ட தவறுகள் கவனக் குறைவின் காரணமாக நிகழ்ந்துள்ளமையை எண்ணி வருந்துகிறோம். இனி எச்சரிக்கையுடன் செயல்பட உறுதியளிக்கிறோம்.

— ஆசிரியர் குழு.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா.சன்முகராசு, 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் தெரு, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com



படகில் துருவித் துருவி எதைத் தேடுகிறது போலீசு? மண்ணெண்ணெய், பெட்ரோல், அரிசி, சர்க்கரை... முதலியவற்றைத்தான்! தமிழகத்திலிருந்து இப்பொருட்களையெல்லாம் இலங்கைக்கு கடத்துகிறார்களாம். அதை தடுக்கும் வேட்டை இது. ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு உணவுப் பொருட்கள் எரிபொருட்கள் எதுவும் கிடைப்பதில்லை. கிடைக்கும் சிறிதளவு பொருளும் அவ்வளவு விலை கொடுத்து எல்லோராலும் வாங்க முடிவதில்லை. ஈழத் தமிழ் சகோதரிகளும் சகோதரர்களும் பிஞ்சு குழந்தைகளும் வயிற்றில் ஈரத் துணியைக் கட்டிக் கொண்டு கடுமையான யுத்தத்தில் ஊடே உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பாசிச பிரேமதாசா அரசினால் முற்றுகையிடப்பட்டு எவ்வித அத்தியாவசியப் பொருளும் கிடைக்காமல் அவதிப்படும் ஈழத் தமிழ் மக்களுக்கு உதவி செய்ய மறுக்கிறது. இந்திய - தமிழக அரசு. தமிழகத்திலிருந்தும் அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காதபடி செய்து அவர்கள் மீது மறைமுகமாக சிங்கள அரசைப் போலவே அடக்குமுறையை ஏவுகிறது. வாழப்பாடி - ஜெயலலிதா - சோ கும்பல் போடும் கூச்சலுக்கிணங்க இந்திய அரசு கடற்கரையோரங்களில் காவலை மேலும் மேலும் பலப்படுத்தி வருகிறது.

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ அமீனா எனும் 10 வயதே உடைய இச் சிறுமலர், ஹைதராபாத்திலிருந்து மொஹம்மது சாகிஸ் எனும் 60 வயது ஷேக்கால் அரேபியாவுக்கு கடத்தப்பட்டு காப்பாற்றப்பட்டாள். அமீனாவின் தந்தை, ஒரு ரிக்ஷா தொழிலாளி. இவருடைய வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு அமீனாவை விலைக்கு வாங்கினான் அந்த அராபியக் கிழவன். ஐந்தாவது படித்துக் கொண்டிருந்த அமீனா ஒருநாள் பள்ளியை விட்டு வந்ததும் ஒன்றுமே புரியாமல் பேந்தப் பேந்த விழிக்க மணமுடித்து மனைவி ஆக்கிக் கொண்டான். அமீனாவை அரேபியாவுக்கு கடத்திய பொழுது, விமான நிலையத்தில் போலீசால் கைது செய்யப்பட்டான். இன்று வக்கீல் வைத்துக் கொண்டு, 'முஸ்லீம் மத சட்டப்படி தனது திருமணம் செல்லும்; சட்ட விரோதமானதல்ல' என வாதாடி சட்ட ஓட்டைகளுக்குள் தப்பிக்க முயன்று வருகிறான். அரசின் கண்களுக்கு 'அதிர்ஷ்டவசமாக' சிக்கிய கடத்தல்களில் ஒன்றுதான் இது. எண்ணற்ற சம்பவங்கள் இதுபோன்று அன்றாடம் நடக்கின்றன. சிறு குழந்தைகளை இந்தியாவிலிருந்து கடத்திப் போய் சௌதியில் குதிரைமீது கட்டி ஓடவிட்டு அவர்கள் பயந்து கதறியழும் காட்சியை ரசிக்கிறார்கள் 'ஷேக்'குகள். இக்குழந்தைகளை தமது வீட்டு வேலைகளுக்கு மட்டுமல்லாமல் தமது வக்கிரமான காமவெறிக்கும் உட்படுத்துகிறார்கள். கடத்தப்பட்ட சிறுமிகள் பெரியவர்களானதும் விபசாரத்திற்காக சந்தையில் விற்கப்படுகிறார்கள். துபாய், சௌதியில் பணக்கார ஷேக்குகளுக்கு தேவையான சிறார்களையும் பெண்களையும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து கடத்தி சப்ளை செய்வதை தொழிலாகக் கொண்டுள்ளன, பல கிரிமினல் கும்பல்கள்.

இன்று நேற்றல்ல; பல வருடங்களாக நடந்து வரும் இக் கொடுமையை - கடத்தலை - தடுக்க வக்கற்ற ஆட்சியாளர்கள், இப்பொழுது ஈழ மக்களுக்கு செல்லும் உதவிப் பொருட்களை தடுப்பதில் மட்டும் பிரத்யேக கவனம் செலுத்துகிறார்கள். இதில் மட்டும் அப்படியென்ன இவர்களுக்கு அக்கறை? கடத்தலை ஒழிப்பதல்ல இவர்களது நோக்கம்; ஈழமக்களின் நியாயமான உரிமையும் - போராட்டமும் எந்த விதத்திலும் வளர்ந்துவிடக் கூடாது; நிராதரவற்றவர்களாக்கி மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்பதுதான் இந்திய ஆட்சியாளர்களின் குறிக்கோள். கேடு கெட்ட இந்த ஆளுங்கும்பல் இன்னும் நீடிக்கலாமா?



படிப்பகம்